janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi




புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 84 | 2022 ஜனவரி 02 - 08 | விலை: ரூ.10 | 20 பக்கங்கள் | இதழ் 39




**வர்க்கமற்ற, சாதியற்ற...**

96 ஆண்டுகளுக்கு முன்பு, 1925ம் ஆண்டு டிசம்பர் 26ம் நாள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி >>>

ப 10



**வாக்குரிமை நமது பிறப்புரிமை**

உருமாறிய ஒமைக்காரன் நோய்த் தொற்றுப் பரவல் அச்சுறுத்துவதால் உத்தரபிரதேச மாநில சட்டமன்ற தேர்தலை தள்ளி >>>

ப 03



**பெண்களின் திருமண வயதை சட்ட ரீதியாக உயர்த்தக் கூடாது**

சென்ற இந்திய விடுதலை நாள் நிகழ்ச்சியில் சொற்பொழிவாற்றிய பிரதமர் மோடி, “மத்திய அரசு, நமது சகோதரிகள் >>>

ப 09



## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 97வது ஆண்டு துவக்கம்

### இரா.நல்லகண்ணு பிறந்த நாள் | கே.டி.கே. தங்கமணி நினைவுநாள்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்பு

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 97வது அமைப்பு தினம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணுவின் 97 ஆவது பிறந்தநாள் விழா, கே.டி.கே. தங்கமணியின் நினைவு தினம் ஆகியவை சென்னை தி.நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகமான பாலன் இல்லத்தில் கொண்டாடப்பட்டது.**

நிகழ்ச்சிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் தலைமை தாங்கினார். இரா. நல்லகண்ணு கட்சி கொடி ஏற்றினார். கே.டி.கே.படத்திற்கு ஏஐடியூசி பொதுச் செயலாளர் அமர்ஜித் கவுர் மலர்தூவி மரியாதை செய்தார். ஜனசக்தி சிறப்பிதழை இரா.நல்லகண்ணு வெளியிட தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் சி.மகேந்திரன் பெற்றுக் கொண்டார். ஜனசக்தி காலண்டரை அமர்ஜித் கவுர் வெளியிட ஜனசக்தி ஆசிரியரும், கட்சியின் மாநிலத் துணைச் செயலாளருமான கே.சுப்பராயன் எம்.பி., பெற்றுக் கொண்டார். விழாவில் அமர்ஜித் கவுர் சிறப்புரையாற்றினார் அவரது உரையை மாநில செயற்குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி மொழியாக்கம் செய்தார். தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி.எச்.வெங்கடாச்சலம், மாநில துணைச் செயலாளர் மு.வீர பாண்டியன், பொருளாளர் எம்.ஆறுமுகம், மாநில செயற்குழு உறுப்பினர்கள் ந.பெரியசாமி, பி.பத்மாவதி மற்றும் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்கள், தென்சென்னை, வட சென்னை, மத்திய சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் பெருமளவில் பங்கேற்றனர்.

தமிழக முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் நேரில் வருகை தந்து இரா.நல்லகண்ணுவுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து சால்வை அணிவித்து மரியாதை செய்தார்.

நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.கே.எஸ்.இளங்கோவன், தமிழச்சி தங்க பாண்டியன் காங்கிரஸ் சார்பில் திருநாவுக்கரசர், மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கே.பாலகிருஷ்ணன், டி.கே.ரங்கராஜன், தமிழ்மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன், வி.சி.க. தலைவர் தொல். திருமாவளவன், சிந்தனை செல்வன், வன்னியரசு, மற்றும் ஓவியர் மருது, நக்கீரன் கோபால் உள்ளிட்ட ஏராளமானோர் இரா.நல்லகண்ணுவை சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்துக் கூறினர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின்

முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது, “மக்களுக்கும், பாட்டாளி வர்க்கத்திற்கும், நாட்டிற்காகவும் இளைஞரைப் போல் பாடுபட கூடியவர் நல்லக்கண்ணு. அவரை நாங்கள் இளைஞராகவே பார்க்கிறோம். நல்லகண்ணு

தொடர்ச்சி 5ம் பக்கம் >>



# ‘தமிழ்நாட்டை போன்று இந்திய அளவில் பாஜகவிற்கு பாடம் புகட்ட வேண்டும்’

## தா.பாண்டியன் படத்திறப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை

**மறைந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தா.பாண்டியன் உருவப்படம் திறப்பு விழா சென்னை பெரியார் திடலில் டிச.27 அன்று நடைபெற்றது. விழாவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் தலைமை தாங்கினார். விழாவில், தா.பாண்டியன் உருவப்படத்தை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவரான இரா.நல்லக்கண்ணு திறந்து வைத்தார்.**

### முதல்வர் மு.க.ஸ்டாலின்

தோழர் தா.பாண்டியன் என்றாலே, தலைதாழாத பாண்டியன் என்றுதான் பொருள். எப்போதும், யாருக்கும், எந்தச் சூழ்நிலையிலும் அஞ்சாத பாண்டியனாகத்தான் அவர் வாழ்ந்திருக்கிறார். கடந்த பிப்ரவரி மாதத்திலே மதுரையில் நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநில மாநாடு. அந்த மாநாட்டிலே நானும் பங்கேற்றேன். நிறைவுரையாற்றக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அந்த மேடையில் பேசும்போது, “சோவியத் ஸ்டாலின் இல்லாமல் கம்யூனிசத் தத்துவம் எப்படி இருக்க முடியாதோ, அதேபோல இந்த ஸ்டாலின் இல்லாமல் கம்யூனிஸ்ட் மாநாடு நடக்காது என்கிற உணர்வோடு இந்த மாநாட்டிற்கு என்னை அழைத்திருக்கிறீர்கள். அந்த அழைப்பை ஏற்று நானும் அதில் பங்கேற்றுப் பேசியிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இருக்கக்கூடிய நட்பு, அது வெறும் நட்போ, தோழமையோ மட்டுமல்ல, நாம் ஒரே குடும்பம். அதுவும் சாதாரணக் குடும்பமல்ல, கொள்கை குடும்பம். அந்தப் பாச உணர்வோடுதான் நான் பேசினேன். இந்த உணர்வு என்பது இன்று நேற்று ஏற்பட்ட உணர்வு அல்ல. இரண்டு இயக்கங்களும் தோன்றிய காலத்தில் இருந்து உருவான உணர்வு!” என்று நான் அந்த மாநாட்டிலே குறிப்பிட்டுச் சொன்னேன்.

அதோடு, “பாசிச பா.ஜ.க.வுக்கும், அடிமை அ.தி.மு.க.வுக்கும் பாடம் புகட்டும் தேர்தல் வர இருக்கக்கூடிய தேர்தல்” என்று குறிப்பிட்டுச் சொன்னேன். நம்முடைய ஆசிரியர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்.

இது படம் மட்டுமல்ல. பாடம்

தொடர்ச்சி 12ம் பக்கம் >>

## பொது வேலை நிறுத்தம்

# தமிழ்நாட்டில் பெருவெற்றி பெறட்டும்!




## ஏஐடியுசி பொதுச் செயலாளர் அமர்ஜித் கவுர் உரை!

**டிசம்பர் 27ம் தேதியன்று, சென்னை பாலன் இல்லத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 96வது அமைப்பு தினம், தோழர் இரா.நல்லகண்ணு அவர்களின் பிறந்த தினம் ஆகியவை கொண்டாடப்பட்டன. தோழர் கேடிகே தங்கமணி நினைவு தினம் என்பதால் அவர் படத்துக்கு மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.**

பின்னர் ஏஐடியூசி மாநிலக்குழு தோழர்கள் மற்றும் செயல்வீரர்கள் கூட்டத்தில் ஏஐடியுசி பொதுச் செயலாளர் அமர்ஜித் பேசினார்.

பாசிஸ சக்தியோடு சேர்ந்து நின்று அவர்களது கட்டளையை ஏற்று அமல்படுத்திக் கொண்டிருந்த பழைய அரசை நீக்கி, தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில், புதிய அரசை நிர்மாணித்ததற்காக உங்கள் அனைவருக்கும் பாராட்டுகளை, வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

உத்தர பிரதேசம், உத்தரகாண்ட் உள்ளிட்ட 5 மாநில தேர்தல்கள் வரப்போகின்றன. பல விழாக்களில் பேசிவரும் நமது பிரதமர், அவரது பதவிக்கு தகுந்ததாக மட்டுமல்ல ஒரு மனிதனுக்குப் பொருந்தாத தரம் தாழ்ந்த வகையில் பேசிக்கொண்டிருக்கிறார்.

முதலாவது பிரதமர் முதல் இப்போது இருக்கும் பிரதமர் வரை, நாம் என்ன கேட்கிறோம்! இந்த நாட்டின் செல்வத்தை உற்பத்தி செய்தவர்களுக்கு, அதற்குரிய பங்கு போய்ச்சேர வேண்டும். அவர்களது வாழ்க்கைத் தரத்தை உத்தரவாதப்படுத்த வேண்டும். குழந்தைகளுக்கு கல்வியும், பெரியவர்களுக்கு உடல் நலமும், வாழ்க்கையை நடத்துவதற்கான போதிய ஊதியமும், பணியிடத்தில் பாதுகாப்பும், சமூகப்பாதுகாப்பும், நம்பிக்கையூட்டும் எதிர்காலமும் வேண்டும் என்பதைத் தவிர, நமக்கு வேறு கோரிக்கைகள் இல்லை.

நாடு மேம்பாடு கண்டிருக்கிறது. ஆனால் அதற்காக உழைத்தவர்களுக்கு உரிய பங்கு கிடைக்கவில்லை. ஏற்கனவே போராடிப் பெற்ற உரிமைகளையும் முடக்கி வைக்க அரசு முயற்சிக்கிறது

அரசாங்கம் ஏராளமான அந்நியச் முதலீட்டை கொண்டு வந்து குவித்துள்ளதாக மார்தட்டிக் கொள்கிறது. ஆனால் இதுவரை வந்துள்ள அந்நிய முதலீடு 50 லட்சம் கோடி ரூபாய்தான். ஆனால் இந்தியாவின் கடன் ஒரு 130 லட்சம் கோடி ரூபாய் ஆகும். மோடி ஆட்சியில் மட்டும் இந்தியாவின் கடன் இரண்டு மடங்காக அதிகரித்திருக்கிறது

தேசிய பணமாக்கல் திட்டம் என்பது பெரும் ஏமாற்று வித்தை. என்னுடைய வீட்டுக்கு அவர்கள் வருவார்களாம். அமர்ஜித் இது உங்களுடைய வீடுதான் என்று சொல்வார்களாம். அதற்கான பத்திரத்தையும் காட்டுவார்களாம். அப்புறம் என்னை வெளிய அனுப்பி விட்டு, அவர்கள் அந்த வீட்டிலிருந்து வாழ்க்கை நடத்துவார்களாம். நான் 90 வருடம் கழித்து அவரிடமிருந்து அந்த வீட்டை திரும்ப பெற்றுக்கொள்ளலாமாம்!

இன்னும் 90 ஆண்டுகளுக்குப் பின்பு அந்த வீட்டை வாங்கிக் கொள்ள நான் இருப்பேனா? அந்த வீட்டில் குடிபுகுந்தவர்தான் இருப்பாரா? அத்தனை ஆண்டுகள் கழித்து அந்த வீடே இருக்குமா!

இதுதான் பிரச்சனை. ஒருவருடைய வீடு என்னும் போது நமக்கு உள்ளம் பதைக்கிறது. ஆனால் இந்த நாட்டின் பொதுச் சொத்துக்கள் அனைத்தையும் இவ்வாறுதான் குத்தகை என்ற பெயரில் கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு மோடி அரசு இலவசமாக எடுத்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. கேட்டால் அது இன்னும் இந்திய அரசின் சொத்துக்கள்தான் என்று பதில் கூறுவார்கள்!

**நாட்டைச் சீரழிப்பதை நாம் மறுத்துப் பேசினால், 'தேச விரோதிகள்', 'வளர்ச்சிக்கு விரோதமாக இருப்பவர்கள்', பத்தாம் பசலிகள் என்று முத்திரை குத்துவார்கள். தேசம் என்பது ஒரு மனிதனோ, ஒரு கட்சியோ, ஏன் அந்த நாட்டின் அரசோ கூட அல்ல. அது இவற்றை விட மிகப் பெரியது. நமது நாட்டின் மலைகள், கடல்கள், ஆறுகள், வயல்வெளிகள், மக்கள், விலங்குகள், உயிரினங்கள், நமது சகோ தரத்துவம், அழகான பன்மைத்துவம், ஏராளமான மொழிகள், பல்வேறு பண்பாடுகள் எல் லாம் சேர்ந்தது தான் இந்திய நாடு. இந்த நாட்டை சீரழிக்கும் கொள்கைகளைக் கொண் டுள்ள மோடியையும், அவரது அரசையும் எதிர்த்தால் அது எப்படி தேச விரோதமாகும்?**

மக்கள் தமக்கு பிடித்ததைப் பேசவும், எழுதவும், தனது கருத்தை பொதுவெளியில் வைக்கவும், சங்கமாகச் சேரவும், பொது நலனை முன்னிறுத்திப் போராடவும், தனக்குப் பிடித்த மதத்தைச் சார்ந்து இருக்கவும், அதற்குரிய வழிபாடுகளில் ஈடுபடவும், தனக்கு பிடித்ததை உண்ணவும், உடுத்தவும், உரிய வழிவகை காண் பது தான் ஜனநாயக வழிப்பட்ட வாழ்க்கை முறையாகும். இதில் ஒருவர் சுதந்திரத்தில் மற்றவர் தலையிட்டு முரண்பாடு ஏற்படாமல் பார்த்துக்கொள்வது தான் அரசின் வேலையாக இருக்க வேண்டும். ஒரு சார்பு நிலை எடுத்து, அதனை மறுப்பவர்களை அழிப்பது, ஜனநாயக நடைமுறை அல்ல.

மோடி அரசுக்கு கூட்டரசு தத்துவத்தின் மீது நம்பிக்கை எதுவும் இல்லை. நிலம் என்பது முழுக்க முழுக்க மாநிலம் சார்ந்த பிரச்சனை. ஆனால் மூன்று வேளாண் சட்டங்களை எந்த மாநில அரசையும் கலந்துகொள்ளாமல் மோடி அரசு கொண்டு வந்தது. அதை விவசாயிகள் போராடி முறியடித்தனர். தொழிலாளர் என்பது மத்திய மாநில அரசு இரண்டுக்கும் பொதுவான துறைதான். ஆனால் மாநில அரசுகளை கலந்து கொள்ளாமலேயே 29 சட்டங்களை நசுக்கி, 4 சட்டத் தொகுப்புகளாக ஒன்றிய அரசு மாற்றியிருக்கிறது.

12 அம்ச கோரிக்கைகளில், என்னுடைய தொழில் அல்லது துறையின் கோரிக்கை இடம் பெறவில்லை என்று எண்ணுவது தவறு. ஒட்டுமொத்த தொழிலாளர்களும் உரி மைகளும் பாதிக்கப்படும்போது, ஒரு தனி தொழிற்சாலைக்கு அல்லது துறைக்கு மட்டுமே நன்மைகள் கிடைக்க இம்மியளவும் வாய்ப்பில்லை. இப்போது 90 சதவீத தொழிலாளர்கள் சட்டப் பாதுகாப்பு இல்லாமல் தான் இருக்கிறார்கள். நிரந்தரத் தொழிலாளர்கள், தமது உரிமைகளை மட்டும் பார்த்துக் கொண்டால் போதுமானது என்ற முடிவுக்கு வந்தால், தினக்கூலி, காண்ட்ராக்ட், வெளிச்சந்தைத் தொழிலாளர்களை நிரந்தரத் தொழிலாளர்களுக்கு எதிராகச் செல்லும் நிலைக்கு அவர்களைத் தள்ளுகிறோம் என்றே பொருள்.

தொழிற்சங்கத்தைப் பதிவு செய்வதும், பதிவைப்பாதுகாப்பதும் கடினமாக்கப்படுகிறது. நேரடி பேச்சுவார்த்தைகளை நடத்த முடியாது; சமரச பேச்சுவார்த்தைகள் பலன் தராது என்ற நிலை உருவாக்கப்படுகிறது.

நான்கு சட்டத் தொகுப்புகளும் அரசிதழில் வெளியிடப்பட்டு விட்டன. ஆனால் அவற்றுக்கான விதிகளை ஒவ்வொரு மாநிலமும் உருவாக்க வேண்டும். இன்னும் சில மாநிலங்கள் அவற்றை வரையறுத்துத் தரவில்லை. புதிய சட்டத் தொகுப்புகள் இன்னும் அமலாக்கப் படவில்லை என்றாலும், அவற்றில் உள்ள பாதிப்புகள் அனைத்தையும் இப்போதே முதலாளிகளும், மாநில அரசுகளும் சேர்ந்து நடைமுறைப்படுத்த தொடங்கிவிட்டன

கொரானா காலத்தில் ஏராளமான தொழிலாளர்கள் மின்சாரம், உருக்குத் தொழிற்சாலைகள், சுரங்கங்கள், பாதுகாப்புத்துறை தொழிற்சாலைகளில் பணி புரிந்த ஏராளமான பேர் இறந்துவிட்டார்கள். 1700 வங்கி ஊழியர்கள் இறந்தார்கள். நிறைய மருத்துவர்களும், செவிலியர்களும், மருத்துவ ஊழியர்களும், ஆஷா, அங்கன்வாடி பணியாளர்களும் பொதுமக்களுக்காகப் பணி புரிந்ததால் உயிரிழந்திருக்கிறார்கள். சாதாரண மக்கள் வேலை இழந்து கடும் துன்பத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள்.

சின்னஞ்சிறு வங்கதேசம், பொது முடக்கத்தை செயல்படுத்துவதற்கு முன்பு, மூன்று நாள் அவகாசம் தந்தது. தென்னாப்பிரிக்கா 4 நாள் அவகாசம் தந்தது. ஆனால் இவ்வளவு பெரிய இந்தியாவில், இரவு அறிவித்து மறு நாள் காலையிலேயே அமுலாக்கத் தொடங்கினார்கள். நாள் ஒன்றுக்கு இரண்டரை கோடி மக்களை ஏற்றிச் செல்லும் ரயில்வே நிறுத்தப்பட்டது. வெவ்வேறு மாநிலங்களில், மாவட்டங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் தமது ஊருக்கு திரும்ப முடியவில்லை. ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்கள் தொலைவிற்கு வெறும் காலால் நடந்து, தங்களுடைய உடமைகளையும் குழந்தைகளையும் தூக்கி கொண்டு பயணம் செய்த காட்சி கல்நெஞ்சக்காரர்களையும் கூட உலுக்கக் கூடியது.

மாநிலங்களின் எல்லைகள் மூடப்பட்டன. ஏதோ இந்தியசீன எல்லை போல, இந்திய பாகிஸ்தான் எல்லை போல மாநில எல்லைகள் மாற்றப்பட்டன. நடந்து களைத்த தொழி லாளர்கள், மாநிலங்களுக்குள் நுழைய முடியாததால், வீட்டுக்கு செல்லவும் முடியாமல், பணியிடத்துக்கு திரும்பவும் முடி

>> தொடர்ச்சி 03ம் பக்கம்





# வாக்குரிமை நமது பிறப்புரிமை...

நா.பெரியசாமி

**"உருமாறிய ஒமைக்காரன் நோய்த் தொற்றுப் பரவல் அச்சுறுத்துவதால் உத்தரபிரதேச மாநில சட்டமன்ற தேர்தலை தள்ளி வைக்க வேண்டும்" என அலகாபாத் உயர்நிதிமன்றநீதிபதி ஒருவர், தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

சிலநாட்களுக்கு முன்புநாடாளுமன்றத்தில் வாக்காளர் அடையாள அட்டைகளுடன் ஆதார் விபரங்களை இணைக்க வேண்டும் என்ற சட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது. இதில் எதிர்கட்சிகளின் ஆலோசனைகள் ஏற்கப்படவில்லை. இது போன்ற நிகழ்வுகளால் நமது வாக்குரிமை, நாடாளுமன்றத்தையும், சட்டமன்றங்களையும் அமைக்கவும், ஒரு கட்சியை மாற்றி, மற்றொன்றை தேர்வு செய்யவும் குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஜனநாயக உரிமைகள் நீடிக்குமா ? என்ற வினா எழுகிறது.

அரசியலமைப்பு அதிகாரம் பெற்ற மத்திய கணக்கு தணிக்கை குழுத் தலைவரின் தணிக்கைக் குறிப்புகள், அப்போதைய எதிர்கட்சியின் அரசியலுக்கு ஆதரவாக செயல்பட்டதையும், ஆட்சி மாறிய பிறகு குறிப்பு எழுதிய கரங்களுக்கு சலுகைகள் வழங்கி , பொறுப்புகளில் அமர்த்தப்பட்டதையும் மறந்து விட முடியாது.

இந்த "மகானுபாவர் " தான் ரஃபேல் போர் விமானங்கள் வாங்கிய வியாபாரக் கணக்குகள் குறித்த அறிக்கை தயாரித்துக் கொடுத்து ஆளும் தரப்பின் எண்ணிக்கை பலத்தால் முடிவுக்கு கொண்டு வர உதவியவர் என்பதையும் சேர்த்துப் பார்க்க வேண்டும்.

நாட்டின் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிகளாக பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் அதன் மாண்பை பலியிட்டு, பதவிகள் பெற்று, ஆதாயம் அடைந்ததையும் நாடு நினைவில் வைத்துள்ளது.

அரசியல் அமைப்பின் அதிகாரம் பெற்ற, தன்னாட்சி அதிகாரம் கொண்ட தேர்தல் ஆணையம் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்த போதும் அதன் இறையாண்மையை இழந்து விடவில்லை. ஒரு தேர்தல் ஆணையர், அரசின் அத்துமீறல் அழுத்தத்துக்கு பணிய மறுத்ததால் அவரும், அவரது குடும்பத்தினரும் சந்தித்த அடக்குமுறைகள் நினைவுக்கு வருகின்றன.

இவரும் இவரது குடும்பத்தினரும் நாட்டின் ஜனநாயக மாண்பை காத்த பெருமை கொண்டவர்கள். ஆனால் " பெகசாஸ்" என்ற வேவுபார்க்கும் செயலியால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருபவர்கள். எந்த நேரத்தில் என்ன நிகழுமோ ! என்ற அச்சுறுத்தலோடு வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

பெகசாஸ் செயலியில் எதிர்கட்சித் தலைவர்கள், உச்ச நீதிமன்ற நீதிபதிகள், அர சின் கொள்கையோடு உடன்படாத உயர் அதிகாரிகள் என பலர் கண்காணிக்கப் படுவதற்கு யார் உத்தரவிட்டது? இந்த வினாவிற்கு இன்னும் விடை கிடைக்கவில்லை.

கடந்த 2018 ஜனவரி 12 ஆம் தேதி உச்ச நீதிமன்ற மூத்த நீதிபதிகள் செய்தியாளர் மூலமாக " நாட்டின் ஜனநாயக வாழ்வை பாதுகாக்கும் பொறுப்பை மக்களுக்கு நினைவூட்டினார்கள்" அந்த செய்தியாளர்கள் சந்திப்பில் 56 இஞ்ச் மார்பு அகலம் கொண்ட மாவீரரின் ஆட்சியில் " உச்சநீதிமன்றத்தில் அரசியல் தலை யீடுகள் அதிகரித்து வருவதாக" கவலையை பகிர்ந்து கொண்டனர்.

அமலாக்கத்துறை, மத்தியப் புலனாய்வுத் துறை, வருமான வரித்துறை, தேசிய புலனாய்வு முகமை என அமைப்புகளிலும் அரசியல் தலையீடுகள் அதிகரித்து வருவதை பல அறிஞர்கள் ஆதாரத்துடன் வெளியிட்டு வருகின்றனர்.

இந்தச் சூழலில்தான் அலாகாபாத் உயர் நீதிமன்றத்தின் மாண்பமை நீதிபதி , தேர்தலை தள்ளி வைக்க வேண்டும் என்கிறார். இதற்கு "ஒமைக்ரான் " நோய் தொற்றின் உதவியை நாடியுள்ளார்.

உத்தரப் பிரதேசத்தில் இரண்டு நபர்களுக்கு மட்டுமே ஒமைக்ரான் நோய்த் தொற்று கண்டறியப்பட்டிருந்த நிலையில் நீதிபதி இரண்டு மாதங்களுக்கு தள்ளி வைக்க வேண்டும் என முறையிடுகிறார்.

இதனையொட்டி உத்தரப்பிரதேசம் மாநிலம் முழுவதும் பொதுக் கூட்டங்கள், பேரணிகளுக்கு உடனடியாக தடை விதிக்க வேண்டும் என மன்றாடிக் கேட்கிறார்.

**<u>மக்கள் நலனில் அக்கறை காட்டும் நீதிபதி யின் உணர்வு மதிக்கத்தக்கது. ஆனால் அவரது முன்மொழிவு பேரபாயம் கொண் டது. ஜனநாயக வாழ்வுக்கு முடிவு கட்டுவது</u>**

அலகாபாத் உயர்நீதி மன்ற நீதிபதியின் வேண்டுகோள் குறித்து தேர்தல் ஆணையரிடம் கருத்துக் கேட்ட போது, " அரசியல் சாசனப் படியும் , 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநித்துவ சட்டப்படியும் தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்கும்" எனத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் என்றாலும், சட்டமன்றங்கள் என்றாலும் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சி காலம் ஐந்தாண்டுகள் மட்டும்தான். இடையில் ஒரு உறுப்பினர் விலகினாலும், மரணத்தால் காலியிடம் ஏற்பட்டால் ஆறு மாதங்களுக்குள் தேர்தல் நடத்தி மக்கள் பிரதிநிதி செயப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்கிறது மக்கள் பிரதிநிதித்துவ சட்டம்.

கடந்த 1975–76 ஆம் ஆண்டுளில் உள்நாட்டு நிலைமைகள் மோசமாக இருப்பதை காரணம் காட்டி, நாடாளுமன்றத்தின் காலத்தை நீடித்ததால் நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்பும். எதிர்ப்பும் என்ன விளைவுகளை உருவாக்கியது என்பதை ஆட்சியாளர்கள் கற்றுணர வேண்டும். குடியரசுத் தலைவரின் அதிகாரம் "வானளாவியதாக" இருக்கலாம் , அது ஜனநாயக நெறிமுறைகளையும், குடிமக்களின் அடிப்படை உரிமைகளையும் பாதுகாக்கும் கடமைப் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்டதாகும். ஆட்சியாளர்களின் விருப்பங்களுக்கு வளைந்து கொடுத்தால் அதனை மக்கள் அமைதியாக பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

கடந்த ஆண்டு 2020 ஜூன் 5 ஆம் தேதி விவசாயிகள் விரோத, கார்ப்ரேட் ஆதரவு வேளாண் வணிக சட்டங்களை பாஜக ஒன்றிய அரசு அவசரச் சட்டங்களாக அறிவிக்க குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்தார். இதனைக் காரணம் காட்டி, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் 2020 செப்டம்பர் மாதம் சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்றம் நிறைவேற்றிய சட்டங்களை, திரும்பப் பெற நீதிமன்றங்கள் கூட உத்தரவிட முடியாது என்றும் பேசப்பட்டது.

ஆனால் என்ன நடந்தது.? விவசாயிகளின் தொடர்ந்த போராட்டத்தால், பாஜக ஒன்றிய அரசின் பிடிவாதம், அடாவடித்தனம், அனைத்தும் அர்த்தமிழந்து போயின.

தேர்தல் தள்ளி வைப்பு தொடர்பான நீதிபதியின் வேண்டுகோள் தயவு தாட்சண்யமின்றி நிராகரிக்கப்பட வேண்டும்.

நாட்டின் ஜனநாயக வாழ்வு கடுமையான நெருக்கடியில் இருப்பதை உணர்ந்து. தேர்தல் ஆணையம் மக்களின் நம்பிக்கையை உயர்த்திப் பிடிக்க வேண்டும். சந்தேகத்தின் நிழல் கூட தேர்தல் ஆணையத்தின் மீது விழுந்து விடாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இவை அனைத்துக்கும் மேலாக குடிமக்கள் வாக் குரிமை என்பது நமது பிறப்புரிமை என்பதை உணர வேண்டும் என்பதை நிகழ்வுகள் வலியுறுத்துகின்றன.

தொடர்புக்கு: **94431 18544**

---

>> 02ம் பக்கத் தொடர்ச்சி

யாமல் அலைக்கழிக்கப்பட்டார்கள். சாலை விபத்துகளில் இறந்தவர்கள், தண்ணீரும் உணவுமின்றி செத்தவர்கள், ரயில்வே பாதைகளில் ரயில் மோதி இறந்தவர்கள் என்று எத்தனைத் துயரச் சம்பவங்கள் ! 20 கோடி மக்கள் வேலைக்காக தமது மாவட்டத்தையும் மாநிலத்தையும் விட்டு வெளியிடங்களில் வேலை பார்க்கும் நாட்டில், எந்த அவகாசமும் இன்றி பொது முடக்கம் அறிவித்தது அறிவுபூர்வமான செயல் அல்ல.

மகாபாரதப் போரை 15 நாட்களில் முடித்தார்கள். நாம் கொரோனாவை 20 நாட் களில் வெல்வோம் என்று பிரதமர் பெருமையடித்துக் கொண்டார். கோமியம்,சாணி ஆகியவை உடல் நலத்திற்கு நல்லது என்று சங்கிகள் பிரச்சாரம் செய்கிறார்கள். வேண்டுமானால் நீங்கள் குடித்துக் கொள்ளுங்கள் ! ஆனால் அறிவியல் உண்மைகளுக்கு எதிரானவற்றை, மனிதநேயமும் இரக்கமுமற்று மக்களுக்கு போதிப்பதை எவ்வாறு ஏற்க இயலும்?

வேலையும் வருமானம் இழந்து மக்கள் உழன்று கொண்டிருந்த நேரத்தில் அம்பானியின் லாபம் 128 சதவீதம் உயர்ந்திருக்கிறது. அதானி இலாபம் 480 சதவீதம் அதிகரித்திருக்கிறது. அதே நேரத்தில், ஏழை மக்களில் 40 சதவீதம் பேர் முன்பை விட ஏழைகளாக மாறி இருக்கிறார்கள்.

மோடியும் அமித் ஷாவும் அம்பானியும் அதானியும் ஒரு நாளைக்கு ஐந்து முறை புதிய உடைகளை மாற்றுகிறார்கள். ஆனால் இந்த நாட்டின் ஏழைத்தாய்க்கு ஆண்டுக்கு இரண்டு புடவைகள் கூட இல்லாத அவலமும் ஒருசேர நிகழ்கிறது !

ஒன்றிய அரசை மட்டுமல்ல, மாநில அரசிடமும் நீங்கள் கோரிக்கை வைக்க வேண்டும். பொது வேலை நிறுத்தத்திற்கு நாங்கள் வீதிக்கு வருவோம். நாங்கள் வன்முறையில் ஈடுபட மாட்டோம். அதே நேரத்தில் எங்கள் எதிர்ப்பை காட்ட எங்களை அனுமதியுங்கள். உங்கள் காவல்துறையை கொஞ்சம் ஒதுக்கி நிறுத்துங்கள் !

ஏஐடியுசி துவக்க காலத்திலிருந்தே, அதன் பெருமிதம் மிக்க கிளைகளில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்கிறது. இந்தியாவிலேயே முதன்முதலாக 1923ல் மேதினக் கொடியை ஏற்றி வைத்ததே நீங்கள்தான்.

தேசம் முழுமையும் உழைக்கும் மக்கள் பொங்கி எழும்போது, தமிழ்நாடு அதன் பாரம்பரியத்திற்கு ஏற்ப பொது வேலை நிறுத்தத்தை மிகச் சிறப்பாக நடத்த வேண்டும் !

விரிவான ஒற்றுமையைக் கட்டுங்கள். ஒற்றுமையே பலம் ! பலத்தின் மூலமே தீர்வு ! ஏப்ரல் 23, 24 தேதிகளில் நடக்கும் வேலை நிறுத்தம் தமிழ்நாட்டில் பெரு வெற்றி பெறட்டும் !

தொகுப்பு: **டி.எம்.மூர்த்தி**


## மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியம்

**லால்புரம் ஊராட்சி பொதுமக்கள் அனைவருக்கும்**

**இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்**

**V.M.S. கோமதிசேகர்** — ஊராட்சி மன்ற தலைவர்

**D. மலர்விழிதுரைராஜ்** — ஊராட்சி மன்ற துணைத் தலைவர்

மற்றும் **உறுப்பினர்கள்**

**A. கவிதா அய்யாசாமி**
**S. மஞ்சுளா சுப்ரமணியன்**
**K. தமிமுன் அன்சாரி**
**S. வைத்தியநாதன்**
**M. ஜெயலட்சுமி மகாலிங்கம்**
**B. ரூபாதேவி பாலகிருஷ்ணன்**
**M. ரத்தினவள்ளி மனோகர்**
**K. தமிழ்முல்லைகுமார்**

**V. சுப்ரமணியன்,** ஊராட்சி செயலாளர், லால்புரம்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 84 இதழ் 39

# உள்ளும் புறமும் எச்சரிக்கை தேவை!

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்பாக, மக்களிடமிருந்து வாக்கு பெறுவதற்காக அஇதிமுகவோடு கூட்டணி வைத்துக் கொண்டதோடு, தனக்கு எதிராக விழும் வாக்குகளைப் பிரிப்பதற்காக, வேறு பல அமைப்புகளை தேர்தலில் நிறுத்தி கூட்டணிக்கு வெளியே ஒரு கூட்டணியை பாஜக அமைத்தது பற்றி அப்போதே 'ஜனசக்தி' பேசியிருக்கிறது.

எல்லா சதிகளையும் முறியடித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி வாகை சூடியது. பாரதிய ஜனதாவால், தனது மத வெறி, கார்ப்பரேட் ஆதரவு, வர்ணாசிரமம், இந்தியையும் சம்ஸ்கிருதத்தையும் திணிப்பது உள்ளிட்ட கொள்கைகளைக் கைவிட முடியாது. ஆனால் மக்களைக் குழப்புவதற்காக, தமிழின் பெயரால், ஒடுக்கப்பட்ட மக்களின் பெயரால் இயங்குகிற வேறு சில கட்சிகளை தன்வயப்படுத்தி கொண்டு, தனது கொள்கைகளை வேறுவகையில் மக்களிடம் பரப்ப வைத்துக்கொண்டிருக்கிறது.

சாதி ஆதிக்க மனோபாவம் கொண்டு சொந்த மகளை, மருமகனேயே கொல்வதை 'ஆணவப் படுகொலை' என சரியான சொல்லால் தமிழ் அம்பலப்படுத்துகிறது. ஆனால் அது 'குடிப்பெருமை கொலை' என சீமான் பெருமிதப் படுத்துகிறார். இஸ்லாமியர் என்பதாலேயே சட்ட எல்லைகளை மீறி சிறையில் வைக்கப்பட்டுள்ள மக்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற குரலை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட பல அமைப்புகள் எழுப்பி வந்தாலும், அதை தான் மட்டுமே கேட்பதாக தம்பட்டம் அடித்துக் கொள்ளும் அவர், அதே நேரத்தில் வேறு மதத்திற்கு மாறியவர்கள் தாய் மதத்திற்கு வரவேண்டும் என்று பாஜகவின் குரலை வெளிப்படுத்துகிறார்.

நீட் தேர்வை ஏன் ரத்து செய்யவில்லை என சீமான் கேட்கும்போது, நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற தமிழக அரசின் தமிழ்நாடு சட்டப்பேரவையின் தீர்மானத்தை ஏற்கக்கூடாது என டாக்டர் கிருஷ்ணசாமி ஆளுநரிடம் மனு கொடுக்கிறார். அடுத்து ஒன்றியம் என்றாலே ஊராட்சி ஒன்றியம் தான் என்றும், ஒன்றிய அரசு எனத் தமிழில் மொழி பெயர்க்க தடைவிதிக்க வேண்டும் என்றும் டாக்டர் கிருஷ்ணசாமி ஆளுநரிடம் முறையிடுகிறார்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் ஒன்றியம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் எல்லாம் தமிழ்நாட்டில் உண்டு. 'யூனியன்' என்ற ஆங்கிலச் சொல் தமிழில் ஒன்றியம் ஆகிறது. ஒன்றியம் என்று சொல்லக்கூடாது என தான் குதித்தால் மட்டும் போதாது என்பதால் இன்னும் சிலரை பாஜக ஏவி விடுகிறது.

தமிழ்நாட்டின் ஆளுநராக ஆர்.என். ரவி நியமிக்கப்பட்ட போது, மாநில அரசை ஆட்டி வைக்கப்போவதாக பாஜக உணர்வாளர்கள் கொண்டாடினர். அவரோ "இந்தியாவின் சிறந்த முதலமைச்சர் ஸ்டாலின்" என்று பாராட்டுகிறார். அது தனது கருத்து இல்லை என்று பாஜக விலகிக் கொள்கிறது.

அதே நேரத்தில், ஐஏஎஸ் அதிகாரிகளை கொண்டு தமிழ்நாடு அரசின் கவனத்துக்கு வராமலேயே தமிழ்நாட்டில் பல வேலைகளை பாஜக செய்கிறது. தமிழ்நாடு அரசின் கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தில் இதுவரை இல்லாத வகையில், ஒன்றிய அரசு அதிகாரி ஒருவர் நுழைக்கப்பட்டிருக்கிறார்.

தமிழ்நாடு முதல்வரின் கவனத்துக்கு வராமலேயே மாநில அரசின் நல வாரியங்களுக்குப் போட்டியாக இஷ்ரம் என்ற ஒன்றிய அரசின் திட்டத்தை தமிழ்நாடு தொழிலாளர் துறை அமலாக்குகிறது.

'சமூகநீதி என்பது அரசியல் கோட்பாடு மட்டுமல்ல சமூகநீதி பொருளாதாரத்தை கட்டியமைப்போம்' என தமிழ்நாடு நிதியமைச்சர் கூறியதை பெருமையோடு நாம் வரவேற்றோம்.

ஆனால் ஒரே ஒரு துப்புரவு தொழிலாளி மாநகராட்சி என்றால் ஒரு வார்டையும் நகராட்சி என்றால் 2 வார்டுகளையும், 8 கிமீ நீளத்துக்கு சாலையையும் ஒரே ஒரு தொழிலாளி துப்புரவு செய்ய வேண்டும். அந்தக் காண்ட்ராக்ட் தொழிலாளிக்கு, நிரந்தரத் தொழிலாளி சம்பளத்தில் ஐந்தில் ஒரு பகுதிக்கும் குறைவாகவே கொடுக்கப்படும் என அரசு அதிகாரி ஆணையிடுகிறார். ஒடுக்கப்பட்ட மக்களின் உழைப்பை இவ்வாறு சுரண்டுவதற்கு பெயர் சமூக நீதியா?

"மக்களின் கோரிக்கையை கவனத்தில் கொள்ளாத, மக்களுடன் கலந்து விடாத, ஒரு நிர்வாக இயந்திரம், இரும்பைப் போல் கடினமானதாகவும், இறுக்கமாகவும், உணர்ச்சியற்றதாகவும் இருப்பதால், மக்களின் நோக்கம் சென்னையில் இருக்கும் அமைச்சர்களையும் அவர்களது செயலாளர்களையும் சென்றடைவதில்லை" என அன்றைய சென்னை ராஜதானியின் சட்டப்பேரவையில், பின்னாளில் உச்சநீதிமன்ற நீதிபதியாகிய விஆர் கிருஷ்ணய்யர் பேசியிருக்கிறார். இன்றும் அந்த எந்திரம் அப்படியேதான் இருக்கிறது.

உள்ளும் புறமுமாக தமிழ்நாடு அரசு எச்சரிக்கையாக இருக்கவேண்டிய காலம் இது.

## வரலாறு காணாத விலையேற்றமே இந்த ஆட்சியின் விளைவு




திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் நாடாளுமன்றத்தில் பேசியதாவது:

மானிய கோரிக்கைகள் மீது என்னுடைய சில கருத்துகளை முன் வைக்க விரும்புகிறேன். ஏழரை ஆண்டுகளாக, இந்த ஆட்சியில் கண்ட பலன் வரலாறு காணாத வேலையின்மை! வரலாறு காணாத விலையேற்றம்! வரலாறு காணாத பணவீக்கம்! இந்த மூன்றும் தான் இந்த ஆட்சியால் ஏற்பட்டுள்ள விளைவு ஆகும். ஆட்சியாளர்கள் பெருமைபட்டுக் கொள்வதற்கு ஒன்றுமே இல்லை. தவறான நடவடிக்கைகளையே மிகச் சரியாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் செய்து கொண்டிருக்கிற ஒரேயொரு வேலை, எது தவறானதோ, அதைத் தவறாமல் செய்து கொண்டிருக்கிறார்கள். அதுதான் இந்த ஏழரை ஆண்டுகால ஆட்சியில் கண்ட பலன்.



### கே.சுப்பராயன் நாடாளுமன்றத்தில் பேச்சு

இன்னொன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். என் எம்.பி. என்பது தேச விரோதமான நடவடிக்கை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். என் எம்.பி. என்பதன் மூலம் இந்தியாவினுடைய சொத்துக்கள் முழுவதும் பணமாகப்பட்டுவிடும். அநேகமாக, ராஜ் சபா, லோக் சபா, செங்கோட்டை தவிர, எல்லாவற்றையுமே விற்றுவிடுவார்கள் போலத் தெரிகிறது. அப்படி விற்று பணம் பண்ணுவது என்பது எந்த வகையிலும் நாட்டுக்கு நன்மை பயப்பதல்ல. இது கடுமையான அத்துமீறல் ஆகும். நான் இங்கு குறிப்பிட விரும்புவது ஆட்சியாளர்களே, நீங்கள் தேர்தலில் சொன்னதைச் செய்யவில்லை. இரண்டு கோடி பேருக்கு வேலையளிப்பதாகச் சொன்னீர்கள்; வேலையளிக்கவில்லை. வேலையின்மைதான் அதிகரித்தது. அதே மாதிரி, விவசாயிகளின் வருமானத்தை இருமடங்கு உயர்த்துவோம் என்று சொன்னீர்கள். ஆனால், விவசாயிகள் ஓராண்டுகாலமாக போராடினார்கள். வருமானம் மேலும் கீழே தான் இறங்கியது. நீங்கள் சொன்னதில் எதைச் செய்தீர்கள்? ஊழலற்ற ஆட்சி நடக்கும் என்று சொன்னீர்கள். ஊழலற்ற ஆட்சி நடக்கவில்லை என்பதற்கு ரபேல் பேரமே மிகப் பெரிய அளவிற்கு அம்பலப்படுத்தி இருக்கிறது.

எனவே எந்த ஒன்றிலும் இந்த ஆட்சி சரியாக நடக்கவில்லை என்பது தொடர்ந்து உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறது. வங்கிகள், இன்சூரன்ஸ் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களை விற்றுவிட மக்கள் உங்களை அனுமதித்தார்களா? நீங்கள் செய்தது சரியென்றால், ஆட்சியைக் கலைத்துவிட்டு, மக்களிடம் சென்று மறுஆணை கோரத் தயாரா? என்று நான் கேட்க விரும்புகிறேன். உண்மையிலேயே, இவற்றை விற்க மக்கள் உங்களை அனுமதிக்கவில்லை. மக்கள் அனுமதிக்காத ஒன்றைச் செய்வது, சரியான நடைமுறை அல்ல.

இந்த ஆட்சி யாருடைய ஆட்சி? இன்று அதிகாரத்தில் இருப்பவர்கள் கேஸ் விலை 419 ரூபாயாக இருந்ததை எதிர்த்து அன்று போராடினார்கள். ஆனால், இன்று கேஸ் விலை இருமடங்கு அதிகமாகி விட்டது. அதே மாதிரி பெட்ரோல் விலை 45 ரூபாயாக இருந்தபோது இவர்கள் போராடினார்கள். இப்போது அதன் விலை மூன்று மடங்கு அதிகரித்துவிட்டது. இவர்களுக்கு ஆட்சி நடத்துகிற தார்மீக தகுதி இருக்கிறதா? என்று நான் கேட்கிறேன்.

நீங்கள் சத்தியமேவ ஜெயதே என்று சொல்லுவதற்கு தகுதியே இல்லை. இவர்கள் சொன்னதற்கு எதிராகச் செயல்படுகிறார்கள். எனவே, இவர்கள் ஒருபோதும் ஆட்சி நடத்துவதற்கு தகுதியுடையவர்கள் இல்லை என்பதைத்தான் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். 30 சதவிகிதமாக இருந்த கார்ப்பரேட் வரியை 22 சதவிகிதமாக குறைத்தார்கள். ஆனால் ஏழைகளுக்கு வரி உயருகிறது. மன்மோகன்சிங் ஆட்சிக்காலத்தில் ரேஷன் சர்க்கரை விலை 11 ரூபாயாக இருந்தது. இன்றைக்கு அதன் விலை 25 ரூபாய். அம்பானி, அதானி போன்ற கார்ப்பரேட்டுகளுக்கு வரியைக் குறைத்தீர்கள். இது யாருடைய ஆட்சி? கார்ப்பரேட்டுகளுக்கான ஆட்சிதான். ஏழை எளிய மக்களுக்கு எதிரான ஆட்சி என்பதற்கு ஏராளமான விவரங்கள் இருக்கின்றன.

விலையேறிவிட்டது என்றால் என்ன செய்ய வேண்டும்? பொது விநியோக முறையின் மூலம் மக்களின் தேவைப் பண்டங்கள் அனைத்தையும் அரசாங்கமே கொள்முதல் செய்து ரேஷன் கடைகள் மூலம் நியாய விலைக்கு விற்பதை உறுதிப்படுத்தாதவரை விலைவாசி ஏற்றத்தில் இருந்து மக்களைக் காப்பாற்ற இயலாது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன், சுதந்திர தினத்தன்று பிரதமர் மோடி, இந்தியாவில் சமூகச் செல்வத்தை அம்பானி, அதானி போன்ற கார்ப்பரேட் முதலாளிகள் தான் உற்பத்தி செய்கிறார்கள் என்று அறிவித்தார். இது பொருளாதார ரீதியாக தவறான கண்ணோட்டம். சமூகச் செல்வத்தைப் படைப்பது அம்பானியோ, அதானியோ அல்ல. உழைக்கும் மக்களும், விவசாயிகளும் தான் சமூகச் செல்வத்தைப் படைக்கிறார்கள்.

ஆஷாபணியாளர்களைப்பிரதமர்மோடி புகழ்ந்து பேசினார். ஆனால் அவர்களுக்கு சம்பளமே நிர்ணயிக்கவில்லை. அவர்களுக்கு சம்பளம் நிர்ணயித்து வழங்க வேண்டும். துப்புரவுத் தொழிலாளர்களின் கால்களைக் கழுவினார்கள். பிரதமரும் கழுவினார். கால்களைக் கழுவினால் போதாது அவர்கள் வயிற்றைக் கழுவிக் கொள்ள சம்பளத்தை உயர்த்துங்கள். இந்த நிலையில், இத்தகைய மோசமான ஆட்சியை நடத்திக் கொண்டிருப்பது கடுமையானது. இந்த அரசு விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை சட்டப்பூர்வமாக்க வேண்டும். அவர்களை ஏமாற்ற முடியாது. வரலாறு காணாத போராட்டத்தின் மூலம் இந்த அரசுக்குப் பாடம் புகட்டி இருக்கிறார்கள். அந்தப் பாடத்தை படித்துக் கொள்ள வேண்டும் என்று நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு பேசினார்.

## திருப்பூர் மாநகரின் அடிப்படை கட்டமைப்பை மேம்படுத்த அந்நிய செலாவணி தொகையில் நிதி ஒதுக்கீடு செய்க!

### கே.சுப்பராயன் எம்.பி. நாடாளுமன்றத்தில் வலியுறுத்தல்

திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் அவை விதி 377–ன் படி நாடாளுமன்ற அவைத் தலைவர் மூலம் ஜவுளித்துறை அமைச்சரின் கவனத்திற்கு ஒரு வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

"திருப்பூரிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஆடை வர்த்தகத்தின் மூலம் ஒன்றிய அரசுக்கு ஆண்டொன்றுக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் அந்நிய செலாவணியாகக் கிடைக்கிறது. இவ்வளவு பெரிய பெருந்தொகையை ஈட்டித்தரும் திருப்பூர், பல வெளிநாட்டு வர்த்தகர்கள் வந்து செல்லும் நகரமாகும். மேலும் இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கி வரும் நகரமாகும். ஆனால், தொழிலாளர்கள் போக்குவரத்து மற்றும் சரக்குப் போக்குவரத்து ஆகியவற்றிற்கு உரிய போதுமான சாலை வசதிகள் இங்கு இல்லை. தொழிலாளர்களுக்கு தேவையான குடியிருப்புகள், பொதுமக்களுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளும் இங்கு இல்லை. இருப்பவைகளும் மிக மோசமான நிலையில் உள்ளன.

எனவே, ஒன்றிய அரசுக்கு பெருமளவில் அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் திருப்பூர் ஏற்றுமதி ஆடை வர்த்தகம் மேம்படவும், பெருமளவில் வேலை வாய்ப்பை வழங்கவும், திருப்பூரில் உள்ள சாலைகள் தரம் வாய்ந்ததாக அமைந்திட வேண்டும். சிறந்த கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். மேலும் அவைகளைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும். இதற்கு பெரும் தொகை தேவைப்படுகிறது.

ஆகவே, ஒன்றிய அரசின் ஜவுளித்துறை அமைச்சர், திருப்பூர் ஏற்றுமதி வர்த்தகத்தின் மூலம் கிடைக்கும் அந்நிய செலாவணி தொகையில் ஒரு சதவிகித தொகையை ஒவ்வொரு ஆண்டும் திருப்பூர் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு அவசியம் ஒதுக்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு பேசினார்.

தத்துவார்த்தம் 10



எஸ். தோதாத்ரி

# எதிர் சக்திகளின் போராட்டம்



**முட்டை முந்தியதா, கோழி முந்தியதா என்ற ஒரு விவாதம் நமக்கிடையே உண்டு. முட்டையிலிருந்துதான் கோழி வருகிறது என்றும், கோழியிலிருந்துதான் முட்டை வருகிறது என்றும் தர்க்கம் புரிந்து கொண்டே இருப்பார்கள். முடிவு காண முடியாமல் விழித்துக் கொண்டே இருப்பார்கள்.**

ஒன்று தோன்றுவதற்கு ஏதேனும் ஒன்று இருக்க வேண்டும் என்ற வாதத்தை அடிப்படையாகக் கொண்டது இந்த வாதம். எது முந்தியது என்ற விடை இதில் இல்லை. கருத்து முதல்வாத தத்துவவாதிகள் இதற்கு எளிதில் விடை கூறுவர். ஒரு புற சக்தி மாறுதலைக் கொண்டு வருகிறது. பொருள்களைத் தோற்றுவிக்கிறது என்பது அவர்களது வாதம். இது கருத்து எனப்படுகிறது. பண்டைக்கால பொருள்முதல்வாதிகள் கருத்தை மறுக்கின்றனர். பொருளை ஏற்றுக் கொள்கின்றனர்.

அவர்களும் மாறுதல் என்று வரும்பொழுது ஒரு ஆரம்ப கால உந்துவிசை இருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். இது அவர்களின் குறைபாடு ஆகும். எதிலிருந்து எது வந்தது என்பது பற்றிய விதியே இந்த எதிரிடைகளில் போராட்டமும் – இணைப்பும் என்ற விதியாகும். இந்த விதிதான் மாறுதலுக்கான காரணத்தைக் கூறுகிறது.

ஒரு பொருள் மாறுவதற்கு காரணம் அதற்கு உள்ளே இருக்கிற எதிர் சக்திகளின் போராட்டமாகும். உதாரணத்திற்கு மாம்பழத்தை எடுத்துக் கொள்வோம். அது காயாக இருக்கும் பொழுது உள்ள பண்பிற்கு எதிராக பழுத்தல் என்ற பண்பு உருவாகிறது. இது காய்நிலையை மறுக்கிறது. இதன் வலு கூடும் பொழுது காய் கனியாகிறது.

ஒரு அணுவை எடுத்துக் கொள்வோம், இதிலுள்ள உட்கரு நேர் மின்சக்தியாக உள்ளது. இதனைச் சுற்றி எலக்ட்ரான் உள்ளது. இது எதிர் மின்சக்தியாக உள்ளது. இவை ஒன்றை ஒன்று எதிர்க்கின்றன. இதன் விளைகாக மாறுதல் ஏற்படுகிறது. இதே போன்றதுதான் சமுதாயமும், இன்றைய சமுதாயத்தின் பிரதானக் கூறுகள் முதலாளிகள் – உழைப்பாளிகள் என்பனவாகும். இவை ஒன்றையொன்று எதிர்க்கின்றன. இதன் காரணமாக முதலாளித்துவம் பல மாறுதல்களுக்கு உள்ளாகிறது.

ஆனால், நாம் பொருள்களை மாறாமல் இருப்பது போன்ற நிலையில் காண்கிறோம். ஒரு முட்டை முட்டையாகவே தோன்றுகிறது. ஒரு மரம், மரமாகவே தோன்றுகிறது.

**முட்டையில் உள்ள எதிர் சக்திகள் ஒரு இணைப்பு நிலையில் இருக்கும்வரை அது முட்டையாகவே இருக்கும். அதில் உள்ள எதிர் சக்திகளில் ஒன்றின் செயல் கூடும் பொழுது அது மாறுகிறது. அது குஞ்சாக மாறுதல் பெற்று விடுகிறது. இது சிறிது காலம் நிலைத்து இருக்கும். பின்னர் கோழியாக மாறும். இதேபோன்றுதான் எல்லா பொருள்களும் நிலைத்தும் இருக்கின்றன; மாறவும் செய்கின்றன.**

இதே போன்றதுதான் சமுதாய மாறுதலும். ஆதி காலத்தில் பொதுவுடமை சமுதாயம் இருந்தது. இது நிலை பெற்ற நிலை. இதில் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி இடம்பெறுகிறது. இது நிலை மறுப்பு ஆகும். இதன் விளைவு அது மாறுதல் அடைந்து அடிமைச் சமுதாயத்திற்கு இடமளிக்கிறது.

இந்த விதியில் இரு அம்சங்கள் உள்ளன. எதிர் சக்திகளின் போராட்டம் என்பது ஒன்று. இவை தற்காலிகமாக பிணைப்பு நிலையில் உள்ளன என்பது இரண்டாவது நிலை. பிணைப்பு நிலை என்பது நிரந்தரமானது அல்ல. முரண்பாடுகள் முற்றும் பொழுது பிணைப்பு அறுந்துவிடும். அப்பொழுது பொருள் மாறும். இதில் ஒன்றுமையும் உள்ளது; பிரிவும் உள்ளது.

இந்த முரண்பாடுகளில் பல வகைகள் உண்டு. அவற்றை சுருக்கமாக இங்கு குறிப்பிடலாம். முதலாவது அக முரண்பாடு. இது உள்ளார்ந்தது. இதுதான் பொருள்களின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாகும். புற முரண்பாடு இது ஒரு பொருளுக்கும், மற்றொன்றிற்கும் உள்ள முரண்பாடு. இது வளர்ச்சியைப் பாதிக்கலாம், அல்லது விரைவுபடுத்தலாம். ஆனால், இது அடிப்படையானது அல்ல.

இரண்டாவதாக பெரிய முரண்பாடு, சிறிய முரண்பாடு, மூன்றாவது அடிப்படையான முரண்பாடு; அடிப்படையற்ற முரண்பாடு. உதாரணமாக முதலாளி – தொழிலாளி முரண்பாடு அடிப்படையானது. மற்றவை அடிப்படையான முரண்பாடு அல்ல. நான்காவது பகை முரண்பாடு; நேச முரண்பாடு. ஆண்டான் – அடிமை முரண்பாடு பகை முரண்பாடு. அடிமைகளுக்குள்ளே உள்ள முரண்பாடு நேச முரண்பாடு எனப்படும். இவற்றை முழுமைப் படுத்தாமல், சூழ்நிலையில் வைத்து பொருத்திப் பார்த்தல் வேண்டும்.

தொடர்புக்கு:
98947 83657

>> 1ம் பக்கத் தொடர்ச்சி

பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறேன். அவரை வாழ்த்துவதில் நான் பெருமை அடைகிறேன்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 96 ஆண்டை நிறைவு செய்து 97 ஆவது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது. அதைப்போல் மூத்த தலைவர் நல்லகண்ணுவும் 96 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்ட 1925ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் தேதி அன்றுதான் நல்லகண்ணுவும் பிறந்துள்ளார். கட்சி தொடங்கிய தினம் அன்று நல்லகண்ணு பிறந்தது அபூர்வமானது'' என்று புகழாரம் சூடினார்.

டுவிட்டர் பக்கத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ''பொதுவாழ்வில் தூய்மை, எளிமை ஆகியவற்றுக்கான குறிச்சொல்லாக மாறிவிட்ட மாபெரும் பொதுவுடைமைப் போராளி தோழர் நல்லக்கண்ணு அவர்களின் 97ஆவது பிறந்தநாளில் அவரை நேரில் சந்தித்து வாழ்த்தி வணங்கினேன். இன்னும் பல்லாண்டுகள் தம் சிந்தனைக்கொடையால் நம் தமிழ்ச்சமூகத்தை அவர் செறிவூட்டட்டும்!'' என்று குறிப்பிட்டுள்ளார்.

நிகழ்ச்சியில் பேசிய மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், ''எந்த லட்சியத்திற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்டதோ, அந்த லட்சியம் நிறைவேற இந்த நாளில் சபதம் எடுத்துக் கொள்கிறோம். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை இன்றளவும் வழிநடத்திச் செல்வது மூத்த தலைவர் நல்லகண்ணு. அவருக்கு பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு சட்டமன்ற, எதிர்க்கட்சித் தலைவராக மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த கட்சி துவக்க விழா நிகழ்ச்சியில் பங்கேற்று நல்லகண்ணுவுக்கு வாழ்த்துக் கூறினார். அப்போதே அடுத்த முறை முதல்வராகத்தான் வந்து இந்த விழாவில் பங்கேற்பீர்கள் என்று கூறினோம். அதேபோன்று தமிழக முதல்வராக மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த விழாவில் பங்கேற்பது மிகவும் பொருத்தமானது.

நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற தேர்தலின் போது அமைந்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணி தொடர்வதில் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் உறுதியாக இருக்கிறார். தேர்தல் ஆணையம், நீதிமன்றம் உள்ளிட்ட இந்திய அரசியலமைப்பு சட்டம் உருவாக்கிய அமைப்புகளை பாஜக சீர்குலைக்கிறது. இப்படிப்பட்ட மக்கள் விரோத போக்கை எதிர்ப்பதில் திமுக இன்றளவும் உறுதியாக இருக்கிறது. ஜனநாயக முற்போக்கு அணி மீண்டும் தொடர வேண்டும் என்பதற்காக ஸ்டாலின் பெருமுயற்சி எடுத்து வருகிறார். விடுதலை சிறுத்தைகள் கட்சி விருது வழங்கும் விழாவில் அவர் பேசிய பேச்சு அதனையே வெளிப்படுத்தியது. அனைவரையும் அணைத்து செல்லும் முயற்சியில் முதலமைச்சர் ஈடுபட்டிருக்கிறார். அவரது முயற்சி வெற்றி பெற வேண்டும்.


வகுப்புவாதத்தை எதிர்ப்பதில் காங்கிரஸ் கட்சியை விட்டுவிடக்கூடாது. அவர்களை ஒன்றிணைத்து வகுப்புவாதத்தை எதிர்க்க வேண்டும் என்பதையே திருமாவளவன் வெளிப்படுத்தி இருக்கிறார். தங்களுக்கு நிரந்தர எதிரியாக பாஜக உள்ளது. எனவே அவர்களை எதிர்ப்பதில் எந்த சிக்கலும் இல்லை எனவும் முத்தரசன் கூறினார்.

அதைத் தொடர்ந்து விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் நல்லகண்ணுவுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார். அப்போது பேசிய அவர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்ட நாளும் நல்லகண்ணு பிறந்த தினமும் ஒன்று என்பது பெருமைப்படக் கூடிய பொருத்தமான விஷயம். மக்களுக்காக தன்னை ஒப்படைத்துக் கொண்டு வாழ்க்கை முழுவதும் தியாக வாழ்க்கை வாழ்ந்து வருபவர் நல்லகண்ணு என்றார்.

நல்லகண்ணுவிற்கு நேரில் வாழ்த்து தெரிவித்த மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, அரசால் வஞ்சிக்கப்பட்டவர்கள் ஒடுக்கப்பட்டவர்களின் குரலாகவே நல்லகண்ணுவின் குரல் இருந்துவருவதாக புகழாரம் சூடினார்.

இயக்குநர் ஜனநாதன் சிலை திறப்பு விழாவில் திராவிடர் கழக தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் இரா.நல்லகண்ணு அவர்களுக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். திரைப்பட நடிகர் விஜய் சேதுபதி இரா.நல்லகண்ணுவை கை குலுக்கி பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.

26 டிசம்பர்



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
துவக்கதினம்
சுதந்திர போராட்ட வீரர்:
தோழர்.நல்லக்கண்ணு பிறந்தநாள் வாழ்த்துக்கள்
தோழர். கே.டி.கே.தங்கமணி நினைவால்
வீரவணக்கம்! வீரவணக்கம்!! வீரவணக்கம்!!!



மூத்த தோழர்.
என்.குப்புசாமி, சி.பி.ஐ.,
P.முரளி, கி.தலைவர்
கலை இலக்கிய பெருமன்றம்
D.சண்முகம், பொருளாளர்,
கலை இலக்கிய பெருமன்றம்



சி.இராமலிங்கம்,
மாவட்ட துணைசெயலாளர்,
கலை இலக்கிய பெருமன்றம்,
செங்கல்பட்டு மாவட்டம், செல்; 93822 03123

டி.எஸ்.நடராஜன்
மாநில துணைத்தலைவர்
கலை இலக்கிய பெருமன்றம்

தேசபக்தர்களே தெருவிற்கு வாருங்கள்
உழவையும் தொழிலையும் சிந்தனை செய்து
நாற்புறமும் சூழ்கிறது மோடி இருள்
புன்மை இருள் கிழித்து புது வெளிச்சம் மீட்டெடுக்க
டிசம்பர் 26 புரட்சிகர வாழ்த்துக்கள்

கலை இலக்கிய பெருமன்றம்

வாழ்த்துகிறோம் ! காகிதத்தில் ஒர் ஆயுதம் வணங்குகிறோம் !
படியுங்கள்
ஜனசக்தி, தொழிற்சங்க செய்தி, நியூ ஏஜ்

## விவசாயிகள் நிவாரண நிதியை உயர்த்துக! உரங்கள் தட்டுபாடின்றி வழங்குக!

# மாநிலம் முழுவதும் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்



வடகிழக்கு பருவமழை வழக்கத்தை விட 80 சதவீதம் அதிகமாக பெய்ததாலும், காற்றழுத்த தாழ்வு நிலை, வெப்பமண்டல சுழற்சி போன்ற காரணங்களாலும் பெய்த தொடர் கன மழை காரணமாக தமிழ்நாட்டின் பெரும்பகுதி கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக காவிரி பாசனப் பகுதிகளில் விளைந்த பயிர்களும், நடவு செய்த பயிர்களும் பெரும் சேதாரமாகியுள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் இழப்புகளுக்கும், நஷ்டத்துக்கும் ஆளாகியுள்ளனர். மனித உயிர்கள் பலியானதுடன் ஆயிரக்கணக்கில் ஆடு, மாடு போன்ற கால்நடைகள் மரணமடைந்துள்ளன. விவசாயத் தொழிலாளர் வேலையிழப்புக்கு ஆளாகி, பட்டினி வாழ்வுக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

தாளடி மற்றும் சம்பா பயிர் இழப்பீடாக ஏக்கருக்கு ரூ 30 ஆயிரம் வழங்க வேண்டும்.

மானாவாரி விவசாயிகளின் இழப்பீட்டை ஈடு செய்ய நிவாரணம் வழங்க வேண்டும்.

கால்நடை உயிர் இழப்புகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

உயிரிழந்த விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு தலா ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும்.

விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு தலா ரூ.5000 நிதியுதவி செய்ய வேண்டும்.

கடுமையான உரத்தட்டுபாடு நிலவுவதால் சாகுபடி பணிகள் பாதிக்கப்படுகின்றன. இதில் அரசு தலையிட்டு ரசாயன உரங்கள் தட்டுபாடு இல்லாமல் கூட்டுறவு அமைப்புகள் மூலம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர், வட்டாட்சியர் உள்ளிட்ட அதிகாரிகள் மூலம் முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற போராட்டங்கள் வருமாறு:

திருவாரூர் நடந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி பங்கு கொண்டார்.

**கிருஷ்ணகிரி:** தளி சட்டமன்றத் தொகுதி அஞ்செட்டியில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பும், தேன்கனிக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன்பும், கெலமக்கலம் நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. உரையாற்றினார்.

ஒசூர் மாநகரம் மத்திகிரியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் விவசாய சங்க மாநில துணைத்தலைவர் எம்.லகுமையா கலந்து கொண்டார். ஒன்றிய விவசாய சங்கத் தலைவர் நாகராஜ் தலைமை தாங்கினார். யோகி நாராயணன், பிரவீன், முருகேஷ், சாகிப், கணேஷ், முன்ராஜ் முன்னிலை வகித்தனர். இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூரில் கண்ணு தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தேவராஜ், முனிசாமி, ஜீவானந்தம், ரஜினி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இறுதியில் பவுன்ராஜ் நன்றி கூறினார்.

கிருஷ்ணகிரியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் 14 மையங்களிலும் ஆயிரக்கணக்கானோர் பங்கு கொண்டனர். மாவட்ட செயலாளர் பி.பழனி உள்பட பலர் பங்கு கொண்டனர்

**திருவாரூர்:** திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கே.உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ. தலைமை ஏற்றார். ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பிவி.சந்திரராமன், கே.பாலு, எம்.முருகேசன், கோ.ஜெயபால் மற்றும் 200க்கும் மேற்பட்ட விவசாயகளும் போராட்டத்தில் பங்குபெற்று கண்டன முழக்கமிட்டனர்.

**தென்காசி:** தென்காசியில் மாவட்ட துணை செயலாளர் எஸ்.வேலாயுதம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிபிஐ மாவட்ட செயலாளர் த.இசக்கிதுரை, ஏஐடியூசி மாவட்ட செயலாளர் தி.சுப்பையா, எம்.கணேசன், விதொச மாவட்ட து.செயலாளர், ஏ.பரமசிவன், மாவட்ட நிர்வாகக்குழு இரா.சமுத்திரக்கனி ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர் ஆகியோர் கண்டன உரை ஆற்றினர். மாவட்ட நிர்வாக குழு, மாரியப்பன், மாவட்ட குழு எம்.எஸ்.கிட்டப்பா உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.









பின்னர் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்கப்பட்டது.

**மயிலாடுதுறை:** சீர்காழி பழைய பேருந்து நிலையம் அருகில் கே.வரதராஜன், சி.கலியமூர்த்தி தலைமையில் வி.ச.மாவட்ட தலைவர் எம்.செல்லப்பன் கண்டன உரையாற்றினார். கொள்ளிடம் ஒன்றியத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வி.ச. ஒன்றிய தலைவர் கலியமூர்த்தி, வி.ச.ஒன்றிய செயலாளர் கே.கஜேந்திரன் தலைமை தாங்கினர். சிபிஐ மாவட்டச் செயலாளர் அ.சீனிவாசன் கண்டன உரையாற்றினார். கே.எஸ்.சிவராமன், எஸ்.ஜெயசக்திவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செம்பனார்கோவில் ஒன்றியம் ஆர்.முருகன் வி.ச.ஒன்றிய தலைவர், ஆர்.ராமகிருஷ்ணன் வி.ச.ஒன்றிய செயலாளர் தலைமையில், பி.வீரராஜ் வி.ச.மாவட்ட செயலாளர், எஸ்.கிருஷ்ணமூர்த்தி ஒன்றிய செயலாளர் சிபிஐ ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

**பரமக்குடி:** பரமக்குடியில் இராமநாதபுரம் மாவட்ட தலைவர் கே.ஜீவா தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் கடலாடி ஆர்.கருணாநிதி, சிபிஐ பரமக்குடி நகர் செயலாளர் என்.எஸ்.பெருமாள், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கே.சுப்பிரமணியன், எஸ்.பி.ராதா உள்ளிட்டவர்கள் கோரிக்கைகள் வலியுறுத்திப் பேசினர்.

**ஈரோடு:** ஈரோடு மாவட்டம் நம்பியூரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்று வட்டாட்சியரிடம் மனு வழங்கப்பட்டது. விவசாயிகள் சங்க மாநிலத்துணைத்தலைவர் சி.எம்.துளசிமணி, அ.கு பரமேஸ்வரன், கே.பழனிசாமி, ஈ.கே.சின்னசாமி மற்றும் விவசாயிகள் திரளாக பங்கேற்றனர்.

**அம்மாபேட்டை:** தஞ்சை மாவட்டம் அம்மாபேட்டை ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகம் முன்பு ஒன்றிய செயலாளர் எம். வெங்கடேஷ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி கலந்துகொண்டு கோரிக்கை விளக்க உரை நிகழ்த்தினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியூசி மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம், தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட பொறுப்பாளர் சாமு.தர்மராஜன், சிபிஐ அம்மாபேட்டை ஒன்றிய செயலாளர் ஆர்.செந்தில்குமார், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் ஆர்.எஸ்.பாலு, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகள் தங்க. சக்கரவர்த்தி, ஏ.ராஜேந்திரன், எம்.துரைராஜ், சிபிஐ ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.எம்.குருமூர்த்தி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**பாபநாசம்:** பாபநாசம் அருகே அம்மாப் பேட்டை வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பொட்டாஷ், டிஏபி உள்ளிட்ட உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிலும், தனியார் கடைகளிலும் தட்டுப் பாடின்றி கிடைக்க வேண்டும் என்ன கோரிக்கை முழக்கமிடப்பட்டது.

---

### மகளிருக்கு 33% ஒதுக்கீட்டிற்காக

# சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுக!

## இந்திய மாதர் தேசிய சம்மேளன மாநிலக் குழு தீர்மானம்

இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாநில குழு கூட்டம் தஞ்சை மாவட்ட சிபிஐ அலுவலகத்தில் மாநில தலைவர் ,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.பத்மாவதி தலைமையில் நடைபெற்றது. மாநிலச்செயலாளர் ஜி.மஞ்சுளா நடைபெற்ற பணிகள் குறித்தும், பெண்கள் நாளுக்கு நாள் தொடர்ந்து பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட வரும்நிலைகள், புறக்கணிக்கப்பட்டு வரும் நிலைமைகள் குறித்தும் சிறப்புரையாற்றினார்.

மாநில துணை செயலாளர் மு.கண்ணகி முன்னிலை வகித்தார். நிர்வாகிகள் நிஷாசத்யன், எஸ். தமயந்தி, வளர்மதி எல்.சுந்தரவல்லி, வி.ராஜலட்சுமி , டி.பி.லலிதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி வாழ்த்துரை வழங்கினார். முன்னதாக தஞ்சை மாவட்ட செயலாளர் ம.விஜயலட்சுமி வரவேற்றார், பொருளாளர் ஸ்ரீதேவி நன்றி கூறினார்.

கூட்டத்தில் பெண்களுக்கான 33 சதவிகித ஒதுக்கீட்டிற்கான மசோதா முதன்முதலாக நாடாளுமன்றத்தில் 1996 செப்டம்பர் 12 அன்று தாக்கல் செய்யப்பட்டது.

அதற்குப் பிறகு 2010 மார்ச்10 ல் மீண்டும் அறிமுகம் செய்யப்பட்டு மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டு 11 ஆண்டுகள் கழிந்து விட்டது. தனிப்பெரும் பான்மை பெற்று ஆட்சியில் உள்ள பாஜக அரசு 33 சத இட ஒதுக்கீட்டுக்கான மசோதாவை மக்களவையில் இதுவரை தாக்கல் செய்யாமல் பெண்களை ஏமாற்றி வருகிறது.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் 33% இடஒதுக்கீட்டுக்கான தனித் தீர்மானம் இயற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பி மசோதாவை நிறைவேற்ற வலியுறுத்த வேண்டும்.

தமிழகத்தில் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளை தடுப்பதற்கு, செயல் திட்டங்களுக்கு நிர்பயா நிதியை முறையாக, முழுமையாக பயன்படுத்த வேண்டும்.

கடந்த வருடத்தில் தமிழகத்திற்கு ஒன்றிய அரசு நிர்பயா நிதியில் சுமார் 190. 68 கோடி வழங்கி உள்ளது.

அதில் 6 கோடியை மட்டும் தமிழ்நாடு அரசு பயன்படுத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பெண்களின் பாதுகாப்பான செயல் திட்டங்களுக்கு நிதியை முழுமையாக பயன்படுத்தி பெண்களின் பாதுகாப்பை தமிழ்நாடு அரசு உறுதி செய்ய வேண்டும்.

தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தை முடக்க கூடாது, தொடர்ந்து நடத்த வேண்டும், வேலை நாட்களை அதிகரிக்க வேண்டும், சம்பளத்தை உயர்த்த வேண்டும், இந்த திட்டம் மாநகராட்சிக்கும், பேரூராட்சிக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று மாநில, ஒன்றிய அரசுகளை இந்திய மாதர் தேசிய சம்மேளன மாநில குழு கூட்டம் வலியுறுத்துகின்றது.

குடும்ப வன்முறை சட்டம் பற்றி போதிய விழிப்புணர்வு பெண்கள் மத்தியில் இல்லாமல் இருக்கிறது, விழிப்புணர்வு இல்லாததால் பெண்களின் துன்பம் தொடர்கிறது, தமிழ்நாடு அரசு இதுபற்றிய கவனத்துடன் பெண்களை குடும்ப வன்முறையிலிருந்து பாதுகாக்க வேண்டும், குடும்ப வன்முறை சட்டம் 2005 அடிப்படையில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று மாநில குழு கேட்டுக்கொள்கிறது. ஒன்றிய அரசு பெண்களின் திருமண வயதை 18ல் இருந்து 21 ஆக உயர்த்தும் அறிவிப்பை இந்திய மாதர் தேசிய சம்மேளனம் வன்மையாக கண்டிக்கிறது.


இது குறித்த சமீபத்திய மத்திய அமைச்சரவை கூட்ட முடிவால் எந்தவித நன்மைகளும் பெண் களுக்கு விளையப் போவதில்லை, பெண்களின் உடல் ஆரோக் கியத்தை பாதுகாக்கவே திருமண வயதை உயர்த்தியதாக அறி விக்கும் ஒன்றிய அரசு, உண்மையில் பெண்கள் மீது அக்கறை இருந்தால் பெண்கள், குழந்தைகள் சத்துக் குறைபாட்டால் உள்ளதையும், ஆரோக்கியம் சீர் கெடாமல் பாதுகாக்கவும், பெண் களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு, சம ஊதியம் உள்ளிட்ட நலத் திட்டங்களை அமல்படுத்த வேண்டும்

இவ்வாறு மாநில குழு சுட்டிக்காட்டுகிறது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

# சங்கே முழங்கு!



## அனைத்திந்திய தலித் உரிமை மாநாடு



மகாராஷ்டிரா மாநிலம், அவுரங்காபாத்தில் 2021,டிசம்பர் 18,19 ஆகிய தேதிகளில் தலித் உரிமை மாநாடு நடைபெற்றது.

இம்மாநாட்டில் அனைத்திந்திய தலித் உரிமை இயக்கம் என்ற பெயரில் புதிய அமைப்பு உருவாக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் செயல்பட்டு கொண்டிருக்கக் கூடிய தமிழ் நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம், பாண்டிச் சேரியில் செயல்படும் அட்டவணை இன மக்கள் சமூகநீதி இயக்கம் போன்று மாநில அளவில் செய்யப்பட்டுக் கொண் டிருந்த அமைப்புகளிலிருந்து பிரதிநிதிகளை தேர்வு செய்து அகில இந்திய அமைப்பு நிலை முதல்மாநாடு 2021, டிசம்பர் 18,19 ஆகிய தேதிகளில் மகாராஷ்டிரா மாநிலம் அவுரங் காபாத்தில் நடைபெற்றது.

அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து ஊர்வலமாக புறப்பட்டு மாநாட்டுப் பந்தலை வந்தடைந்தது. எம்.எஸ்.பி. வளாகத்தில் உள்ள அரங்கில் மாநாடு நடைபெற்றது.

ஜனகி பஸ்வான், மு.வீரபாண்டியன், ராஜன், தேவி குமாரி, ஆகியோர் தலைமைக்குழுவாக இருந்து மாநாட்டை வழிநடத்தினர்.




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் து.ராஜா மாநாட்டை துவக்கி வைத்து உரையாற் றினார். நாகேந்திர நாத் ஓஜா எக்ஸ்.எம்.பி., டாக்டர்.காங்கோ இம்மாநாட்டிற்கு வழிகாட்டினர். 51 பேர் கொண்ட தேசியக்குழு தேர்வு செய்யப்பட்டது.

தலைவர் :
**அ.ராமமூர்த்தி**, (புதுவை)
பொதுச்செயலாளர் :
**வி.எஸ்.நிர்மல்**, (உ.பி.)
பொருளாளர்:
**தேவிகுமாரி** (பஞ்சாப்)
துணைத் தலைவர்கள்:
**பொ.லிங்கம்** எக்ஸ்.எம்.பி. (தமிழ்நாடு)
**ஜனகி பஸ்வான்**, மகாதேவ் பூலே (மகாராஷ்டிரா)
தேசியசெயலாளர்கள்:
**ராஜன்** எக்ஸ்.எம்.எல்.ஏ., கேரளா,
**சுப்பாராவ்** (ஆந்திரா)
**சூர்யகாந்த் பஸ்வான்** எம்.எல்.ஏ. பீகார்
ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழகத்திலிருந்து
**மு.வீரபாண்டியன், பொ.லிங்கம், கி.சு.குமார், எஸ்.கே.சிவா**
ஆகியோர் தேசியக் குழுவுக்கு தேர்வு செய்யப் பட்டனர்.

தலித் மக்களின் வாழ்வை பொருளாதார ரீதியாக மேம் படுத்துவதற்கு அம்மக்களுக்கு 10% தொழில் கடன் வழங்க வேண்டும் என ரிசர்வ் வங்கி வழிகாட்டியுள்ள நடைமுறையை அமுல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தலித் மக்களுக்கான துணைத் திட்டத்தை இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும், அமுல்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டன.

பாரதீய கேத் மஸ்தூர் யூனியன்(பி.கே.எம்.யூ.)இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இணைந்து இம்மாநாட்டை சிறப்பாக நடத்தின.

பி.கே.எம்.யூ. தலைவர்களில் ஒருவரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அவுரங்கபாத் செயலாளருமான ராம்பகேதி தலைமையில் அவுரங்கபாத் மாவட்ட சிறுபான்மை அமைப்பினர், மாணவர் பெருமன்ற, தொழிற்சங்கத் தோழர்கள் உள்ளிட்டு மாவட்டத்தின் முன்னணி தோழர்கள் இம்மாநாடு சிறப்பாக நடைபெற பணியாற்றினர்.



எஸ்.காசிவிஸ்வநாதன்



# ஒரு கிறிஸ்துவ கம்யூனிஸ்ட் மறைந்தார் ...

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு அவர்களுடைய தொலைபேசி அழைப்பு திடுக்கிட வைத்தது.**

பாளையங்கோட்டையில் வாத்தி யார் ஆர்.எஸ் ஜேக்கப் அவர்கள் மறைந்து விட்டார் என்பதுதான். நேரடியாக சென்று மரியாதை அஞ்சலி செலுத்த கட்டளை யிட்டார்.

ஒரு எளிய குடும்பத்தில் 19.11.1926 ல் பிறந்த ஆர் எஸ் ஜேக்கப் அவர்கள் பண்ணையூர் என்ற ஒரு கரிசல் கிராமத்தில் பணியை தொடங்கினார்.

இந்திய இளைஞர்கள் சுதந்திரத்திற்காக போராடினார்கள். விடுதலைக்குப் பின் நாடு முன்னேற்றம் அடையும், என்று எதிர்பார்த்தார்கள். நடைபெறவில்லை . நிலப்பிரபுவ கொடுமை களை எதிர்த்தவர்கள் தாக்கப்பட்டார்கள். இளம் குழந்தைகள் கூட கடுமையாக வேலை வாங்கப்பட்டார்கள்.

அவர்களை ஒருங்கிணைத்து கல்வியையும், பொது அறி வையும், பாரதி பாடல்களையும் கற்றுக்கொடுத்த வாத் தியார் ஜேக்கப் கம்யூனிஸ்ட் என்று குற்றம் சாட்டப்பட்டார்.

1948ஆம் ஆண்டு நெல்லை சதி வழக்கு போடப்பட்டது. கம்யூ னிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது. கட்சித் தலைவர் களை, குறிப்பாக பாலதண்டாயுதத்தை பாதுகாத்தார் என்ப தற்காக கைது செய்யப்பட்டார். அவர் கம்யூனிஸ்ட் இல்லை. உண்மையான கிறிஸ்துவர். ஆனாலும், கொடும் சித்தி ரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டார்.

அவருடைய பற்கள் உடைக்கப்பட்டன. கன்னங்கள் ரத்தம் வரும்வரை அடிக்கப் பட்டன. ரத்தம் சிதறிய போதிலும் மன உறுதியோடு இருந்தார்.

அவருக்கு டைரி எழுதும் பழக்கம் உண்டு. அவரை கைது செய்த போது பறிமுதல் செய்தவைகளில் டைரிகளும் இருந்தன. டைரியின் வாசகங்கள் இவருக்கு எதிராக போய் விடுமோ என்ற அச்சமும் நிலவியது. ஜோடனை செய்யப்பட்ட வழக்கில் அவர் மரண வாயிலுக்கு இட்டுச் செல்லப்பட்டார். இவைகளை 'வாத்தியார்' என்ற நாவலில் விரிவாக விவரித்துள்ளார்.

சிறைச்சாலையிலே இரண்டரை ஆண்டுகள் அடைத்து வைக்கப்பட்ட சம்பவங்களையும் நீதிமன்ற நடவடிக்கைகளை விவரித்து எழுதியதுதான் 'மரண வாயிலில்'...

" அன்று முதல் இன்று வரை நான் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அல்ல. இயக்கத்தில் ஈடு பாடும் இல்லை. மார்க்சிசம் எனக்கு பிடிக்கும்.அதை சரியாகப் படித்து புரிந்து கொண்டவன் என்ற முறையில் விருப்பு வெறுப்பற்ற நிலையில் எழுத முடியும் என்று நம்பினேன் "

1949 ம் ஆண்டு முற்போக்கு எண்ணம் கொண்ட நூற்றுக் கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய் தார்கள். பாலதண்டாயுதம் மற்றும் இருவர் பிடிபடாத தால் அந்த வழக்கை அப்படியே நிறுத்திவிட்டு தூத்துக்குடி பொன்னுவை முதல் குற்றவாளியாக வைத்து 97 பேரைக் கொண்டு நெல்லை கம்யூனிஸ்ட் சதி வழக்கு என்ற பெயரில் முதல் குற்ற அறிக்கை தயார் செய்தார்கள். கீழ் கோர்ட்டில் 67 பேரை வடிகட்டி மற்ற வர்களை விடுதலை செய்தார்கள்.

சதி வழக்கு போடப்பட்டவர்களில் ஒரே ஒரு வாத்தியார் ஆர்.எஸ்.ஜேக்கப்...

சுதந்திரப் போராட்ட தியாகி, நெல்லைச் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு தண்டனை பெற்ற ஐ. மாயாண்டி பாரதி எழுதுகிறார்..." வாத்தியார் ஜேக்கப் ஒரு சர்ச் கிறிஸ் துவ உபதேசியார் ஆகவும், தமிழ் வித்வான் ஆகவும் இருந்த போதிலும் ஏழை எளிய மக்களுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்ட ஊழியர்களை மனதார வாழ்த்தினார். உடன் சேர்ந்து பணியாற்றினார். சிறைவாசமும் அனுபவித்தார்"

கரிசல் மண்ணில் வேர் கொண்டு தழைத்தோங்கிய ஆர். எஸ். ஜேக்கப் கல்விச்சாலை தொடங்கி சிறைச்சாலை வரை யிலும் அறவழியில் நின்று போராடியவர்.

சிறையிலிருந்து வெளிவந்த பின் பல்கல்வி பயின்றார் . 1953 முதல் 1966 வரை நெல்லை திருமண்டல சிறுவர் ஊழியராக பணி செய்தார். தமிழில் புலமை பெற்று மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியராக பணியாற்றினார். பாளையங்கோட்டை தூய யோவான் மேல்நிலைப் பள்ளியில் இருந்து தமிழாசிரியராகப் பணியாற்றி 1985ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

1956ஆம் ஆண்டு திருமணம் நடந்தது அவருடைய மனைவி வைலற் அம்மாவும் ஒரு ஆசிரியரே. பாரம்பரியம் மிக்க 'நற்போதகம்' என்ற புராதன இதழில் பொறுப்பு ஆசிரியராக 13 ஆண்டுகள் பணிபுரிந்தார் . 1983 மனைமலர் என்ற கிறிஸ்துவ இலக்கிய மாத இதழில் 12 ஆண்டுகள் ஆசிரியராக இருந்தார். நூற்றுக்கணக்கான இளைஞர்களை எழுத்தாளர்களாக உருவாக்கினார். 80க்கும் மேற்பட்ட நூல் களை வெளியிட்டுள்ளார்.

வாத்தியாருடைய நூல்களின் பெயரில் பலர் ஆய்வு செய்து பல்கலைக்கழக பட்டம் பெற்று உள்ளார்கள். பல சுயநிதி கல்லூரிகளில் முதுகலைப் பாடமாக இவரது நூல்கள் வைகப் பட்டுள்ளன. மூச்சு இருக்கின்ற வரை எழுதிக்கொண்டிருந்தார்.

தொடர்ந்து 56 ஆண்டுகளாக எழுதிய அவருடைய சிந்தனை நின்று விட்டது. வாத்தியார் ஜேக்கப்பின் இரண்டாம் மகள் ஜெயரதி அகஸ்ட்டின் சிறந்த சிறுகதை எழுத்தாளர். அவருடைய மகன் கவிஞர் தியாரூ பிரபலமான எழுத்தாளர். கவிதை, புதின நூல்களை வெளியிட்டுள்ளார். மற்றொரு மகன் ஜெயதாஸ் சிறந்த இசை பாடல்களை எழுதி வருகிறார். இசையமைக்கும் ஆற்றலுடன் அருமையாக பாடுகிறார்.

வாத்தியாருக்கு 4 ஆண்களும் 3 பெண்களும் உள்ளனர். ஆலமரம் என குடும்பமும் செழித்து வளர்ந்துள்ளது.

சிறைக் காவியங்களைப் படைத்த இங்கிலாந்தின் ஜான்பனியன் அவர்களோடு ஒப்பிடத்தகுந்தவர் ..

வாத்தியார் நாவல் இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் கிளர்ந்தெழுந்த சமூக வரலாற்று உரைநடை புதினம். மரண வாயிலில் இருபத்தியோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மலர்ந்த நவீனம். சிறை வாழ்க்கையின் கொடுமைகளை விவரிக்கின்றது .

நேர்மையாக வாழ்க்கை நடத்தி பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட அருட் கலைஞர் ஜேக்கப் அவர்களின் மறைவு வேதனைக்குரியது.

தூக்குத் தண்டனையை எதிர்பார்த்து சிறைக்குள் அடைபட்டு கிடந்த போதிலும் உண்மையான ஆன்மீகவாதியாய், நற்சிந்தனை கொண்டவராய் சக மனிதர்களை நல்வழிப்படுத்த மனிதநேயப் பண்பாளர் இறுதிவரை இறைத்தொண்டு மக்கள் தொண்டு என கலங்காது பணிபுரிந்த கிறிஸ்து உபதேசியார் ஜேக்கப் அவர்களின் பணி நினைவுகூரத்தக்கது.

தொடர்புக்கு: **94435 27486**

## நெல்லை சதி வழக்கில் நீண்ட காலம் சிறையிலிருந்த

# ஆர்.எஸ்.ஜேக்கப் வாத்தியார் மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

1948 – 50களில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மீது நெல்லை சதி வழக்கு போடப் பட்டது. ஒரு கிராமப்புற பள்ளிக்கூடத்தின் உறுதிமிக்க கிறிஸ்துவ ஆசிரியராகப் பணியைத் தொடங்கிய ஆர். எஸ்.ஜேக்கப் அவர்கள் மீதும் வழக்கு பாய்ந்தது. கடுமை யான சித்திரவதை கொடுமையிலும் கம்யூ னிஸ்ட்டுகளை காட்டிக் கொடுக்க மறுத்து விட்டதோடு, அவர் கைது செய்யப்பட்டு மூன்றாண்டு காலம் சிறையில் வாடினார்.

வாத்தியார் உபதேசியாகவும் ஆன்மீக வாதியாகவும் நல்ல சமூக சிந்தனை உள்ள வராகவும் சமத்துவ வாதியாகவும் வாழ்ந் தவர். மரண தண்டனையை சந்திக்க நேர்ந்த போதிலும் சிறிதும் மனம் கலங்காமல் தன் னுடைய நிலையில் உறுதியாக நின்று ஒரு கிறிஸ்துவ கம்யூனிஸ்டாக இறுதிவரை வாழ்ந்தவர் ஆசிரியர் ஆர்.எஸ்.ஜேக்கப்..

கம்யூனிஸ்டு இயக்கத்தின் மீது ஆழ்ந்த நம்பிக்கையும் கொண்ட வாத்தியார் ஜேக் கப் அவர்களுடைய மறைவு இலக்கிய உலகத்திற்கு மிகப்பெரிய இழப்பு. ஒரு கரிசல் காட்டு கிராமத்தின் அவல நிலையை மாற்றுவதற்காக எடுத்த நடவடிக்கைகளை 'வாத்தியார்' என்ற நாவலில் அழகுற விளக்கியுள்ளார்.

நெல்லை சதி வழக்கு சம்பவங்களை நூல்களாக அவர் எழுதியுள்ளார். மூன்றாண் டுகள் சிறைவாசத்தை 'மரண வாயிலில்' என்ற நாவலில் வெளிப்படுத்தியுள்ளார். தமிழ் இலக்கிய உலகம் ஒரு மிகப்பெரிய எழுத்தாளுமையை இழந்து விட்டது. தோழர் ப.மாணிக்கம் அவர்களோடு மிகுந்த நெருக் கத்தோடு இருந்தவர். இறுதிவரை மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு அவர்களோடும் மிக நெருங்கிய தொடர்பை பேணி வந்தவர். அவரது இழப்பால் வாடும் அவரது குடும்பத் தினருக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள் கிறது. இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

டிசம்பர் 26 1925

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு தின கொடியேற்று விழா





இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பு தினமான டிசம்பர் 26 அன்று தமிழகம் முழுவதும் கட்சி கொடி ஏற்றப்பட்டது.

**திருத்துறைப்பூண்டி :** திருத்துறைப்பூண்டி கட்சி அலுவலகத்தில் ஒன்றியச் செயலாளர் பாலு தலைமையில், தேசியக்குழு உறுப்பினர் கோ.பழனிசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ. கொடி ஏற்றினார். கே.உலகநாதன் எக்ஸ்.எம்.ஏ., ஒன்றியப் பெருந்தலைவர் அ.பாஸ்கர், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பி.வி.சந்திரராமன், நகரச் செயலாளர் எம்.முருகேசன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

திருத்துறைப்பூண்டி நகரில் முருகேசன் தலைமையில் கே.உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ. கொடியேற்றினர்.

**கிருஷ்ணகிரி:** ஓசூர் மாநகர 7வது வார்டில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஓசூர் மாநகர துணைச் செயலாளர் ஐ.நூர் தலைமையில் ஏழை எளிய மக்களுக்கு இலவச சிறப்பு பரிசு வழங்கப்பட்டது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் நூற்றுக்கும் மேற்பட்டோர் இணைந்தனர். மாவட்டச் செயலாளரும் தளி சட்டமன்ற உறுப்பினருமான டி.ராமச்சந்திரன், விவசாய சங்க மாநில துணைத்தலைவர் எம்.லகுமையா மற்றும் மாவட்ட மாநகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டம், செட்டியார்பட்டியில் மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ்.எம்.பி. கொடி ஏற்றிவைத்தார். நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர் எஸ்.வீராச்சாமி, துணைச் செயலாளர் கணேசமூர்த்தி, நகரச் செயலாளர் அய்யணன், ஒன்றிய கவுன்சிலர் வக்கீல் பகத்சிங், வரதராஜன், இளைஞர் பெருமன்ற வைரமுத்து, சக்திவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**திண்டுக்கல்:** திண்டுக்கல் கட்சி அலுவலகத்தில் மாவட்ட பொருளாளர் கே.ராஜாங்கம் தலைமையிலும், மாவட்ட செயற்குழு உறுப்பினர் எஸ்.ஜெயமணி முன்னிலையிலும், பழ.வெள்ளைச்சாமி கொடி ஏற்றினார். மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன், வி.பாலகணேசன், பிரபாகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**தஞ்சைவடக்கு:** தஞ்சை வடக்கு மாவட்டம், அம்மாபேட்டை ஒன்றியம், அம்மாபேட்டை பேரூராட்சிக்குட்பட்ட புத்தூர் நடுப்பட்டியில் கிளைச் செயலாளர் எம்.ராஜாமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. கட்சி கொடியை ஒன்றிய செயலாளர் ஆர்.செந்தில்குமார் ஏற்றி வைத்தார்.





**கள்ளக்குறிச்சி:** கள்ளக்குறிச்சி திருநாவலூர் கெடிலத்தில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மாவட்ட செயலாளர் எம்.வெங்கடேசன் தலைமையில் மீசை ஆறுமுகம் கொடியேற்றினார். உடன் கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**தஞ்சை தெற்கு:** தஞ்சை தெற்கு மாவட்ட கட்சி அலுவலகத்தில் அமைப்பு தின நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட செய லாளர் முத்து.உத்திராபதி தலைமை வகித்தார். கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் ஜி.கிருஷ்ணன் கொடி ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். மாநகர செயலாளர் ஆர்.பி.முத்துக்குமரன், நிர்வாகிகள் வீரமோகன், ஆர்.கே.செல்வகுமார், ஆர்.பி.பக்கிரிசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**வடசென்னை:** வடசென்னை மாவட்டம், வியாசர்பாடி மகசின்புரம் பகுதி டாக்டர் அம்பேத்கர் சிலை அருகில், த.ஒ.வா.இ. மாவட்டத் தலைவர் சந்தோஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. கட்சிக் கொடியினை மூத்த தோழர் பி.ராஜாராம் ஏற்றி வைத்தார். த.ஒ.வா.இ. மாநில தலைமைக்குழு உறுப்பினர் லி.உதயகுமார், ச.கோவிந்தன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



# தமிழகம் முழுவதும் வெண்மணி தியாகிகள்

## நினைவேந்தல் நிகழ்ச்சி

**வர்க்கப் போராட்டத்தில் உயிர் நீத்த கீழ வெண்மணி தியாகிகளுக்கு திருத்துறைப்பூண்டி காமராஜர் சிலை அருகில் தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் திருத்துறைப்பூண்டி ஒன்றிய, நகரக் குழுக்களின் சார்பில் ஒன்றியச் செயலாளர் ஆர்.மகாலிங்கம், நகரத் தலைவர் எல்.பக்கிரிசாமி தலைமையில் வீரவணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.**

கே.உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளரும், ஒன்றியப் பெருந்தலைவருமான அ.பாஸ்கர், மற்றும் கட்சியின் ஒன்றியச் செயலாளர் கே.பாலு, நகரச் செயலாளர் எம்.முருகேசன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு தியாகிகளுக்கு மலர் தூவி வீரவணக்கம் செலுத்தினர்.

**திருவள்ளூர் :** தமிழ்மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் சார்பில் திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், எம்.ஜி.ஆர். நகரில் நடைபெற்ற உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சிக்கு சங்க மாவட்ட துணைத் தலைவர் கே.போஸ் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பிரதாப் சந்திரன், துணைச் செயலாளர் எம்.பி.குமார், ஒன்றியச் செயலாளர் கே.குமரேசன், மாவட்டக்குழு உறுப்பினர் சிவனேசன், எஸ்.கருப்பசாமி, ஜி.எம்.சம்பத், செங்குன்றம் சிறுகடைகள் சங்க செயலாளர் ஏ.ஆதாம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**அம்மாப்பேட்டை:** தஞ்சை மாவட்டம், அம்மாபேட்டை நால் ரோட்டில் கீழவெண்மணி தியாகிகளுக்கு அஞ்சலியும், உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியும், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பாக மாவட்ட தலைவர் ஆர்.எஸ்.பாலு தலைமையில் நடைபெற்றது. ஏஐடியூசி மாவட்ட செயலாளர் ஆர். தில்லைவனம், சிபிஐ ஒன்றிய செயலாளர் ஆர். செந்தில்குமார், துணைச் செயலாளர் எஸ்.எம்.குருமூர்த்தி, நகரச் செயலாளர் கே. ராஜாராமன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



**மதுராந்தகம் :** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் ஒன்றியம், மெய்யூர் கிளை செயலாளர் செ.இன்பராஜ் தலைமையில் வெண்மணி தியாகிகள் நினைவேந்தல் கூட்டம், இளைஞர் பெருமன்ற மாவட்ட தலைவர் கே.வி.சேகுவேராதாஸ் தலைமையில் தியாகிகளுக்கு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது. பிலாப்பூர் கதிர்வேல், பி.மணிகண்டன், பி.அப்பாதுரை, கிளை துணை செயலாளர் நாகராஜ் மற்றும் முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.



**தருமபுரி:** தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க தருமபுரி மாவட்டக்குழு சார்பில் பி.எஸ். என்.எல். அலுவலகம் முன்பு சங்க மாவட்ட தலைவர் ஜி.மாதையன் தலைமையில் நடைபெற்றது. இதில் சங்க மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன், மாவட்ட துணை தலைவர்கள் ஜி. ராஜகோபால், என்.முருகேசன், மாவட்ட துணை செயலாளர் ஜி.பச்சாகவுண்டர், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வெ.பை. மாதையன், நல்லம்பள்ளி ஒன்றிய தலைவர் எல். சி.கிருஷ்ணன், மாதேமங்கலம் கிராம ஊராட்சி மன்ற தலைவர் சங்கர் ஆகியோர் பேசினர்.

**விருதுநகர்:** விருதுநகரில் தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பில் கீழவெண்மணி தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாநில குழு உறுப்பினர் முத்துக்குமார் தலைமையில், சிபிஐ மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், காதர் முகையதின், பாண்டியன், செல்வம், மாரீஸ்வரி உள்பட பலர் கலந்து கொண்டு வீர வணக்கம் செலுத்தினர்.

# பெண்களின் திருமண வயதை சட்ட ரீதியாக உயர்த்தக் கூடாது



ஜி.ஆர்.இரவீந்திரநாத்



**சென்ற இந்திய விடுதலை நாள் நிகழ்ச்சியில் சொற்பொழிவாற்றிய பிரதமர் மோடி, ''மத்திய அரசு, நமது சகோதரிகள் மற்றும் மகள்களின் உடல் நலம் குறித்து தொடர்ச்சியாக அக்கறை செலுத்துகிறது. அவர்களை சத்துணவு குறைபாட்டிலிருந்து காப்பற்ற அவர்கள் சரியான வயதில் திருமணம் செய்வது அவசியம்'' என்று கூறினார்.**

''இந்த முயற்சி பெண் குழந்தைகள் மற்றும் இளம் பெண்களின் அதிகாரத்தை வலுப்படுத்தும். அவர்கள் கல்வி பெறுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கும். பேறுகாலத் தாய்மார்களின் இறப்பு விகிதத்தையும், பச்சிளங் குழந்தைகளின் இறப்பு விகிதத்தையும் குறைத்திட உதவும்'' என மத்திய அரசுத் தரப்பில் கூறப்படுகிறது.

இதன் அடிப்படையில் பெண்களின் திருமண வயதை 18 லிருந்து 21 ஆக உயர்த்திட மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதை இப்பிரச்சனை குறித்து ஆராய அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரை அடிப்படையில் செய்வதாக மத்திய அரசுத் தரப்பில் கூறப்படுகிறது.

பெண்கள் திருமணம் செய்து கொள்ளும் வயது உயர வேண்டுமா என்றால் நிச்சயம் உயர வேண்டும். பெண்கள் திருமண செய்து கொள்ளும் வயது உயர்வது, பல்வேறு வகையிலும் பெண்களுக்கு நன்மை பயக்கும். ஆனால் சட்டத்தின் மூலம் திருமண வயதை உயர்த்தக்கூடாது. இது பல்வேறு பிரச்சனைகளை உருவாக்கும்.

பெண்கள் மீதான ஆணாதிக்கத்தை வலுப்படுத்தும். தங்களது எதிர்காலத்தை தீர்மானித்துக் கொள்வதற்கான, வாழ்க்கை துணையை தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான, பெண்களின் சுய நிர்ணய உரிமையை பறித்து விடும்.

ஊட்டச்சத்தை உறுதி செய்தல், பேறுகாலத் தாய்மார்களின் இறப்புவிகிதத்தை குறைத்தல், பச்சிளங் குழந்தைகளின் இறப்பு விகிதத்தை குறைத்தல், அவர்களின் கல்வி வாய்ப்பை அதிகரித்தல், பெண்களின் அதிகாரத்தை வலுப்படுத்தல், என்ற போர்வையில், பெண்களின் உரிமைகளுக்கு எதிராக, மத்திய அரசு பெண்களின் திருமண வயதை சட்டம் மூலம் உயர்த்துவது கண்டனத்திற்குரியது.

மருத்துவ ரீதியான காரணிகளை முன்வைத்து மதவாத – சாதிய சக்திகள், தங்களின் ஆணாதிக்க பண்பாட்டு மற்றும் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள பெண்களின் திருமண வயதை பயன்படுத்த முயல்கின்றன. இது ஏற்புடையதல்ல.

பிரதமர் மற்றும் மத்திய அரசு முன் வைக்கும் வாதங்கள் உண்மைக்கு மாறானவை. பெண்களின் சட்ட ரீதியான திருமண வயது 1978 ல் 16 லிருந்து 18 ஆக உயர்த்தப்பட்டது. இது நடைமுறைப் படுத்தப்பட்டு 40 ஆண்டுகளுக்கும் மேலாகி விட்டது.

இருப்பினும் ஏன் இன்று வரை 18 வயதுக்கு கீழுள்ள பெண் குழந்தைகளின் திருமணங்களை முற்றிலும் நிறுத்த முடியவில்லை?

இன்றும் 23 விழுக்காடு திருமணங்கள் 18 வயதுக்கு கீழுள்ள பெண் குழந்தைகளின் திருமணங்களகவே உள்ளன என, 2019–20 ஆண்டின், தேசிய குடும்ப நல ஆய்வறிக்கை 5, தெரிவிக்கிறது.

தற்போது நடைமுறையில் இருக்கின்ற இச்சட்டத்தால் ஏன் இந்த குழந்தை திருமணங்களை தடுக்க முடியவில்லை? என்ற கேள்வி எழுகிறது.

இதற்கு பெரும்பாலும், குடும்ப வறுமை, கிராமப்புற பின்தங்கிய நிலைமை, கல்வி – வேலை வாய்ப்பு, சமூகப் பொருளாதார பாதுகாப்பு இன்மையே காரணங்களாகும்.

அதேசமயம், பெண்கள் அனைவரும் காத்திருந்து 18 வயது முடிந்த அடுத்த நாளே காதல் திருமணம் செய்வதில்லை. அதே போல் பெற்றோர்கள் அனைவரும் காத்திருந்து 18 வயது முடிந்த அடுத்த நாளே தங்கள் மகள்களுக்கு திருமணம் செய்வதில்லை.

பொதுவான சமூகப் பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் காரணமாகவும், கடந்த 40 ஆண்களில் ஏற்பட்ட கல்வி மற்றும் வேலை வாய்ப்பு வசதிகளாலும், இந்தியப் பெண்களின் சராசரி திருமண வயது படிப்படியாக உயர்ந்து, தற்போது 22.1 ஆக உள்ளது.

இது 1961 ல் வெறும் 15.7 ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது.

எனவே, தற்போது பெண்களின் சராசரி திருமண வயது 22.1 ஆக உயர்ந்திருக்கும் நிலையில், எதற்காக சட்டம் போட்டு பெண்களின் திருமண வயதை 21 வயதாக உயர்த்த வேண்டும்?

பெண்களின் திருமண வயதை உயர்த்துவதால் அவர்களின் ஊட்டசத்து குறைபாட்டை, வளர்ச்சி குறைபாட்டை சரி செய்திட முடியும் என முன் வைக்கும் வாதமும் தவறானது.

பெண்களுக்கு குழந்தைப் பருவம் முதல் ஊட்டச்சத்து மிக்க, சரிவிகித உணவு போதிய அளவில் கிடைக்காததே அவர்களின் வளர்ச்சி குறைவுக்கு (stunting) முக்கியக் காரணம். உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யாமல் திருமண வயதை உயர்த்துவதின் மூலம் இதை சரி செய்திட இயலாது.

18 வயதுக்கும் குறைவான பெண்கள் மட்டுமல்ல, குழந்தைகளும், அனைத்துவயது பெண்களுமே ஊட்டசத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். வறுமையும், உணவு பாதுகாப் பின்மையுமே இதற்குக் காரணம். உதாரணத்திற்கு, 59 மாதங்களுக்கு குறைவான வயதுடையை குழந்தைகளில் 67 விழுக்காட்டினர் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனைத்து வயது பெண்குழந்தைகள் மற்றும் மகளிரில் 50 விழுக்காட்டினருக்கு மேல் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஐந்து வயதுக்கும் குறைவாக உள்ள குழந்தைகளில் ஏற்படும் இறப்புகளில் மூன்றில் இரண்டு பகுதி ஊட்டச்சத்து குறைபாட்டால் (under nutrition ) தொடர்பான பிரச்சனைகளால் ஏற்படுகிறது.

35 விழுக்காடு வளர்ச்சிக் குறைபாடும் அதாவது வயதுக்கு ஏற்ற உயரம் வளராமை (Stunting) நீண்ட கால ஊட்டச்சத்து குறைபாட்டால் (Chronic Undernutrition) ஏற்படுகிறது.

17 விழுக்காடு குழந்தைகள் தீவிரமான ஊட்ட மற்றும் நுண்மச் சத்து குறைபாட்டால் (wasting) உயரத்திற்கு ஏற்ற எடை இல்லாமல் பாதிக்கப்படுகின்றனர்.

9.3 லட்சம் குழந்தைகள் தீவிரமான ஊட்ட மற்றும் நுண்மச் சத்து குறைபாட்டால் (Acute severe malnutrition) பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே,

**<u>அனைத்து வயது பெண்களும், குழந்தைகளும் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், உணவு பாதுகாப்பை சிறு வயது முதல் உத்தரவாதப்படுத்தாமல், திருமண வயதை உயர்த்துவதால் இப்பிரச்சனையை எவ்வாறு தீர்க்க முடியும்?</u>**

பெண்களின் திருமண வயதை உயர்த்துவதால், சட்டத்திற்கு புறம்பான கருக்கலைப்புகளும், பாதுகாப்பற்ற கருக்கலைப்புகளும், அதனால் ஏற்படும் பேறுகாலத்தாய்மார்களின் உயிரிழப்புகளும் அதிகரிக்கும். ஏற்கனவே, கருக்கலைப்பில் 56 % பாதுகாப்பற்ற கருக்கலைப் பாக உள்ளது. பாதுகாப்பற்ற கருக்கலைப்பால் ஒரு நாளைக்கு 10 முதல் 13 பெண்கள் இறக்கின்றனர்.

பேறுகாலத் தாய்மார்கள் இறப்பு விகிதத்தில் 8 முதல் 20 விழுக்காடு கருக்கலைப்பு, இரத்தசோகை, இரத்தப்போக்கால் ஏற்படுகிறது.

இந்நிலையில் இவ்வாறு, திருமண வயதை உயர்த்துவது பேறுகால தாய்மார்களின் இறப்பு விகிதத்தை எவ்வாறு குறைக்கும்?

அது சட்டத்திற்கு புறம்பான கருக்கலைப்பு மற்றும் பாதுகாப்பற்ற கருக்கலைப்புகளை அதிகரிக்கவே செய்யும்.

எனவே, திருமண வயதை உயர்த்துவதால், பேறுகால தாய்மார்களின் இறப்புவிகிதம் குறையும் என்ற மத்திய அரசின் வாதம் தவறானது.

கல்வி தனியார் மயமானதும், வணிகமயமானதும், பொதுத்துறை நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படுவதும், மத்திய மாநில அரசுகள், அரசு வேலைவாய்ப்பை அதிகரிக்காததும், காலிப் பணியிடங்களை நிரப்பாததும் பெண்களின் கல்வி வேலை வாய்ப்பை பாதிக்கிறது.

திருமண வயதை உயரத்துவதின் மூலம் இப்பிரச்சனையை எவ்வாறு சரிசெய்ய முடியும்?

எனவே, பெண்களுக்கு ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை இலவச கல்விவழங்கல், விடுதி வசதி, கழிப்பறை வசதி, கல்வி, வேலை வாய்ப்புகளில் 50 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கல், தனியார் துறைகளில் இட ஒதுக்கீடு வழங்குதல், சம வேலைக்கு சம ஊதியம் வழங்குதல், தொழில் பயிற்சி மற்றும் மானியம், வங்கிக்கடன், பள்ளி, கல்லூரி மற்றும் வாழ்விடத்தில் பாதுகாப்பான சூழல் கிடைக்கச் செய்தல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும்.

பெண்களுக்கு அறிவியல் மற்றும் சுகாதாரக் கல்வி, பாலியல் கல்வி, இலவச மற்றும் பதுகாப்பான கருத்தடை மற்றும் கருக்கலைப்பு வசதிகள், மருத்துவ வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

ஒரு பெண், தான் விரும்பும் போது, விரும்பும் எண்ணிக்கையில், விரும்பும் இடைவெளிவிட்டு குழந்தைப் பெறும் உரிமையை பெற வேண்டும். பெண்களுக்கு இனப்பெருக்க உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு வழங்கப்பட வேண்டும்.

பெண்களுக்கு குழந்தை பருவம் முதல் புரதம், கொழுப்பு, கார்போஹைட்ரேட்டு, வைட்டமின், நுண்மச் சத்துகள் அடங்கிய சரிவிகித உணவை இலவசமாக, அங்கன் வாடிகள், சமுதாய சமையல் கூடங்கள், பள்ளி, கல்லூரிகளில் வழங்கிட வேண்டும்.

சட்டமன்ற, நாடாளுமன்றத்தில் 33% இட ஒதுக்கீடு வழங்கி அரசியல் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

ஒரு பெண், தான் விரும்பும் போது, சாதி, மத, இன பேதமின்றி தான் விரும்பும் நபரைத் திருமணம் செய்துகொண்டு அச்சமின்றி, சமூகப் பொருளாதாரப் பாதுகாப்புடன் வாழக்கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டும்.

இது போன்ற நடவடிக்கைகளால், பெண்களின் சமூகப் பொருளாதார கலாச்சார வாழ்வில் முற்போக்கான மாற்றங்களை செய்வதால், சமூகப் பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்வதால், கல்வி வேலை வாய்ப்பை உறுதி செய்வதால் ,இளம் வயதில், அதாவது 19 முதல் 21 வயதுக்குள் திருமணங்கள் செய்து கொள்வதை தவிர்க்கக்கூடிய சூழலை, வாழ்நிலையை உருவாக்க முடியும்.

அத்தகைய தீர்வே, சரியானதாகவும், சிறந்ததாகவும், சிக்கல்கள் குறைந்ததாகவும் அமையும்.

தொடர்புக்கு: **99406 64343**

# ஆர்.எஸ்.ஜேக்கப் வாத்தியார் மறைவு

## இரா.நல்லகண்ணு இரங்கல்


ஆர்.எஸ்.ஜேக்கப் வாத்தியார் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

நெல்லை சதி வழக்கில் நீண்ட காலம் சிறையிலிருந்த கம்யூனிஸ்ட் ஆர். எஸ்.ஜேக்கப் வாத்தியார் மறைந்தார்...

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமறைவாக இயங்கிய 1948–50களில் நெல்லை சதி வழக்கு போடப்பட்டது. எனது பால்ய கால நண்பரும், எழுத்தாளருமான ஜேக்கப் வாத்தியர் அவர்களின் திடீர் மறைவு என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. நெல்லை சதி வழக்கில் இப்போது இருப்பவர்களில் நானும் அவரும் தான்.

ஒரு கிராமப்புற பள்ளிக்கூடத்தின் உறுதிமிக்க கிறிஸ்துவ ஆன்மிகவாதியாக, ஆசிரியராகப் பணியைத் தொடங்கிய ஆர். எஸ்.ஜேக்கப் அவர்கள் மீதும் சதி வழக்கு பாய்ந்தது.

கடுமையான சித்திரவதை கொடுமையிலும், கம்யூனிஸ்ட்டுகளை காட்டிக் கொடுக்க மறுத்துவிட்டதோடு, அவர் கைது செய்யப்பட்டு மூன்றாண்டு காலம் சிறையில் வாடினார். காவல்துறையினர் கடுமையாக அவரை தாக்கிவிட்டு கட்சிக்காரர்கள் கொள்கைப் பிடிப்போடு இருந்து காட்டிக் கொடுக்க மறுப்பார்கள், நீ ஏன் காட்டிக் கொடுக்க மறுக்கிறாய் என்று கேட்ட போது, ஜேக்கப் வாத்தியார் அவர்கள், நான் ஜூலியஸ் பூசிக் எழுதிய தூக்குமேடை குறிப்புகள் நூல் படித்தேன். அதனால்தான் இந்த உறுதியைப் பெற்றேன் என்று மறுமொழி கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



அவரது தாயாரும், மனைவியும் எப்போதும் கட்சிக்கு ஆதரவாகவே இருந்து வந்தனர். நாங்கள் அடிக்கடி அவரது இல்லத்திற்குச் செல்கிறபோது, இன்முகத்தோடு அவர்கள் பழகி இருக்கிறார்கள்.

வாத்தியார் உபதேசியாகவும் ஆன்மீகவாதியாகவும் நல்ல சமூக சிந்தனை உள்ளவராகவும் சமத்துவ வாதியாகவும் வாழ்ந்தவர்.

மரண தண்டனையையே சந்திக்க நேர்ந்தபோதிலும் சிறிதும் மனம் கலங்காமல் தன்னுடைய நிலையில் உறுதியாக நின்று ஒரு கிறிஸ்துவ கம்யூனிஸ்டாக இறுதி வரை வாழ்ந்தவர் ஆசிரியர் ஆர் எஸ் ஜேக்கப்..

இவ்வாறு இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



டி.ராஜா

## வர்க்கமற்ற, சாதியற்ற சமுதாயம் படைத்திட வீறுநடை போடும்

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி




**96 ஆண்டுகளுக்கு முன்பு, 1925ம் ஆண்டு டிசம்பர் 26ம் நாள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உதயமானது. இந்தியத் திருநாட்டுடன் இயல்பான, உயிரோட்டம் மிக்க பிணைப்பைக் கொண்டிருக்கிறது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி. நமது குடியரசின் நவீன வரலாற்றில் இடம்பெற்றுள்ள பல புகழ்மிகு, முற்போக்கு இயக்கங்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையேற்று இருக்கிறது.**

காந்திய இயக்கத்தில் திருப்தியடையாத, விடுதலைப் போராட்டத்தின் செயல்திட்டத்தை மேலும் தீவிரம் கொண்டதாக, முற்போக்கானதாக மாற்றிட விரும்பிய, செயல்துடிப்பும், தத்துவார்த்த முனைப்பும் கொண்ட எண்ணற்ற இளந்தோழர்கள் சங்கமிக்கத் தொடங்கினர். நாடு முழுவதிலும் இருந்து ஒன்றிணைந்த இந்தத் தோழர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க கான்பூர் மாநாட்டில் முதல் முறையாக ஓரணியாகத் திரண்டனர்.

இந்த மாநாட்டின் ஊடாக, அமைப்பு ரீதியிலான கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கான விதை இந்திய மண்ணில் விதைக்கப்பட்டது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எண்ணற்ற இடையூறுகளை எதிர்கொண்டது; சமுதாயத்தில் நிலவி வரும் வர்க்க, சாதிய, மற்றும் பாலின முரண்பாடுகளை எதிர்கொண்டது; மக்களின் நன்மதிப்பையும், செல்வாக்கையும் பெற்றது.

விடுதலைப் போராட்ட காலத்தின் பல்வேறு புரட்சிகர இலட்சியங்கள் இடதுசாரி இயக்கங்களில் இருந்து கிளர்ந்து எழுந்தவை ஆகும். வரலாற்றின் விரிந்த பரப்பில், பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட பல பக்கங்கள் நமக்கென அர்ப்பணிக்கப்பட்டவை ஆகும்.

கட்சியின் 97 வது அமைப்பு தினத்தை முன்னிட்டு, வருங்காலத்தில் நாம் நடத்தவிருக்கும் போராட்டங்களுக்கு உத்வேகம் அளிக்கக்கூடிய அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பக்கங்களில் சிலவற்றை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தென்னாப்பிரிக்காவில் இருந்து மகாத்மா காந்தி இந்தியா திரும்பிய பிறகு, லட்சக்கணக்கான மக்கள் ஆங்கிலேயருக்கு எதிரான போராட் டத்தில் இணைந்தனர்; விடுதலைப் போராட்ட இயக்கம் வெகுமக்கள் இயக்கமென வடிவம் கொண்டது.

ஜார் மன்னனின் கொடுங்கோன்மைக்கு எதிரான ரஷ்ய மக்களின் வீரஞ்செறிந்த போராட்டத்தில் இருந்து உத் வேகம் பெற்ற கதார் கட்சி மற்றும் வங்கம், உ.பி, பஞ்சாப் உள்ளிட்ட பிரதேசங் களை மையமாகக் கொண்ட புரட்சிகர அமைப்பு களைச் சார்ந்த இடதுசாரிகள் இந்த வளர்ச்சிப் போக்கில் முக்கிய பங்காற்றினார்.

அரசியல் சமவெளி தளத்தில் பூகம்பமாய் வெடித்துக் கிளம்பிய ரஷ்யப் புரட்சி இந்திய சூழலின் மீதும் அதன் தாக்கத்தைப் பதித்தது. அதன் காரணமாக, நமது தேசத் தலைவர்கள் தத்துவார்த்த போராட்டத்தின் மாண்பையும், இந்திய வெகுமக்களின் புரட்சிகர போர்க் குணத்தையும் விரை வாக உணர்ந்தனர்.

இடதுசாரி தலைவர்களும், தொழிலாளர்களும் இணைந்து 1920ம் ஆண்டில் ஏ.ஐ.டி.யு.சி–ஐ உருவாக்கினார்கள். இந் திய தொழிலாளி வர்க்கத்தின் முன்னோடி அமைப்பான ஏ.ஐ.டி .யு.சின் முதல் தலைவராக லாலா லஜ்பத் ராய் பொறுப் பேற்றார்.

பகத்சிங் மற்றும் அவரது தோழர்கள் சோஷலிச லட்சியங் களுக்காக உயிர்த் தியாகம் புரிந்தனர். அவர்களது அளப்பரிய தியாகம், ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து களம் கண்ட லட்சக் கணக்கான இளைஞர்களுக்கு உத் வேகமூட்டியது; போராட்டத்தின் கோரிக்கைகள் ஒரு தீர்க் கமான வடிவத்தை அடைந்த நிலையில் , கம்யூனிஸ்ட் இயக்க முன்னோடியான எம்.என்.ராய் அரசியல் நிர்ணய சபைக்கான கோரிக்கையை முதன் முதலாக எழுப்பினார்.

## அஜாய் பவனில் 97-வது அமைப்பு தின கொண்டாட்டம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 97–வது அமைப்பு தின கொண் டாட்டம், கட்சியின் தலைமையகமான அஜாய் பவனில் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஆண்களும், பெண்களும் தங்கள் குடும்பத்தினருடன் பெருந்திரளாகப் பங் கேற்றனர். வண்ணமயமாக அலங்கரிக்கப்பட்ட அஜாய் பவனில், கட்சியின் டெல்லி மாநிலக் குழுவின் கலாச்சார அணியைச் சார்ந்த இளம் தோழர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் டி. ராஜா செங்கொடியை ஏற்றிவைத்தார். டெல்லி மாநிலக் குழுவின் செயலாளர் தோழர் தினேஷ் வர்ஷ்னே, என்.சிதம்பரம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அமைப்பு தின கொண்டாட்டத்தை ஒட்டி, கட்சியின் மையத் திற்கு நீண்ட காலமாக தொடர்ந்து சேவையாற்றி வரும் மூத்த தோழர்களான பாலகிருஷ்ணன், அனில் ராஜிம்வாலே மற்றும் ராஜன் ஆகியோருக்கு டி.ராஜா சால்வை அணிவித்து சிறப்பு செய்தார். முன்னதாக, அனைத்திந்திய மாணவர் பெருமன் றத்தின் பொதுச்செயலாளர் தோழர் விக்கி மூத்த தோழர்களின் பங்களிப்பை விரிவாக எடுத்துரைத்தார்.

இக்கூட்டத்தில் எழுச்சி உரையாற்றிய டி. ராஜா, இன்றைய அரசியல் நிலை மற்றும் வருங்கால கடமைகள் குறித்து விளக்கமாகப் பேசியதன் சுருக்கம் பின்வருமாறு:

நாடு விடுதலை பெற்ற பிறகு, பொதுத்துறை நிறுவனங்கள், திட்டமிடல், தேசியமயமாக்கல், மொழிவாரி மாநிலங்கள், வேளாண் மற்றும் தொழில்துறை மேம்பாட்டுக்கான புதிய கொள்கைகளுக்காக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து போராடியது. அந்தப் போராட்டங்களின் விளைவாக இந்தியா ஒரு தலைசிறந்த வளரும் நாடாக முன்னேறியது. விடுதலைப் போராட்டத்தில் எவ்விதத்திலும் பங்கேற்காத ஆர்.எஸ்.எஸ். அமைப்பு நவபாரதத்திற்கான முற்போக்கு கொள்கைகளைத் தொடர்ந்து எதிர்த்து வந்தது. வகுப்புவாத, சாதிய, மதவாத பிளவுகளை மக்களிடையே ஆழப்படுத்தியது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையும், ஜனநாயகத்தையும் அழித்தொழிக்க முயன்று வருகிறது. இந்துத்துவத்தின் பிடியில் பெண்கள் தலித்துகள் மற்றும் பின்தங்கிய பிரிவினரைச் சிக்கவைக்க போலியான இந்துத்துவ உணர்வைப் பரப்புகிறது.

பெருமுதலாளிகளான அம்பானி மற்றும் அதானியின் ஆதிக்கப் பிடிக்குள் இந்திய அரசு சிக்கியுள்ளது. உலக அளவில் இந்தியா வறுமை குறியீட்டில் 101வது இடத்தில் உள்ளது. இதே நிலையிலும்கூட மோடி அரசாங்கம் அம்பானி மற்றும் அதானி உள்ளிட்ட கார்ப்பரேட்டுகளுக்கு அடிமை சேவகம் செய்வதில் கட்டுண்டு கிடக்கிறது. விவசாயிகள், தொழிலாளர்கள், பெண்கள், இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் தலித்துகள் இந்த ஆட்சியில் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாகி வருகிறார்கள்.

ஆர்எஸ்எஸ் பாஜக ஆட்சியில் நாடாளுமன்றம் புறந்தள்ளப் படுகிறது. அடுத்ததாக, அவர்கள் கம்யூனிஸ்டுகள் மீது குறி வைத்து தாக்குகிறார்கள். நாமும் தகுந்த பதிலடி கொடுப்போம். கம்யூனிஸ்ட்கள் மீது தாக்குதல் தொடுத்தால், அவர்கள் அதன் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் எண்ணற்ற இளைஞர்கள் தொடர்ந்து இணைந்து வருகிறார்கள். கட்சி மேலும் வலிமை அடைந்து வருகிறது. இவ்வாறு டி ராஜா பேசினார்.

டெல்லி மாநிலக் குழுவின் சார்பாக மாநில செயலாளர் தோழர் தினேஷ் வர்ஷ்னே அமைப்பு தின வாழ்த்துரை நிகழ்த்தினார். பண்பாட்டு கலை நிகழ்ச்சிமீயுடன் அமைப்பு தின கொண்டாட்டம் நிறைவுற்றது.



**தொழிலாளி வர்க்கக் கட்சி பாட்டாளி வர்க்கத்தை ஒன்று திரட்டுவதையும், அவர்களுக்கு அரசியல் கல்வி மற்றும் போராட்டப் பயிற்சி அளிப்பதையும் முக்கியக் கடமையாகக் கொண்டு செயல்பட வேண்டும்.**
**– ஏங்கல்ஸ்**

பூரண சுதந்திர முழக்கத்தை எழுப்ப காங்கிரஸ் இயக்கம் தயக்கம் கொண்டிருந்த போது, 1921ம் ஆண்டிலேயே ஆங்கிலேயரிடம் இருந்து பூரண சுதந்திரம் பெற வேண்டும் என்று மவுலானா ஹஸ்ரத் மொஹானி முழங்கினார். 1925ம் ஆண்டில் நடைபெற்ற கான்பூர் மாநாட்டின் வரவேற்பு குழுத் தலைவராக இவர் பொறுப்பேற்று இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



இந்திய சமுதாயத்தின் பல்வேறு தரப்பு மக்களையும் அணிதிரட்டுவதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முன்னணி வகித்தது. அனைத்திந்திய மாணவர் பெருமன்றம், அகில இந்திய விவசாயிகள் சங்கம், முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கம் ஆகிய அமைப்புகளை 1936ம் ஆண்டில் துவங்கப்பட்டது.

இந்திய மக்கள் நாடக மன்றம் (இப்டா) 1943ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது.

வெகுமக்களின் நலன்களைப் பாதுகாக்க உறுதிபூண்டிருந்த இவ்வியக்கங்கள் விடுதலை வேட்கையையும், சோஷலிச லட்சியத்தையும் நாடெங்கும் பரப்பின.

நமது தேசத்தின் மீது ஆங்கிலேய அரசின் பிடி தளர்ந்த போது, தேசத்தின் விடுதலை நெருங்கிக் கொண்டிருந்த போது, பம்பாயில் நடைபெற்ற கப்பற்படை கலகத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அளித்த ஆதரவானது, இனி அதிகாரப் பிரயோகத்தின் மூலமாக இந்தியர்களை ஆளுவது சாத்தியமற்றது என்று ஆங்கிலேயரை உணரச் செய்தது. எழுச்சிமிகு இடதுசாரி இயக்கத்தின் முன் போலீஸ் மற்றும் இராணுவம் உள்ளிட்ட ஆங்கிலேயரின் அடக்குமுறை கட்டமைப்புகள் நொறுங்கிப் போயின.

புதிதாகத் தோன்றியிருந்த இடதுசாரி இயக்கத்தின் போர்க் குணத்தை விரைவில் உணர்ந்து கொண்ட ஆங்கி லேயர், ஒன்றன்பின் ஒன்றாக சதி வழக்குகளைக் கட்டவிழ்த்து விட்டனர். எதிர்பட்ட இன்னல்களுக்கு அஞ்சிடாத தோழர்கள் நாடெங்கிலும் இடதுசாரி இயக்கத்தைப் பரப்பினர்.

வீரஞ்செறிந்த கப்பற்படை கலகத்தைக் கண்டு ஆங்கி லேயர் கதிகலங்கி இருந்த போது, பம்பாயில் மாபெரும் வேலை நிறுத்தத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முன்னெடுத்தது. ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் பங்கேற்ற பேரணியையும் கட்சி நடத்தியது. இது ஆங்கிலேயர் வெளியேறுவதைத் தவிர்க்க முடியாததாக்கிவிட்டது.

வெகுமக்கள் இயக்கங்களின் ஊடாக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொருளாதாரப் பிரச்சனைகளை முறைப்படுத்தியதோடு, அவற்றை தேசிய செயல்திட்டத்தின் ஒரு பகுதியாகவும் இணைத்திட வித்திட்டது.

**நமது அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள பல்வேறு முற்போக் கான, ஏழை மக்களுக்குச் சாதகமான அம்சங்கள் அனைத்தும் அது போன்ற மக்கள் இயக்கங்களின் ஊடாக இடதுசாரிகள் முன்வைத்த கோரிக்கைகளே ஆகும்.**

இத்தகைய மகத்தான வரலாற்றுப் பெருமையுடைய நாம், நம் முன் உள்ள எண்ணற்ற சவால்களை எதிர்கொண்டு முறியடித்திட உத்வேகம் கொண்டு எழ வேண்டும். ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள ஆர்.எஸ்.எஸ் ஐ எதிர்கொள்வது தான் நம் முன் உள்ள மிக முக்கியமான சவால் ஆகும்.

ஆர்.எஸ்.எஸ் பா.ஜா.க ஆட்சிக்கு வந்திருப்பது வெறும் ஆட்சிமாற்ற நிகழ்வு மட்டுமன்று. 2014 ம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பில் இருந்து ஒரு கட்சியை நீக்கிவிட்டு மற்றொரு கட்சி ஆட்சிப் பொறுப்பேற்றுவிட்ட நிகழ்வாக மட்டுமே புரிந்து கொண்டுவிட முடியாது.

ஆர்.எஸ்.எஸ்பா.ஜ.க அதிகாரத்தைக் கைப்பற்றி இருப்பது நமது ஜனநாயக குடியரசின் பண்புவகை சார்ந்த மாபெரும் பின்னடைவு ஆகும். நமது அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ள, நமது தேசத்தை வரையறை செய்துள்ள உன்னதமான விழுமியங்களுக்கு எதிரான செயல்திட்டத்தை பா.ஜ.க கொண்டிருக்கிறது.

விடுதலைப் போராட்ட காலகட்டத்தின் முழுவதிலும் ஆர்.எஸ்.எஸ் ஆங்கிலேயருக்கு ஆதரவாகவே செயல்பட்டது. மகாத்மா காந்தியின் படுகொலையில் அந்த அமைப்பின் தலைவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஆவர். ஆர்.எஸ். எஸ் அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொள்வதில்லை என்பதோடு சாதிய படிநிலைகளையும், பாகுபாடுகளையும் முன்னிறுத்தும் மனுஸ்மிருதியை உயர்த்திப் பிடிக்கிறது.

பெண்களுக்கு சமஉரிமையும், சமத்துவமும் அந்த அமைப்பில் மறுக்கப்படுகிறது. இன்று வரையில், ஆர்.எஸ். எஸ் அமைப்பில் பெண்கள் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை.

தேச விடுதலைக்கு முன்பு, ஆர்.எஸ்.எஸ் அமைப்பினர் பிரிட்டிஷாருக்கு விசுவாசமாக இருந்தனர். இப்போது அரசாங்கத்துடன் நெருக்கமாக இருக்கும் முதலாளிகளுக்கு விசுவாசமாக இருக்கின்றனர்.

மதச்சார்பின்மை, சகிப்புத்தன்மை மற்றும் பன்மைத்துவம் ஆகிய இலட்சியங்களைப் பெரும்பான்மைவாதம், வெறுப்புணர்வு மற்றும் ஒற்றைத்தன்மை கொண்டு மாற்றியமைப்பது தான் அவர்களின் செயல்திட்டம் ஆகும்.

வகுப்புவாதம் மனித வாழ்வின் அனைத்துப் பரிமாணங்களிலும் புரையோடிப் போக முயலுகிறது. சாதிய பாகுபாடும், வெறுப்புணர்வும், வன்முறைத் தாக்குதல்களும் அதிகரித்து வருகின்றன. இந்தப் பிரச்சனைகளைப் பொருளாதார சுரண்டலுக்கு எதிரான நமது போராட்டத்துடன் இணைத்து நாம் முன்னெடுக்க வேண்டும்.

மதச்சார்பற்ற, ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகளின் ஒற்றுமையை உறுதிப்படுத்திட, நம்மைச் சூழ்ந்து வரும் பிரச்சனைகளை நாமே செயலூக்கத்துடன் முன்னெடுத்து தொடர்ந்து போராட வேண்டும். பின்னர், அந்தப் போராட்டங்களுக்கு அரசியல் வடிவம் கொடுக்க வேண்டும்.

சர்வதேச நிதி மூலதனத்தின் வளர்ச்சிப் போக்கால் நமது மக்கள் சுரண்டப்படுவதையும், சாதி, மதம் மற்றும் பாலின அடிப்படையில் நம் மக்களே உண்டாக்கி வரும் பாகுபாடுகளையும் நாம் உணர்ந்திடல் வேண்டும். இந்தப் போராட்டத்தைத் தத்துவார்த்த மற்றும் வரலாற்றுப் பொறுப்பாக ஏற்க வேண்டியது நமது பணியாகும்.

இடதுசாரிகள் மட்டுமே ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் சித்தாந்த ரீதியாக எதிர்க்கும் ஆற்றல் உடையவர்கள்; தேசத் தின் முன்னேற்றத்திற்காக ஒரு நிலையான கூட்டணியை உருவாக்கும் ஆற்றல் உடையவர்கள். அளப்பரிய தியாகம் மற்றும் போராட்டங்களின் ஒளிவீசும் மரபை நமது முன்னோர்கள் வடித்துச் சென்றுள்ளார்கள். நாம் அதனைச் செழுமைப்படுத்த வேண்டும். நமது கட்சியின் அமைப்பு தினத்தை முன்னிட்டு, இந்திய சமுதாயத்தில் நிலவி வரும் அனைத்து வகையான (சமூக, பொருளாதார, மற்றும் அரசியல்) அநீதிகளையும் ஒழித்திட நாம் உறுதியேற்க வேண்டும் – சமூகநீதி முன்னோடியான டாக்டர். பீமராவ் அம்பேத்கர் வழங்கியுள்ள அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ள உயரிய நோக்கங்களை அடைய நாம் உறுதியேற்க வேண்டும்.

அரசியல் நிர்ணய சபையில் அம்பேத்கரின் தொலைநோக்கு பார்வை கொண்ட இறுதி உரையானது நமக்கு வழிகாட்டும் ஒளிக் கீற்றாகத் திகழ்கிறது. அராஜக போக்கு, தனிநபர் வழிபாடு ஆகியவற்றை விடுத்து, அரசியல் ஜனநாயகத்தை மட்டுமின்றி – சமூக ஜனநாய கத்தையும் ஸ்தாபிக்கப் பணியாற்றுமாறு அவர் மக்களுக்கு அறைகூவல் விடுத்தார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் தலைமைச் சிற்பியான அம்பேத்கர் போற்றிக் கொண்டாடிய இலட்சிய முழக்கங்கள் நிறைவேறாமல் இருப்பதை இப்போதும் நம்மால் காண முடிகிறது. வர்க்கமற்ற, சாதிகளற்ற சமுதாயம் என்ற இலட்சியத்தை அடைந்திட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பாதையாக அமைந்திட வேண்டும்.

நன்றி – நியூ ஏஜ், தமிழில்: **அருண் அசோகன்**

## 2022 மே மாதம் 20, 21, 22ல்

# தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநில மாநாடு

மன்னார்குடியில் 25.12.2021 அன்று நடைபெற்ற தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

## மாநிலக்குழு கூட்டம் தீர்மானம்

தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி மொழி என்கிற சட்டப்பூர்வமான நிலை இருந்தும் கூட தமிழ்நாடு அரசுப் பணிகளில் தமிழ் தெரியாதவர்களும் சேர்ந்தார்கள்.

இந்த நிலையை மாற்றிட, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் தமிழ் மொழிப் பாடத்தில் தேர்ச்சி பெறுவது கட்டாயம் என அறிவித் ததுடன் அதற்கான பாடத்திட்டங்களையும் விரைந்து வகுத்துள்ள தமிழ்நாடு அரசுக்கு தபிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது.

மனோன்மணீயம் சுந்தரனார் எழுதிய 'நீராரும் கடலுடுத்த ...' என்ற தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை தமிழ்நாட்டின் மாநில அரசுப் பாடலாக அறிவித்து, எல்லா அரசு நிகழ்ச்சிகளிலும் அப்பாடலைப் பாட வேண்டும் எனவும், அப்போது அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும் என்றும், மாநில அரசு விழாக்களில் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் என்கிற அரசின் ஆணையை கலை இலக்கியப் பெருமன்றம் வரவேற்கிறது.

இளம் தொல்லியல் கல்வெட்டியல் ஆய்வாளர்களை உருவாக்கும் வகையில் 1997ஆம் ஆண்டு வரையில் நடைபெற்று வந்த கோடைக்கால கல்வெட்டியல் பயிற்சி வகுப்புகளை மாவட்ட தலைநகரங்களில் தமிழக அரசின் தொல்லியல் துறை மீண்டும் நடத்திட வேண்டும் என தமிழக அரசை பெருமன்றம் கோருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள பழமையான பாறை ஓவியங்கள், நடுகற்கள், கல்வெட்டுகள் முதலான தொல்லியல் சின்னங்களை உரிய தடுப்பு வேலிகள் அமைத்துப் பாதுகாத்து முழுமையாக ஆவணப்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாநிலக்குழுக் கூட்டம் கோரிக்கைவிடுக்கிறது.

### மாநில மாநாடு – அமைப்புநிலை:

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநில மாநாட்டை வரும் 2022 மே மாதம் 20, 21, 22 ஆகிய மூன்று நாட்களில் விருதுநகர் மாவட்டம் சாத்தூரில், சிறப்பாக நடத்தவும் அந்த மாநாட்டில் அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சம்மேளனத்தின் தலைவர்கள், தமிழ்நாட்டிலுள்ள சிறந்த எழுத்தாளர்கள், திரைக் கலைஞர்கள், படைப்பாளிகளையும் பங்கேற்கச் செய்யவும் முடிவு செய்யப்பட்டது. முன்னதாக அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மாநாடுகள், பேரவைக் கூட்டங்களை, பெருமன்றத்தின் வைரவிழா நிகழ்ச்சிகளை நடத்தி முடிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

இத்துடன் மேலும் பல தீர்மானங்கள் நினைவேற் றப்பட்டன. கூட்டத்திற்கு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலத் துணைத் தலைவர் தி.சு. நடராசன் தலைமை வகித்தார்.

மாநிலப் பொதுச்செயலர் இரா. காமராசு, பொருளாளர் ப.பா. ரமணி, துணைத் தலைவர்கள் வை. செல்வராஜ், கோ. கலியமூர்த்தி, துணைப் பொதுச் செயலர் ஹாமீம்முஸ்தபா, மாநிலச் செயலர்கள் பா. ஆனந்தகுமார், நாணற்காடன், பிரபாகரன் மற்றும் அனைத்து மாவட்டச் செயலர்கள், தலைவர்கள், மாநிலக் குழு உறுப்பினர்கள், எழுத்தாளர்களும் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை திருவாரூர் மாவட்டத் தலைவர் அண்ணாதுரை, மாவட்டச் செயலர் ம.சந்திரசேகரன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

முன்னதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் செயலாளர் தோழர் ப.மாணிக்கம் மற்றும் புதுவை கவிஞர் வெ.நாரா இருவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுவதையொட்டி அவர்களது படத்திறப்பு நடைபெற்றது.



**வர்க்க முரண்பாடு உள்ள சமுதாயத்தில் பாகுபாடற்ற நடுநிலையான சமூக விஞ்ஞானம் இருக்க முடியாது. முதலாளித்துவம் கூலி அடிமைத்தனத்தை நியாயப்படுத்தும், தொழிலாளி வர்க்கம் அதை ஒழிக்க போராடும் - லெனின்**




>> 1ம் பக்கத் தொடர்ச்சி

என்று சொன்னார். ஆகவே இந்தப் பாடத்தை ஏற்கனவே தமிழகத்து மக்கள் புரிந்து கொண்டார்கள். ஆனால், இந்திய அளவிலே நாம் இந்தப் பாடத்தை யாருக்குப் புகட்ட வேண்டுமோ அவர்களுக்குப் புகட்டிட வேண்டும் என்று பாடமாக இருக்கக்கூடிய இந்த படத்தைத் திறந்து வைத்திருக்கக் கூடிய இந்த நிகழ்ச்சியில் அத்தனை பேரும் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### வீரமும் தீரமும் நிறைந்தவர்!

“மதுரையில் தா.பா.பேசும்போது, நான் நின்று பேசி இருக்கிறேன், இப்போது உட்கார்ந்து பேசுகிறேன் என்றார். இடுப்பு எலும்பு அவருக்குப் பழுதாகி அதனால் உடல்நலிவுற்றிருக்கிறது. ``என் மண்டை ஒழுங்காகத்தான் ஒத்துழைக்கிறது. நான் சாகும்வரை தட்டி எழுப்புவேன்! என்னை மட்டுமல்ல என்னுடைய செம்படையையும் எந்தக் கொம்பனாலும் அடக்க முடியாது'' என்று குறிப்பிட்டுச் சொன்னார். இந்த வீரமும், தீரமும்தான் தோழர் தா.பாண்டியன்.

தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சியை வீழ்த்த வேண்டும் என்று அன்றைக்குச் சபதம் எடுத்தார்.

‘தானாக எதுவும் மாறாது! நாம் தான் மாற்ற வேண்டும்!’ என்று சொன்ன தோழர் தா.பா.அவர்கள், “வெற்றி விழா கூட்டத்தில் சந்திப்போம்!” என்று முழங்கினார். மீண்டும் மீண்டும் சொல்கிறேன், என்னுடைய வருத்தமெல்லாம் இவ்வளவு பெரிய வெற்றியைப் பார்க்காமலே சென்று விட்டார் என்பது நம்மை வாட்டிக் கொண்டிருக்கிறது.

உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்த நேரத்தில் பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட் டிருந்தபோது நான் பலமுறை நேரடியாக அவரைச் சந்தித்தேன். அவர் தன்னுடைய உடல்நலத்தைப் பற்றி நாங்கள் விசாரித்துக் கொண்டிருப்போம். ஆனால் அதைப்பற்றியெல்லாம் பதில் சொல்லமாட்டார். அரசியலைப் பேசுவார். நாட்டு நிலைமையைப்பற்றி பேசுவார். மத்தியில் நடக்கக்கூடிய ஆட்சியினுடைய கொடுமையைப் பற்றி பேசுவார்.

தியாகம், அதுவும் பொதுவுடைமை இயக்கத்தின் தியாகம் என்பதற்கு எடுத்துக்காட்டு என்றால், அது தோழர் ஜீவா அவர்கள். தோழர் ஜீவாவை எல்லோரும் சொன்னார்கள். தோழர் ஜீவா அவர்களை நான் பார்த்தது கிடையாது. நான் அவரது உரையைக் கேட்டது இல்லை. தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடி எங்களிடத்தில் அதை நினைவுப்படுத்தி எடுத்துச் சொல்லுவார். எப்படிப்பேசுவார் என்பதை கலைஞர் அவர்கள் பேசியும் எங்களிடத்தில் காட்டுவார். அத்தகைய தோழர் ஜீவா அவர்களால் உருவாக்கப்பட்டு, ஜீவாவைப் போல தமிழ்நாடு முழுவதும் முழங்கி வந்தவர்தான் தோழர் தா.பா. அவர்கள்.

### இலக்கியத்திலும் தேர்ந்தவர் தா.பா.!

தமிழ்நாட்டு மேடைகளை ஆட்சி செய்தவர்கள் என்று பட்டியலிட்டால் அதில் தோழர் தா.பா. அவர்களின் பெயர் நிச்சயம் இடம்பெறும். அந்த அளவுக்குத் தனிச்சிறப்பான பேச்சாளர். மிகப்பெரிய கருத்தியல்களையும் எளிமையாக, பாமரர்களுக்கும் புரியும் வகையில் எடுத்துக்சொல்லக்கூடிய ஆற்றலைப் பெற்றிருப்பவர். கொள்கை சார்ந்து பேசுவது என்றால் அதைப்போல சீரியசாகப் பேசுவது என்று இல்லாமல் நகைச்சுவையாகவும் பேசுவார்.

அவரது இன்னொரு தனித்தன்மை, தலைவர் கலைஞர் அவர்களைப் போலவே, அரசியலில் மட்டுமில்லாமல் இலக்கியத்தையும் இணைத்து இரண்டிலும் பயணித்தவர் நம்முடைய தோழர் தா.பா. அவர்கள். தோழர் ஜீவா அவர்கள், கலை இலக்கியப் பெருமன்றம் தொடங்கியபோது, தோழர் தா.பா. அவர்களைப் பொதுச் செயலாளராக நியமித்தார்கள். அத்தகைய இலக்கிய ஆளுமையாகவும் தா.பா. இருந்தார்.

அரசியல் மேடைகளைப் போலவே இலக்கிய மேடைகளிலும் வலம் வந்தார். தா.பா. அவர்கள். மேடைகளில் பேசுவதைப் போலவே, எழுத்திலும் பயணித்தார். அவர் எழுதிய புத்தகங்களே அதற்குச்சாட்சியமாக இருக்கின்றன.

### எழுதியும் – பேசியும் – போராடியும்– வாதாடியும் வலம் வந்தவர்!

**‘ஜனசக்தி’ இதழில் ‘சவுக்கடி’ என்ற தலைப்பில் அவர் எழுதிய கடைசிப் பக்கம் அனைவராலும் விரும்பிப் படிக்கப்பட்ட பகுதியாக இருந்தது. இப்படி நித்தமும் எழுதியும், பேசியும், போராடியும், வாதாடியும் வலம் வந்தவராக இருந்தவர் தோழர் தா.பா.அவர்கள். தோழர் தா.பா. அவர்களது படத்திறப்பு, புகழஞ்சலிக் கூட்டத்தை இந்தப் பெரியார் திடலில் ஏற்பாடு செய்தது மிகமிக பொருத்தமானது. இறுதிக் காலத்தில் அவர் அடிக்கடி பெரியார் திடல் கூட்டங்களில்தான் கலந்து கொண்டிருக்கிறார்.**

### வாழ்நாளெல்லாம் தந்தை பெரியார் புகழ் பாடியவர்!

பெரியாருக்குத் ‘தந்தை’ என்ற பட்டம் ஏன் என்பதற்கு யாரும் சொல்லாத விளக்கத்தைச் சொன்னவர் நம்முடைய தோழர் தா.பா.அவர்கள். ‘தன் சொத்தையும், குடும்பச் சொத்தையும், கழகச் சொத்தையும் சேர்த்து தாய் தந்தை இல்லாத பிள்ளைகளைத் தத்தெடுத்து, வளர்த்து, அந்தப் பிள்ளைகளுக்கு தனது இனிஷியலைக் கொடுத்து, அடையாளம் கொடுத்து, படிக்க வைத்து, பட்டம் பெறவைத்து, அந்தப் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைக்கும் ஒரு மனிதரைத் தந்தை என்று சொல்லாமல், யாரைத் தந்தை என்றுசொல்வது?'' என்று கேட்டவர் தோழர் தா.பா. அவர்கள். அதனால்தான் அவரது படத்திறப்பு பெரியார் திடலில் நடப்பது பொருத்தமானது என்று நான் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். திராவிட இயக்கமும், பொதுவுடைமை இயக்கமும் இணைந்து பயணிக்க வேண்டும் என்று தோழர் தா.பா. அவர்கள் வலியுறுத்தி வந்தார்கள். சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரும், தந்தை பெரியாரும், தோழர் ஜீவாவும் இணைந்திருந்த காலம்போல் உருவாக வேண்டும் என்று அடிக்கடி அவர் குறிப்பிட்டிருக்கிறார். அப்படித்தான் செயல்பட்டு வருகிறோம் என்பதன் அடையாளம்தான் திராவிட இயக்கத் தலைவர்களும், பொதுவுடைமை இயக்கத் தலைவர்களும் இந்த மேடையில் ஒருசேர உட்கார்ந்து இருப்பது! நமக்குள் இருப்பது தேர்தல் உறவு அல்ல; கொள்கை உறவு! கம்யூனிஸ்ட் தோழர்கள் சொல்லும் பொன்னுலகை உருவாக்கத்தான் நாம் நினைக்கிறோம். அத்தகைய சுயமரியாதை, சமதர்ம சமூகத்தை உருவாக்க நாம் அனைவரும் தோழமையுடன் செயல்படுவோம். அதுவே தோழர் தா.பாண்டியன் அவர்களுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்து, தோழர் தா.பா. அவர்களுக்கு எனது செவ்வணக்கத்தைச் செலுத்தி விடைபெறுகிறேன். இவ்வாறு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

### டி.ராஜா

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா பேசியதாவது:

தோழர் தா.பாண்டியன் அவர்களை நான் சந்தித்தது கல்லூரியில் படிக்கும் காலத்தில்தான். அதற்கு முன்னர் நான் பயின்ற குடியாத்தம் கல்லூரியில், பொருளாதாரத்துறை சார்பில் ஒரு கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் ஒருவர் பேசினார். அவர்தான் பேராசிரியர் செல்லப்பா அவர்கள். அவர் பேசிய பேச்சு எல்லோரையும் சிலிர்ப்புக்குள்ளாக்கியது. இந்தப் பேராசிரியர் புரட்சிகரமான சிந்தனைகளை கொண்டவராக இருக்கிறாரே யார் இவர் என விசாரித்தேன். அப்போது சொன்னார்கள், இந்த பேராசிரியரை இப்போது பார்க்கிறீர்கள். இவரது தம்பி பாண்டியனை நீங்கள் பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட தோழர் பாண்டியனை மதுரை வேலையின்மைக்கு எதிரான ஒரு மாநாட்டில் சந்தித்து அவரது உரையைக் கேட்டேன்.

தோழர் தா.பாண்டியன் வேலையின்மைக்கு எதிராக பேசிய போது, வல்லான் பொருள் குவிக்கும் தனியுடைமை தகர்ந்து வர வேண்டும் பொதுவுடைமை, அப்போதுதான் எல்லோருக்கும் கல்வி, எல்லோருக்கும் வேலை, எல்லோருக்கும் மருத்துவம் என்று எல்லோரும் எல்லாமும் பெற்று ஒளிமிக்க வாழ்க்கையை வாழ முடியும் என்று பேசினார்.

நான் அப்போதிலிருந்து கட்சி அமைப்புக்குள்ளிருந்து சக தோழனாக செயல்பட்டிருக்கிறேன். தோழர் பாண்டியன் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மட்டுமல்ல, இந்திய மத வெறி பாசிஸ்ட்டுகளுக்கு எதிராகவும் போராடியவர்.

அதுமட்டுமல்ல, உலகம் முழுவதும் வாழ்கிற தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர். ஈழத் தமிழர்கள் கொல்லப்பட்டபோது அவர்களுக்காக களம் கண்டவர். இந்திய மக்களை தட்டி எழுப்பியவர் தா.பா.

ஒருமுறை லண்டன் மாநகரில் நடைபெற்ற “பிரிட்டிஷ் போரம்” மாநாட்டில் நானும், தோழர் தா.பா.வும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பங்கேற்றோம். அம்மாநாட்டில் இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தமிழக தலைவர்கள் பலரும் பங்கேற்றனர்.

நாங்கள் எல்லாம் இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் காக்கப்பட வேண்டும், நீதி கிடைக்க வேண்டும் என “ஹவுஸ் ஆப் காமன்” கூட்டத்தில் குரல் கொடுத்தோம்.

தமிழ்மொழி, தமிழ்மக்கள் உரிமைகள், இந்த தமிழ் மாநிலத்தின் உரிமைகள் என்று வரும்போது முன்னின்று போராடியவர் தா.பாண்டியன்.

வளமிக்க தமிழகமும், வளிமையான இந்தியாவும்

>> தொடர்ச்சி 13ம் பக்கம்

## கோயில் மனை வாடகை நிர்ணயக் குழு

# திருத்தி அமைக்க வேண்டும்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

தமிழ்நாட்டில் நீண்ட காலமாக நீடித்து வரும் கோயில்மனை குடியிருப்போர் பிரச்சனைகளுக்கு அரசு சுமூக தீர்வு காண்பது அவசியமாகும். இதில் மடங்கள், திருச்சபைகள், மசூதிகள் உள்ளிட்ட வழிபாட்டு அமைப்புகளுக்கு சொந்தமான நிலங்களில் குடியிருப்போர் பிரச்சினைகளும் அடங்கியிருக்க வேண்டும்.

வீடில்லாத, எந்த இடத்திலும் வசிப்பதற்கு மனை நிலம் இல்லாத ஆயிரக் கணக்கான குடும்பங்கள், அந்தந்த கோயில்களின், வழி வழியான அறங்காவலர்களின் அனுமதி பெற்று, கோயில் நிலங்களை சீர்படுத்தி, அதில் வீடு கட்டி வழிவழியாக வாழ்ந்து வருகின்றன.

இதில் கரடுமுடாக, கற்குவியலாக கிடந்த நிலத்தை மேம்படுத்தியது, வீடு கட்டியது என அனைத்துச் செலவுகளும் மனையில் வசித்து வரும் குடும்பத்தினரின் உழைப்பிலும், சேமிப்பிலும், கடன் பெற்றும் செய்யப்பட்டதாகும்.

கோயிலுக்கு சொந்தமான அடி மனை நிலத்திற்கு வசித்து வரும் குடும்பங்கள் கோயில் நிர்வாகத்துக்கு ஆண்டு குத்தகை செலுத்தி வந்தனர்.

ஆண்டுக் குத்தகை செலுத்தும் முறையை மாற்றி, வீட்டின் நில மதிப்பின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யும் புதிய முறையை அரசு அமலாக்க தொடங்கியது.

இதனால் கடுமையான வாடகை தொகை அதிகரித்தது. இதனைத் தொடர்ந்து வாடகை வசூலில் தேக்கமும், நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக கோயில் மனையில் குடியிருப்போர் பாதுகாப்புக் கேட்டு அரசிடம் தொடர்ந்து முறையிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் கோயில் மனை உள்ளிட்ட அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மனைகள், வீடுகள், கட்டிடங்கள், கடைகளுக்கான வாடகை நிர்ணயம் செய்ய அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் உறுப்பினர்களாக அரசின் பல்வேறு துறைகளின் தலைவர்கள் மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவில் கோயில் மனைகளில் குடியிருப்போர் கருத்துகள் பிரதிபலிக்க வாய்ப்புகள் வழங்கப்படவில்லை.

அதிகாரவர்க்கத்தின் அக உணர்வு மட்டுமே ஆதிக்கம் செலுத்தும். அதுவும் தலைமைச் செயலாளர் முன்வைக்கம் கருத்துக்கள் மட்டுமே செல்வாக்கு செலுத்தும் என்பதை கருத்தில் கொண்டு, வாடகை நிர்ணயக் குழுவில் கோயில் மனை குடியிருப்போர் சங்கப் பிரதிநிதிகளையும் இணைக்கும் வகையில் தற்போது அமைக்கப்பட்ட குழுவை திருத்தி அமைக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## ஜனசக்தி வளர்ச்சி நிதி

கோவை மாவட்டம், சூலூர் தெற்கு வட்டாரம், கண்ணம் பாளையத்தில், ஏஐடியூசி மாவட்ட பொருளாளர், கோவை மாவட்ட அமைப்பு சாரா தொழிலாளர் சங்க செயலாளர் பி.சுப்பிரமணியம் – செல்வி தம்பதியர், கட்சியின் சூலூர் தெற்கு வட்டாரக்குழு உறுப் பினர் எஸ்.பிரசாத், கட்சி உறுப்பினர் எஸ்.பிரதாப் ஆகியோரது புதுமனை புகுவிழா நடைபெற்றது.

கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பெ.மௌனசாமி, வட்டாரகட்சி செயலாளர்வே.வசந்தகுமார், கண்ணம்பாளையம் வடக்கு கிளை செயலாளர் ர.மாலதி உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர். பி.சுப்பிரமணியம் குடும்பத்தார் சார்பில் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.2000 அளிக்கப்பட்டது.

>> 12ம் பக்கத் தொடர்ச்சி

உருவாக வேண்டும் என சிந்தித்தவர். மாநில உரிமைகளை மத்தியில் இருக்கக் கூடிய ஒன்றிய அரசு பறிக்க முயற்சித்தால் அதை எதிர்த்து போராட வேண்டும் என்று கூறியவர் தா.பா.

நானும் தோழர் தா.பாண்டியனும் லண்டன் சென்றபோது, ஹைகேட் கல்லறைக்கு சென்று மார்க்சுக்கு வீர வணக்கத்தை தெரிவித்துக் கொண்டோம். அப்போது தான் நான் தெரிந்து கொண்டேன் தோழர் தா.பாவின் உள்ளத்தில் மார்க்ஸ் எவ்வாறு இடம் பெற்றிருக்கிறார் என்பதை. மார்க்ஸ் ஒரு பேரறிஞர். ஒரு பெரும் தத்துவஞானி. இந்த உலகம் மாற்றப்பட வேண்டும். மாற்றத்திற்காக நாம் போராட வேண்டும் என நாம் பெரியார் திடலில் நின்று கொண்டு பேசுகிறோம். பெரியார் நமது மண்ணில் பிறந்த ஒரு மாபெரும் போராளி. பெண்ணுரிமைக்காக போராடிய போராளி.

இந்தியாவில் இன்று எழுந்து கொண்டிருக்கிற ஆபத்துகள் என்று சொன்னால் சாதிய கட்டமைப்புகள், சுரண்டல் கட்டமைப்புகள், ஆண்– பெண் வேறுபாடுகள் இவற்றை எல்லாம் நாம் என்ன செய்வது? தோழர் பாண்டியன் விட்டுச் சென்ற பணி என்னவென்றால் நாம் எல்லோரும் ஒன்றுபட்டு போராட வேண்டும். இந்தியாவை காப்பதற்காக, இந்திய அரசியல் சட்டத்தை காப்பதற்காக, இந்திய அரசியல் சட்டம் என்ன சொல்கிறது, இந்தியா ஒன்றியங்களின் குடியரசு என்றுதான் சொல்கிறது. கூட்டாட்சி அல்லது சமஸ்டி ஆட்சி இன்று நிலை குலைகிறது. டெல்லியில் இருக்கிற அரசால் மாநில உரிமைகள் நிலை குலைகிறது.

டாக்டர் அம்பேத்கர் தான் சொன்னார், இந்தியா என்பது ஒரு மதச்சார்பற்ற குடியரசாக இருக்க வேண்டும் என்று. அம்பேத்கர் கொள்கைகளை எல்லாம் ஆர்.எஸ்.எஸ். தகர்க்கிறது. சமீபத்தில் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் சொன்னார், மத்திய அரசின் ரிமோட் கன்ரோல் ஆர்.எஸ்.எஸ். என்று. இது ரிமோட் கன்ரோல் அல்ல. மாறாக ஆர்.எஸ்.எஸ். மத்திய அரசை நேரடியாகவே கட்டுப்படுத்துகிறது.

ஆர்.எஸ்.எஸ். கட்டுப்பாட்டில் உள்ள அரசாக மத்திய அரசு உள்ளது. ஜனநாயகத்தை நிலை குலைய வைக்கிற ஒரு அமைப்புதான் ஆர்.எஸ்.எஸ். என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த ஆர்.எஸ்.எஸ். இந்தியாவிற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது. அந்த அச்சுறுத்தலை நாம் முறியடிக்க வேண்டுமானால் நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயல்படவேண்டும், போராட வேண்டும். நாம் அப்படி செயல்படுவதுதான் தோழர் தா.பாண்டியன் அவர்களுக்கு நாம் செலுத்துகிற வீரவணக்கமாகும்.

இதுதான் இந்த நாட்டிற்கு நல்வாழ்வு தரும் என்பதையும் தெரிவித்து, பங்கேற்ற தலைவர்கள் அனைவருக்கும் தேசியக்குழு சார்பில் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு பேசினார்.

### தோழர் இரா.நல்லகண்ணு

தா.பா.வின் குடும்பம் வெள்ளையர் ஆட்சிக்காலத்திலேயே சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட குடும்பம். தா.பா.வும் தனது சிறு வயதிலேயே விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்தவர்.

பேச்சு, எழுத்து ஆற்றல், ஆளுமையும் மிக்கவராக விளங்கியவர். தந்தை பெரியார்மீது அதிகப் பற்றுடன் இருந்தவர். ஜனநாயகம், சமதர்மம் தழைக்கப் பாடுபட்டவர். மதவாத சக்திகளை வீழ்த்தவேண்டும் என்பதில் தம் பங்களிப்பைப் பெரும் அளவில் தந்தவர். போர்க்குணம் என்பது அவருக்கு இயல்பாகவே இருந்தது என்று புகழாரம் சூட்டினார் தோழர் இரா.நல்லகண்ணு.

### இரா.முத்தரசன்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து பேசியது வருமாறு:

தோழர் தா.பா.வின் குடும்பமே நல்ல கல்வி அறிவு பெற்ற குடும்பம். அவருடைய அண்ணன் செல்லப்பா காரைக்குடி அழகப்பா கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றியவர். தா.பாண்டியனும் அதே பல்கலைக் கழகத்தில் ஆங்கிலக் கல்வி விரிவுரையாளராகப் பணியாற்றியவர். சிவப்புச் சூறாவளி என்று தோழர் தா.பா.அழைக்கப்பட்டார்.

தமிழ் மாநில விவசாய சங்க செயலாளராகப் பணி யாற்றிய தோழர் துரைமாணிக்கம் அண்மையில் காலமானார். அவரது இரு மகன்களும், ஒரு மருமகனும் என்னைச் சந்தித்து ஒரு பையை ஒப்படைத்தனர். அந்தப் பையில், ஓர் உறையில் ரூ.10 ஆயிரம்; இன்னொரு உறையில் ரூ.5 ஆயிரம்; மற்றொரு உறையில் ரூ.16 ஆயிரம் இருந்தது. மறைந்த துரைமாணிக்கம் அவர்கள் அந்தப் பண உறைகளை வைத்திருந்த பையோடு கட்சிக்கு ஒப்படைப்பதாகக் கூறிய போது ஆயிரக்கணக்கான பொதுமக்களும் அப்படியே நெகிழ்ந்து போனார்கள்.

26.12.2021 அன்று பெரியார் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலையில் உள்ள மணியம்மையார் சிலையைப் புடவை போட்டு மூடியிருக்கின்றனர். நேற்றிரவு பொன்னேரியில் தந்தை பெரியார் சிலையைச் சேதப்படுத்தியுள்ளனர்.

இதுபோன்ற செயல்கள் ஆங்காங்கே நடக்கும்போதெல்லாம் மனநலம் பாதிக்கப்பட்ட ஆசாமி இதனைச் செய்துவிட்டார் என்று கூறிப் பிரச்சினையை முடித்து விடுவது வாடிக்கையாகி விட்டது. அது என்ன மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பெரியார் சிலைதான் தெரியுமா? என்ற வினாவை எழுப்பிய தோழர் முத்தரசன் அவர்கள், காவல்துறையைக் கைவசம் வைத்துள்ள முதலமைச்சரின் கவனத்திற்கு இதனைக் கொண்டு வருகிறோம். இவ்வாறு பேசினார்.

### கி.வீரமணி

**திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி தனது உரையில் குறிப்பிட்டதாவது:**

**இங்கே திறக்கப்பட்டது வெறும் படமல்ல அனைவருக்கும் நல்ல பாடமாகும். கொள்கை எதிரிகளை எச்சரிக்கும் பாடமும் ஆகும்.**

**ஈரோட்டில் திராவிடர் கழக நிகழ்ச்சியில் தோழர் தா.பா. ஆற்றிய உரையை ''சமுதாய விஞ்ஞானி பெரியார்'' என்ற நூலாக வெளியிட்டோம். இதுவரை எட்டுப் பதிப்புகள் வெளியா கியுள்ளன. அதற்குப் பிறகு, அந்நூலை மேலும் விரிவாக்கித் தருமாறு கேட்டுக்கொண்டோம். அவ்வாறே சிறப்பாக மேலும் விரிவுபடுத்தி எழுதிக் கொடுத்தார். விரிவுபடுத்தப்பட்ட அந்த நூலையும் வெளியிட்டு வருகிறோம்.**

**தோழர் தா.பா.வைப்பற்றி முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஒருமுறை சொன்னார்; அதுவும் கலைஞர் வீட்டுத் திருமணத் தின்போதுதான்.**

**இப்பொழுது நம்முன் உள்ள பிரச்சினை என்ன?**

**எது நம்மைப் பிரிக்கிறதோ அதனை ஒதுக்கி வைத்து, எது நம்மை இணைக்கிறதோ அதனைப் பெரிது படுத்தி, படம் எடுக்கும் பாசிச விஷப் பாம்பை வீழ்த்தி ஜனநாயகத்தை, சமதர்மத்தைக் கட்டிக் காப்போம்.**

**நம்முடைய அணுகுமுறைகளால் தமிழ்நாட்டை வென்றது மட்டும் போதாது; இந்தியாவையும் வெல்ல வேண்டும். இந்த மேடை அதற்கொரு எடுத்துக்காட்டு என்றார்.**

### கே.எஸ்.அழகிரி

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் கே.எஸ். அழகிரி பேசுகையில், 45 ஆண்டுகளுக்குமுன் எங்கள் ஊரான கீரப்பாளையத்திற்குத் தோழர் தா.பாண்டியன் ஒரு பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள வெள்ளைக்குதிரையின்மீது ஏறி வந்தார். அவர் பேச்சை முதன்முதலாகக் கேட்டேன். உடலில் உள்ள உரோமம் எல்லாம் எழுந்து நிற்கும் அளவுக்கு இருந்தது அவரின் உரைவீச்சு வசீகரிக்கும் பேச்சு மட்டுமல்ல கொள்கையும் கொலு வீற்றிருந்தது.

### வைகோ

ம.தி.மு.க. பொதுச்செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான வைகோ அவர்கள், தா.பா. மதுரை இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி மாநாட்டில் சக்கர நாற்காலியில் அமர்ந்த வண்ணம் கர்ஜனை செய்தார்.

''இடுப்பு எலும்பும், கால் எலும்பும் பாதிக்கப்பட்டு விட்டது என்றாலும், மண்டை நன்றாகவே வேலை செய்கிறது. அதனை யாராலும் அடக்க முடியாது போரில் நாம் வெற்றி பெறுவோம்!'' என்று தோழர் தா.பாண்டியன் முழங்கியதை மறக்க முடியாது என்றார்.

### கே.பாலகிருஷ்ணன்

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் (மார்க்சிஸ்ட்) தமிழ் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மதுரை மாநகரில் நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மாநாட்டில், சக்கர நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம் அவர் கம்பீரமாக ஆற்றிய எழுச்சியுரை இன்னும் நம் காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டுள்ளது.

சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், கட்டுரையாளர், வாதிடுபவர், தொழிற்சங்கத்தலைவர், ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமை வாய்ந்தவர் என பன்முகத் திறமை கொண்டவர். தோழர் சங்கரய்யாவின் வகுப்பில் பங்கேற்று கட்சியில் சேர்ந்தவர். எனது முதல் ஆசிரியர் சங்கரய்யா என்று தா.பா.குறிப்பிடுவார். மதச் சார்பின்மை, அரசியல் சாசன அடிப்படைகள், கூட்டாட்சித் தத்துவம் போன்றவற்றை பாதுகாக்கப் போராடினார். நாமும் அதற்காகப் போராடுவதே தா.பா.வுக்குச் செய்யும் அஞ்சலி ஆகும்.

பாசிச சக்திகளைக் காலில் போட்டு மிதிக்கவேண்டும் என்று பாண்டியன் கர்ஜித்தார் என்றார்.

### தொல்.திருமாவளவன்

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், மக்களவை உறுப்பினருமான டாக்டர் தொல்.திருமாவளவன் பேசுகையில், பொதுவாக கம்யூனிஸ்டுகள் என்றால், வெறும் வர்க்கம் பற்றிதான் பேசுவார்கள் என்று கூறப்படுவதுண்டு.

இதனை மடை மாற்றம் செய்தவர் தோழர் ஜீவா. திராவிட இயக்கத்தின் மொழி உணர்வு, இலக்கியப் பார்வை, சமூகநீதி, மாநில உரிமை போன்ற பிரச்சினை களையும், பொதுவுடைமைவாதிகள் கையில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறியதோடு, அவ்வாறு செயல்பட்டவர்கள்தாம் தோழர்கள் ஜீவாவும், தா.பா.வும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அக்கறை காட்டியவர். ஜெனீவாவில் அய்.நா.வின் மனித உரிமை ஆணையத்தின் கூட்டத்திலும், ஈழத் தமிழர்களுக்காக தோழர் தா.பா. குரல் கொடுத்தது முக்கியத்துவம் வாய்ந்தது.

சங் பரிவார் கூட்டம் முன்னெடுக்கும் மதவாத, சனாதனப் பிற்போக்குத்தனத்தினை வேரறுக்க அனைவரும் ஒன்றுபடுவோம் என்று சூளுரைத்தவர் தோழர் தா.பா. என்று பேசினார்.

### கே.எம்.காதர் மொகிதீன்

இந்திய யூனியன் முசுலிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன், தா.பாண்டியன் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சிக் காரர் மட்டுமல்ல; சிறுபான்மை மக்களின் பாதுகாவலராகவும் இருந்தவர்.

'ஜனசக்தி' வெறும் காகிதம் அல்ல ஆயுதம் என்று கூறினார். தா.பாண்டியன் போன்ற பலரும் தோன்றவேண்டும் என்றும், சமூகநீதித் திசையிலும் அவர் மிகவும் ஆர்வம் காட்டினார் என்றும் குறிப்பிட்டார்.

### எம்.எச்.ஜவாஹிருல்லா

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும், சட்டப் பேரவை உறுப்பினருமான பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா தமது உரையில், தொலைக்காட்சி விவாதங்களில் தா.பா.வின் கருத்துகள் ஆணித்தரமாக இருந்ததைச் சுட்டிக்காட்டி, அவரின் ஆங்கிலப் புலமையையும் வியந்தார்.

### வேல்முருகன்

தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் எம்.எல்.ஏ. பேசும்போது, தனது தந்தையாரின் மறைவின்போதும், நினைவேந்தல் போதும் பொதுவுடைமைக் கட்சித் தோழர்கள் வந்திருந்ததை நினைவுபடுத்தினார்.

### ஏ.எம்.சலீம்

புதுச்சேரி மாநில இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் ஏ.எம்.சலீம் தனது உரையில், சிம்மக்குரலோனாகிய தோழர் தா.பா.அவர்கள் புதுச்சேரி மாநிலத்தில் கட்சியின் வளர்ச்சியில் அவர் பங்கு முக்கியமானது என்றார்.

நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினரும் பெருமளவில் கலந்துகொண்டனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் ந.பெரியசாமி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

# தமிழ்நாடு அரசு பாடநூல்களை தமிழ்நாட்டிலேயே அச்சிட வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

தமிழ்நாட்டில் முதல் வகுப்பு தொடங்கி பிளஸ் 2 வரை படிக்கும் பள்ளி மாணவர்களுக்கு தேவையான பாடநூல்கள் தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தால் தயார் செய்யப்படுகிறது. இதற்காக சுமார் 30 ஆயிரம் டன் எடை அளவு கொண்ட சுமார் 8 கோடி புத்தகங்கள் அச்சிடப்படுகின்றது. இப்படி அச்சிடும் வேலைக்காக ஏலம் மூலமாக ஒப்பந்ததாரர்கள் அமர்த்தப்படுகின்றனர். இந்த வகையில் நடப்பு ஆண்டில் பாடநூல் அச்சிடும் பணியை வெளி மாநிலங்களை சேர்ந்த நிறுவனங்கள் ஏலம் எடுத்து சென்றுள்ளனர்.

பாடநூல் அச்சிடும் பணி வெளி மாநிலங்கள் செல்வதால், தமிழ்நாட்டில் அச்சகப் பணியும், அதன் சார்புத் தொழிலும் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதாக புகார் எழுந்துள்ளது.

உலகளாவிய டெண்டர் முறையில் ஏலம் கோரப்படுவதால் இது தவிர்க்க முடியவில்லை என அரசு தரப்பில் விளக்கம் அளிக்கப்படுகிறது.

மாணவர்கள் பயிலும் பாடநூல்கள் தவறுகள் இல்லாமலும், மொழிவளம் குறையாமலும் அச்சிடும் பணிக்கு ஆயிரக்கணக்கான அச்சகங்கள் தமிழ்நாட்டில் இருப்பதை அரசு கருத்தில் கொண்டு. ஏல முறை சட்டத்தில் பொருத்தமான திருத்தம் செய்ய தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும். அதே சமயம் உலகளாவிய டெண்டர் முறையில் குறைந்த விலைப்புள்ளியில் வெளிமாநிலங்கள் குறித்து, பணியை ஒப்பந்தம் பெறுவதை தமிழ்நாடு அச்சக நிறுவனங்களும் கருத்தில் கொள்ள வேண்டும். நியாயமான செலவில், தரமான முறையில் தமிழ்நாட்டில் அச்சிடும் நிறுவனங்களுக்கு முன்னுரிமை கிடைக்கும் வகையில் தமிழ்நாடு அரசு ஏல நடைமுறைகளை எளிதாக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அறிக்கையில் இரா.முத்தரசன் கூறியுள்ளார்.

சிறப்பிதழ் சிறக்க வாழ்த்துக்கள்

ஸ்ரீ சீனிவாசா உணவகம்

11, பிளாக்கெஸ் ரோடு,
கேசினோ தியேட்டர் எதிரில்,
சென்னை – 2

### அனைத்து கல்வி நிறுவனங்களின்

# கட்டிடங்களை ஆய்வு செய்! பராமரிப்பை உறுதி செய்!

## மாணவர் பெருமன்றம் வேண்டுகோள்

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை பகுதியில் உள்ள சாஃப்டர் தனியார் பள்ளியின் கழிப்பறைச் சுவர் இடிந்து விழுந்ததில் அன்பழகன், விஸ்வ ரஞ்சன், சுதீஸ் ஆகிய 3 மாணவர்கள் பலியாகியுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும், சுமார் 4 மாணவர்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

கட்டிடங்களை முறையாக பராமரிக்க வேண்டும் என்ற சிந்தனையை விட, லாபமே குறிக்கோளாகக் கொண்டதால் ஏற்பட்ட விபத்து இது.

தனியார் பள்ளிகள் பல அனுமதி பெற்றதை விட கூடுதலான கட்டிடங்களை கட்டியுள்ளன. அடிப்படை வசதிகள் இல்லாமலும், பாதுகாப்பான சூழல் இல்லாமலும் தனியார் பள்ளிகள் இயங்கிக் கொண்டு தான் இருக்கிறது. அரசுப் பள்ளிகளும் பல கட்டிடங்கள் பாழடைந்து, இடிந்து விழும் நிலையில் இருக்கிறது. தமிழக அரசும், பள்ளிக் கல்வித் துறையும் உடனடியாக ஆய்வு மேற்கொண்டு உரிய நிதி ஒதுக்கி சரி செய்ய வேண்டும்.

சாஃப்டர் பள்ளியில் நடந்த விபத்துக்கு நிர்வாகமே முழு பொறுப்பு, குற்றவாளிகள். எனவே நிர்வாகத்தின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

பலியானவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.50 லட்சம், படுகாயம் அடைந்த மாணவர்களுக்கு தலா ரூ.20 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும்.

கொரோனா காலம் என்பதால் கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் வெந்நீரே வழங்க வேண்டும். மாணவிகளுக்கான சுகாதாரமான கழிப்பறை உறுதி செய்ய வேண்டும். என அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலக் குழு வின் சார்பில் தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாணவர் பெருமன்றத்தின் மாநிலத் தலைவர் மௌ.குணசேகர், மாநிலச் செயலாளர் தினேஷ் சீரங் கராஜ் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.

# அமைதியை சீர்குலைக்கும் இலங்கை கடற்படை

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

இராமேஸ்வரம், மண்டபம் பகுதிகளிலிருந்து 18.12.2021ஆம் தேதி கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களில் 55 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்து, அவர்களிடமிருந்து 8 மீன்பிடி படகுகளையும் பறிமுதல் செய்துள்ளது. இலங்கை அரசின் கடற்கடை தொடர்ந்து அத்துமீறி செயல்பட்டு தமிழ்நாட்டின் மீனவர் வாழ்வுரிமையை பறித்து வருவது இந்தியாவின் குறிப்பாக தமிழ்நாட்டின் அமைநிலைக்கு பெரும் குந்தகம் ஏற்படுத்துகிறது. இலங்கை கடற்படையின் அத்துமீறலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இது குறித்து ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை உறுதியான நடவடிக்கை எடுத்து இலங்கை கடற்படையின் அத்துமீறலை முற்றிலுமாக தடுத்து நிறுத்த வேண்டும். மீனவர்களை கைது செய்யும்போது படகுகளை பறிமுதல் செய்வதுடன், அதனை உடைத்தும், மீன்பிடி வலைகளை அறுத்தெறிந்து சேதப்படுத்துவதுமான அட்டூழியங்களும் தொடர்ந்து நடைபெறுகின்றன. இலங்கை அரசின் எல்லை மீறிய செயலைக் கண்டித்து மீனவர்கள் போராட்டத்தை அறிவித்துள்ளனர். இப்போராட்டத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு முழுமையான ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது. மீனவர்களின் உணர்வை பிரதிபலித்து தமிழ்நாடு முதலமைச்சர், அயலுறவுத்துறை அமைச்சருடன் பேசியிருப்பது நிலவரத்தின் தீவிரத்தை காட்டுகிறது. ஒன்றிய அரசு உறுதியான நடவடிக்கை எடுத்து தமிழ்நாட்டு மீனவர்கள் வாழ்வுரிமை காக்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# பள்ளி விபத்தில் மாணவர்கள் பலி

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

திருநெல்வேலி நகரில் உள்ள ஷாஃப்டர் மேல்நிலைப் பள்ளி யில் கழிவறை சுவர் இடிந்து விழுந்ததில் அன்பழகன், விஸ்வ ரஞ்சன் மற்றும் சுதீஸ் என மூன்று மாணவர் கள் மரணமடைந்துள்ளனர். மற்ற நான்கு மாணவர்கள் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்கு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தனியார் பள்ளிகளில் உள்ள கட்டிடங்கள், சுகாதார வசதிகள் உள்ளிட்ட பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்யும் பணியை தீவிரப்படுத்த வேண்டும்.

கோவிட் 19 முடக்க காலத்தில் கூட கல்விக் கட்டணத்தை கட்டாயப்படுத்தி வசூலிப்பதில் பிடிவாதம் காட்டிய தனியார் பள்ளி நிர்வாகங்கள் மாணவர்கள் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பாக அக்கறை காட்டாதது தான் விபத்துக்கும், உயிரிழப்புக்கும் முக்கிய காரணமாகின்றன. இந்த விபத்தில் இறந்து போன மாணவர்கள் குடும்பங்களுக்கு அரசு இழப்பீடு கொடுத்து உதவ வேண்டும்.

படுகாயம் அடைந்த மாணவர்களுக்கு முழுமையான மருத்துவ உதவி கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

பழுதடைந்த கட்டிடத்தை சீரமைக்காத பள்ளி நிர்வாகத்தின் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்

தமிழ்நாடு முழுவதும் உள்ள தனியார் பள்ளிகளின் பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு செய்து, குறைகளை குறிப்பிட்ட கால வரம்புக்குள் நிவர்த்தி செய்ய வேண்டும்

என தமிழ்நாடு அரசு உத்தரவிட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்வதுடன் விபத்தில் உயிரிழந்த மாணவர்கள் மறைவுக்கு ஆழ்ந்த அஞ்சலி தெரிவித்துக் கொள்கிறது. குழந்தைகளை இழந்து வாடும் அவர்களது குடும்பங்களுக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### தேர்தல் ஆணையர்களை அழைத்து

# மோடி பேசியது அரசியல் சட்ட விரோத அத்துமீறல்

## கே.சுப்பராயன் எம்.பி. கண்டனம்

அரசியல்சட்ட அடிப்படையில், பரிபூரண சுதந்திரத்துடன், தன்னாட்சி அதிகாரம் பெற்ற ஒரு சுயேட்சையான அமைப்புதான் தேர்தல் கமிஷன்!

எவர் ஒருவரும், எந்த அமைப்பும் தலையீடு செய்யக்கூடாத தனித்த அதிகாரம் பெற்ற தலைமைத் தேர்தல் கமிஷனரையும், இதர இணைக்கமிஷனர்களையும், தனது அலுவகத்திற்கு அழைத்து பிரதமர் மோடி பேசியது சகிக்கமுடியாத, அரசியல்சட்டவிரோத அத்துமீறலாகும்!

இது குறித்து நாட்டு மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் மோடி!

தேர்தல் கமிஷனர்களாவது, 'வரமுடியாது' என்று உறுதியான நிலை எடுத்து அரசியல் சட்டப்படி நடந்திருக்கவேண்டும்!

என்ன செய்வது? அதிகாரத்திமிருக்கு முன்னர் அவர்கள் முதுகெலும்பற்றவர்கள்!

ஜனநாயகத்தை, அரசியல் சட்டத்தை மண்ணோடு மண்ணாக்குகிறவரை மோடி தன் ஆட்டத்தை நிறுத்த மாட்டார்!

ஜனநாயக, மதச்சார்பற்ற, இடதுசாரி கட்சிகள், விவேகத்தோடுகூடிய, மக்கள் விழிப்பூட்டும் இயக்கத்தை, விரைவாக, இடைவிடாது, தொடர்ந்து நடத்த வேண்டும்!

இது காலத்தின் கட்டளை!

# விவசாயத் தொழிலாளர்களுக்கு தனி ஓய்வூதிய சட்டம் நிறைவேற்றுக

## விவசாயத் தொழிலாளர் சங்கம் கோரிக்கை




தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் 2021 டிசம்பர் 21, 22 தேதிகளில் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் மீனாட்சி திருமண மண்டபத்தில் பி பத்மாவதி மேனாள் சட்டமன்ற உறுப்பினர், வி.பி. பழனிசாமி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

பொதுக்குழு கூட்டத்தில் இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மத்திய நிர்வாகக் குழு உறுப்பினர் இரா.முத்தரசன், புதுச்சேரி அ. இராமமூர்த்தி , சங்கத்தின் பொதுச் செயலாளர் நா.பெரியசாமி, மேனாள் எம்.எல்.ஏ. பி.எல். சுந்தரம், டி.ஏ.மாதேஸ்வரன், கே.முருகன், சு. மோகன் குமார் உள்ளிட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன..

சிறு,குறு விவசாயிகள் உட்பட விவசாயத் தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.3000/= ஓய்வூதியம் வழங்கும் வகையில் தனி ஓய்வூதியச் சட்டம் நிறைவேற்ற வேண்டும்.

விவசாயத் தொழிலாளர் வாழ்க்கை நிலையை, ஆய்வு செய்ய முத்தரப்புப் பிரதிநிதிகள் கொண்ட உயர்மட்டக் குழு அமைக்க வேண்டும்

1996 2001 கலைஞர் ஆட்சியில் அமைத்த விவசாயத் தொழிலாளர் நலவாரியம் மீண்டும் அமைக்கப்பட வேண்டும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் ஆண்டுக்கு 200 நாட்கள் வேலையும், தினசரி ஊதியம் ரூ 600/ம் வழங்க வேண்டும்.

வீடில்லாத நிலமற்ற குடும்பங்களுக்கு 400 சதுர அடியில் ரூ 6 லட்சம் மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் கொண்ட வீடுகள் கட்டித் தர வேண்டும்.

மலைப்பகுதிகளில் வாழும் பெண்கள் பயன்படும் முறையில் புறநகர் பேருந்துகளில் இலவசப் பயணம் விரிவுபடுத்த வேண்டும்.

பழங்குடியினர் மற்றும் மலைவாழ் மக்களின் உடல் நலன் கருதி, கர்நாடக அரசு வழங்குவது போல் சத்துணவு தொகுப்பு வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்த வேண்டும்.

நிலமில்லாத தொழிலாளர் குடும்பங்கள், பழங்குடியினர், மலைவாழ் மக்கள் குடும்பங்களின் குடிமைப் பொருள் பங்கீட்டு அட்டைகள் அனைத்தும் முன்னுரிமை மற்றும் ஏ ஏ ஓய் குடும்ப அட்டைகளாக மாற்ற வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை 22.01.2022 திருவாரூர் 23.01.2022, திருச்சி 24. 01. 2022, சேலம் 25.01.2022 ஆகிய மையங்களில் மாநாடுகள் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

கோரிக்கைகளை வலியுறுத்தி 15.03.2022 ஆம் தேதி மாவட்டத் தலைநகர்களில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

இவ்வாறு தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் நா. பெரியசாமி கூறியுள்ளார்.

# கலைஞரின் தனி செயலாளர் கோ. சண்முகநாதன் மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தனி செயலாளர் கோ.சண்முகநாதன் (80) டிச. 21 அன்று காலமானார் என்ற துயரச் செய்தி அறிந்து அதிர்ச்சியுற்றோம்.

கோ.சண்முகநாதன் படிப்பை முடித்ததும் காவல்துறையில் சுருக்கெழுத்தராக பணியில் சேர்ந்தார். இதில் பணியாற்றி வந்த நேரத்தில் கலைஞர் அவர்களின் பேச்சுக்களை பதிவு செய்து அரசுக்கு அனுப்பி வைக்கும் பணி அவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் கலைஞர் கவனத்தை ஈர்த்து, அவரோடு இணைந்து செயல்படத் தொடங்கினார்.

கணிணி யுகத்தில் வாழும் நமக்கு அன்று ஒருவரின் பேச்சு முழுமையாக, ஒரு வார்த்தை தவறாமல் வெளிவந்ததை எண்ணிப்பார்த்தால் வியப்பாக இருக்கிறது. ஆங்கிலத்திலும், தமிழிலும் சுருக்கெழுத்தில் பதிவது, அதனை உடனடியாக தட்டச்சு செய்து கலைஞரின் ஒப்புதலை பெறுவது, உடனடியாக அச்சுக்கு தருவது என்ற இடைவிடாது பணியாற்றியவர்.

முதலமைச்சராக இருந்த நேரத்திலும், எதிர்கட்சித் தலைவராக இருந்த காலங்களிலும், கடுமையான அடக்குமுறைகளை எதிர்கொண்ட போதும் கலைஞரின் நிழல் போல் வாழ்ந்தவர். உழைப்பால் ஓய்ந்து போனது என்பது கலைஞரின் வாழ்வில் ஒரு வினாடியும் ஏற்பட்டது இல்லை. இதில் கலைஞரோடு போட்டியிட்டு உழைத்தவர் கோ. சண்முகநாதன். அவரது மறைவை எளிதில் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. அவரது வாழ்வும் பணியும் விசுவாசமும், நம்பிக்கையும் பெற்ற ஊழியராக செயல்பட விரும்புவோருக்கு ஒரு பாடமாக விளங்கும். கோ.சண்முகநாதன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த அஞ்சலி செலுத்துகிறது. அன்னாரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட கழகத் தோழர்களுக்கும் ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# மோடி அரசு பாசிஸ்ட் தன்மையில் செயல்படுகிறது

## இரா.முத்தரசன் குற்றச்சாட்டு




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் கோவையில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் மோடி அரசு பாசிஸ்ட் தன்மையில் செயல்படுகிறது. என்று குறிப்பிட்டார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாடு வரும் 2022 அக் டோபர் மாதம் 14 முதல் 18 வரை விஜயவாடாவில் நடைபெறுகிறது. இதில் அரசியல் அறிக்கை முன்வைக்கப் படும். அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அந்த அறிக்கையை தயார் செய்யும் மிக்கியமான தேசியக் கவுன்சில் கூட்டம் வரும் 2022 ஜனவரி 26, 27, 28 ஆகிய மூன்று நாட்கள் கோவையில் நடைபெறுகிறது. இந்த கவுன்சில் கூட்டத்தில் தேசியத் தலைவர்கள் மற்றும் தேசியக் கவுன்சில் உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள்.

மத்தியில் ஆளும் பி.ஜே.பி. அரசு பாசிச தன்மையுடன் செயல்பட்டு வருகிறது. விவசாயிகள் விரோத சட்ட மசோதா நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் விவாதம் இன்றி எதிர்கட்சிகளின் கடும் எதிர்ப்பிற்கு இடையில் நிறைவேற்றப்பட்டது. அது பின்னர் விவசாயிகளின் தொடர் போராட்டத்தின் காரணமாக மோடியாலேயே திரும்பப் பெறப்பட்டு மன்னிப்பும் கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இது மாதிரி ஒரு சட்டம் திரும்ப பெறப்பட்டால், அதற்கு பொறுப்பேற்று பிரதமர் தனது பதவியை ராஜினாமா செய்து இருக்கவேண்டும். அதற்கு முன்னுதாரணமும் இருக்கிறது. ராஜாஜி குலக்கல்வி திட்டத்தைக் கொண்டு வந்தார். அதை எதிர்த்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மற் றும் தி.மு.க. தமிழகத்தில் கடும் போராட்டங்களை நடத்தினோம். அவர் அந்த திட்டத்தை கைவிட்டதோடு தனது பதவியையும் ராஜினாமா செய்தார். ஆனால் மோடி ராஜினாமா செய்யாமல் நீடிக்கிறார்.

அதேபோல தொழிலாளர் விரோத மசோதா கொண்டு வரப்பட்டு அது விவாதமின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது. நீதித்துறை, தேர்தல் கமிஷன், ரிசர்வ் வங்கி ஆகியவை அரசியல் சட்டப்படி சுயேச் சையான அமைப்புகள். அவை சுயேட்சையாகத்தான் செயல்பட வேண்டும் அப்போதுதான் ஜனநாயகம் பாதுக்காப்பாக இருக்கும்.

ஆனால் அவற்றை தற்போது மோடியின் கட்டுப் பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. அவை ஆர்.எஸ்.எஸ்.ன் கொள்கை திட்டத்தை செயல் படுத்தும் அமைப்பாக மாற்றப் பட்டுள்ளது. தேர்தல் கமிஷன் தலைவரை பிரதமர் தனது அலுவலகத்திற்கு வரவைத்து பேசுகிறார். இது ஜனநாயக் நடைமுறைக்கு எதிரானது. இவை எல்லாம் மோடி அரசு பாசிசத் தன்மை உள்ள அரசு என்பதற்கு உதாரணங்களாகும்.

தொழில் துறை, விவசாயம் இவை இரண்டும் கேள்விக்குறியாகி உள்ளது. விவசாயிகள் கடும் சிரமத்துக் குள்ளாகி இருக்கிறார்கள். நாட்டில் பெருமளவில் வேலை வாய்ப்பை வழங்கி வரும் அமைப்புகள் சிறு,குறு, நடுத்தரத் தொழில்கள் இவை மோடி அரசு கடைபிடித்து வரும் கார்ப்பரேட் ஆதரவுக் கொள்கையால் மிகவும் நெருக்கடிக்கு ஆளாகி உள்ளது. அந்த அமைப்பை சேர்ந்தவர்கள் நாடு தழுவிய அளவில் இரண்டு நாள் வேலை நிறுத்தம் செய்துள்ளார்கள்.

வங்கிகள் நெருக்கடிக்கு ஆளாகி உள்ளது. வங்கி ஊழியர்கள் இரண்டு நாள் வேலை நிறுத் தம் செய்துள்ளார்கள். அந்தப் போராட்டத்தில் பத்து லட்சம் பேர்கள் கலந்து கொண்டு இருக்கிறார்கள். இந்த நாடு மிகவும் மோசமான நிலைக்கு சென்று கொண்டு இருக்கிறது.

தேசிய பஞ்சாலைகள் தற்போது மூடும் நிலையில் உள்ளது. அந்தத் தொழிலாளர்கள் ஆலைகளை இயக்க வேண்டும் என்று போராடி வருகிறார்கள். ஒன்றிய அரசு மில்களை இயக்க மறுத்தால் தமிழக அரசு அதை எடுத்த நடத்த வேண்டும் என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் கூறினார்.

இந்த பேட்டியின் போது கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்ட செயலாளர் வி.எஸ்.சுந்தரம் ஆகியோர் உடன் இருந்தனர்.

# போக்குவரத்து ஏஐடியுசி டிச.21 தமிழகம் தழுவிய ஆர்ப்பாட்டம்



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம் பேர் பணிபுரிகிறார்கள். இவர்களுக்கு 2019 செப்டம்பர் மாதம் ஊதிய ஒப்பந்தம் பேசி முடித்து சம்பள உயர்வு ஏற்படுத்தப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் இதுவரை பேசி முடிக்கப் படாமல் உள்ளது. அடுத்த ஒப்பந்தம் நெருங்கி விட்ட நிலையில் 14வது ஊதிய ஒப்பந்தம் பேசி முடித்து சம்பள உயர்வு ஏற்படுத்தப்பட வேண்டும், போக்குவரத்து கழகங்களுக்கு தேவையான நிதி வழங்கப்பட வேண்டும், காலி பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும், வேலைப்பளு குறைக்கப்பட வேண்டும், பெண்கள் இலவச பயண திட்டத்திற்கான பேட்டாவை உடனுக்குடன் வழங்க வேண்டும், பேருந்துகளுக்கு தரமான உதிரி பாகங்கள் வழங்க வேண்டும், ஒய்வு பெற்றவர்களுக்கு ஓய்வுகால பணப்பலன்கள் 20 மாதங்களாக வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளதை உடன் வழங்க வேண்டும், 2015ம் ஆண்டு முதல் உயர்ந்துவிட்ட பழைய புதிய அகவிலைப்படி உயர்வு ஒய்வூதியத்துடன் இணைக்கவேண்டும், நிலுவைதொகை வழங்க வேண்டும், 2016ஆம் ஆண்டு வாரிசு பணிக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி ஆணை வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளில் தமிழ்நாடு அரசு தீர்வு காண வலியுறுத்தி ஏஐடியூசி சார்பில் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**திருத்துறைப்பூண்டி:** ஏஐடியூசி தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக, நாகை மண்டல தொழிலாளர்கள் சார்பில் திருத்துறைப்பூண்டி நாகை சாலையில் உள்ள போக்குவரத்து கழக பணிமனை அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. எம்.ஜி.தங்கபாண்டியன், ஜி.சந்திரேசேகரன், ஆர்.பாஸ்கரன், வி.ராஜா ஆகியோர் தலைமை ஏற்று நடத்தினர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் கே.உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., கலந்துகொண்டு தொழிலாளர்களின் கோரிக்கைகளை விளக்கி கண்டன உரை நிகழ்த்தினார்.

ஏஐடியூசி மாவட்ட செயலாளர் ஆர்.சந்திரேசேகர ஆசாத், கே.பாலு ஒன்றிய செயலாளர் சிபிஐ, எம்.முருகேசன் நகர செயலாளர் சிபிஐ, கோபு போ.க.தொ.சங்க மாநில நி.குழு, இளைஞர் பெருமன்ற ஒன்றிய செயலாளர் கோ.சரவணன் மற்றும் ஏராளமான போக்குவரத்து கழக தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கண்டன முழக்கமிட்டனர்.

**திருவண்ணாமலை :** திருவண்ணாமலை மண்டல பொது மேலாளர் அலுவலகம் முன்பு வே. முத்தையன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வி. குப்புரங்கன், த. இராசேந்திரன். வீ. விஸ்வநாதன், ஜெயபாலன், ஏஐடியுசி மாவட்ட பொதுச்செயலாளர் மாதேஸ்வரன் மற்றும் பல தோழர்கள் பங்கேற்றனர். முடிவில் வெங்கடேசன் நன்றி கூறினார்.

**தஞ்சை:** தஞ்சாவூர் கோட்ட அலுவலகம் கரந்தை புறநகர் பணிமனை முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு பொதுச் செயலாளர் டி.கஸ்தூரி தலைமை வகித்தார். ஓய்வு பெற்றோர் சங்க பொதுச்செயலாளர் பி.அப்பாத்துரை முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தினை வங்கி ஊழியர் சங்க மாவட்ட பொதுச் செயலாளர் க.அன்பழகன் துவக்கி வைத்தார். ஏஐடியூசி மாவட்ட செயலாளர் ஆர். தில்லைவனம் முடித்து வைத்து நிறைவுரை ஆற்றினார். ஆர்ப்பாட்டத்தில் சம்மேளன துணைத் தலைவர் துரை.மதிவாணன், சங்க கவுரவத் தலைவர் கே.சுந்தரபாண்டியன் ஏஐடியூசி மாவட்ட தலைவர் வெ.சேவையா உள்ளிட்டோர் உரையாற்றினர். பொருளாளர் எஸ்.தாமரைச்செல்வன் நன்றி கூறினார்.

**தர்மபுரி:** பாதிபுரம் மண்டல போக்குவரத்து அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்பாட்டத்திற்கு மாவட்ட துணைத் தலைவர் கே.துரை சாமி தலைமை வகித்தார். நிர்வாகி எம்.முனுசாமி முன்னிலை வகித்தார். ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி கோரிக்கைகளை விளக்கி பேசினார். மத்திய சங்க நிர்வாகிகள் கோவிந்தசாமி, பூபேஷ்குப்தா, கணேசன், ஏஐடியூசி மாவட்ட துணை தலைவர் ஆர்.சுதர்சனன், உள்ளாட்சி சம்மேளன மாவட்டத் தலைவர் மனோகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மண்டல பொருளாளர் நாராயணன் நன்றி கூறினார்.

**சி.சக்கரபாணி AITUC**
**நிறுவனர், அணுமின் ஊழியர் சங்கம், கல்பாக்கம்**
**ரூ. 5000/-**
**ஜனசக்தி ஆயுள் சந்தா**

## இந்த வார தம்பிக்குறள்

### 52. வாழவிட்டு வாழ்

**வாழவிட்டுத் தான்வாழ்தல் வாழ்வாங்கு வாழ்வாகும்**
**அஃதல்ல தாகாவாம் வாழ்வு**

பிறர் வாழ்வதற்கும், வழிவகையினை விட்டுவிட்டுத் தானும் வாழ்வதே வாழ்வாங்கு வாழ்வதாகும். அவை அல்லாதவை (பிறரைக் கெடுத்துத் தான் வாழ்தல்) வாழ்வாகாது.

**வாழ்வெளிமை இன்னாயில் வாழ்வுக் கடியாகும்**
**பாழாகும் என்றும் பகட்டு**

எளிமையான வாழ்க்கை முறையினைக் கடைபிடிப்பதே சிறந்த நல்வாழ்க்கையாகும். அப்படியல்லாத ஆடம்பர வாழ்க்கை வீண்பகட்டே. அது வாழ்க்கை ஆகாது.

## வாசகர் டுவிட்



**ஆசிரியர் ஜனசக்தி,**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 97 ஆம் ஆண்டு ஜனசக்தி சிறப்பிதழ் எல்லா வகையிலும் மிகச் சிறந்து விளங்குகிறது. முதல் பக்கம் திரைப்பட விளம்பரம் என்றாலும் பொருத்தமான நேரத்தில் பொருத்தமான திரைப் படமாக அமைந்துள்ளது. எல்லா பக்கங்களும் நன்றாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

– **மூர்த்திலிங்கம்**, கடலூர்.

**ஆசிரியர் ஜனசக்தி,**

இந்தியாவின் முக்கிய நிகழ்வுகள், தமிழ்நாட்டின் முக்கிய நிகழ்வுகள், உலகின் முக்கிய நிகழ்வுகள் என்றவாறு தொகுத்து வெளியிட்டிருப்பது மிகவும் பயனுள்ள ஒன்றாகும். சிறப்பிதழில் வெளிவந்துள்ள அனைத்து கட்டுரைகளின் உள்ளடக்கம் கனமானவை. அவசியம் படித்துப் பயன்பெற வேண்டியவை. 12 கலர் பக்கங்கள் உள்பட 36 பக்கங்கள் கொண்ட சிறப்பிதழ் ரூ.15 க்கு எப்படி சாத்தியமானது?

– **கனகவள்ளி**, மேட்டூர்.

**ஆசிரியர் ஜனசக்தி,**

முதலாவது அமைப்பு நிலை மாநாடு கட்டுரையில் கான்பூர் ரயில் நிலையம் படம் வெளியிட்டிருப்பது சிறப்பு. மாநாடு முடிந்து வெளியே வரும் தலைவர்களை கைது செய்யப்படுவது போன்ற படம் மிகவும் பொருத்தமானது. அனைத்து பக்கங்களின் லே அவுட் மிக அருமை.

– **கவிதா**,
கள்ளக்குறிச்சி.

**ஆசிரியர் ஜனசக்தி,**

ஜனசக்தி முகப்பு பக்கம் கலர் பக்கமாக அமையவில்லை போலும். கலர் பக்கமாக அமைந்திருந்தால் கூடுதல் சிறப்பாக அமைந்திருக்கும். கட்சிக் காங்கிரஸ் நடைபெற்ற முழு விபரம், மாநில மாநாடுகள் நடைபெற்ற முழு விபரம் வெளியிட்டிருப்பது கட்சி உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, ஆதரவாளர்கள், அரசியல் பிரமுகர்கள் அனைவருக்கும் பயனுள்ளதாகும்.

– **முருகன்**, எட்டயாபுரம்

## மார்க்ஸ் - அம்பேத்கர் தொடர் உரையாடல் நூல் குறித்த அறிமுக கூட்டம்

மார்க்ஸ் அம்பேத்கர் தொடர் உரையாடல் என்ற நூல் குறித்த அறிமுக கூட்டம் கும்பகோணம் ஏஐடியூசி தொழிற்சங்க அலுவலகத்தில் நடைப் பெற்றது. ஆசிரியர் சி.இராயப்பன் வரவேற்றார். கலை இலக்கியப் பெருமன்றத்தின் தஞ்சை மாவட்டச் செயலாளர் அய்யாறு ச.புகழேந்தி தலைமை வகித்தார்.

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் கிளை மேலாளர் கருணாமூர்த்தி முன்னிலை வகித்தார். பரமக்குடி அரசு கலைக் கல்லூரி முதல்வர் அ.குணசேகரன் பங்கேற்று நூலை அறிமுகம் செய்து வைத்து பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் மு.அ.பாரதி, ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் ஆர்.தில்லைவனம், நகரச் செயலாளர் ஆர்.மதியழகன், ஒன்றிய செயலாளர் ஏ.ராதாகிருஷ்ணன், தொலைபேசி தொழிற்சங்க தலைவர் ஆர்.ஜெயபால், விஜய் ஆரோக்கியராஜ், மாதர் சம்மேளனத்தின் மாவட்ட தலைவர் வசந்தி உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்துக் கொண்டனர்.

## சிறப்பு குறை தீர்ப்பு முகாம்

### டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு



தளி சட்டமன்றத் தொகுதி தேன்கனிக்கோட்டை மற்றும் கெலமங்கலம் பேரூராட்சிகளில் மாண்புமிகு அமைச்சர் கைத்தறி மற்றும் துணிநூல் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சிறப்பு குறைதீர்க்கும் முகாம் மற்றும் நலத்திட்டங்கள் வழங்கும் விழாவில் தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

## எஸ்.கொடிக்குளம் பேரூராட்சி சிபிஐ மாநாட்டு தீர்மானம் விளக்க கூட்டம்

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு வட்டம் எஸ்.கொடிக்குளம் பேரூராட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டு தீர்மானம் விளக்க கூட்டம் கூமாபட்டி பேருந்து நிலையம் முன்பு நடைபெற்றது.

கிளை செயலாளர் எ.துவான்ஷா தலைமை வகித்தார்.துணை செயலாளர்கள் ராஜாமணி, சங்கரநாராயணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், வட்ட செயலாளர் கோவிந்தன், தவிச மாவட்ட செயலாளர் சவுந்திர பாண்டியன் ஆகியோர் பேசினார்கள்.

### உலகளாவிய பேச்சுப் போட்டியில்

## கோவை சட்டக் கல்லூரி மாணவி முதலிடம்



மலேசியா நாட்டு தமிழ் தொலைக்காட்சியான வணக்கம் மலேசிய செய்திகள் தொலைக்காட்சி நிறுவனம் தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்திய உலகளாவிய கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி 2021 நடைபெற்றது. அதில் இந்தியா, ஸ்ரீலங்கா, பர்மா, மலேசியா, சிங்கப்பூர், கனடா, ஆஸ்திரேலிய, அமெரிக்கா, இங்கிலாந்து, டென்மார்க்' உள்ளிட்ட 20 நாடுகளில் இருந்து பல மாணவர்கள் பங்கேற்றனர். இந்தியாவிலிருந்து 50 கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர்.

பல கட்டமாக நடந்த இப்போட்டியில் இறுதிச்சுற்றுக்கு இந்தியா, ஸ்ரீலங்கா, மலேசியா, பர்மா என 4 நாடுகள் தேர்வாகின. 18.12.2021–ல் காணொளி வாயிலாக இறுதிப்போட்டி நடைபெற்றது. இந்த மாபெரும் பன்னாட்டு பேச்சுப் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த கோவை சட்டக்கல்லூரி மாணவியும் அனைத்திந்திய மாணவர் பெருமன்ற நிர்வாகியுமான பா.நி.சினேகா முதலிடம் பெற்று வெற்றி பெற்றார்.

### மதுரையில் இருந்து தேனி வரை பயணிகள்

## இரயிலை இயக்கிட வலியுறுத்தி போராட்டம்

மதுரைபோடி இடையேயான 90.4 கி.மீ.தூரம் அகல ரயில் பாதை பணிகளும் அனைத்து உள்கட்டமைப்பு பணிகளும் தேனி வரை நிறைவடைந்த நிலையில், முதல்கட்டமாக மதுரையில் இருந்து தேனி வரை பயணிகள் இரயிலை இயக்க வலியுறுத்தியும், தெற்கு ரயில்வே நிர்வாகத்தின் மெத்தனப் போக்கைக் கண்டித்தும், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் தேனி மாவட்டக்குழு சார்பில் தேனி பெரியகுளம் ரோட்டில் அமைந்துள்ள இரயில்வே தண்டவாளத்தில் படுத்து உறங்கும் போராட்டம் மாவட்டச் செயலாளர் இரா.தமிழ் பெருமாள் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட துணைத் தலைவர் த.வீரையா, துணைச் செயலாளர் சு.சரவண புதியவன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் எம். அந்தோணி, க.ரமேஷ், இரா.ராஜாராம், மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் செ.ஆனந்த், துணைச் செயலாளர் மு.அரிகரன், மாதர் சம்மேளன மாவட்ட தலைவர் எம்.அழகேஸ்வரி, உள்ளிட்ட 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.


## அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் அமைப்பு கூட்டம்

மதுரை மாநகர் மாவட்ட இளைஞர் பெருமன்றத்தின் அமைப்பு கூட்டம் ரா.சதீஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. இளைஞர் பெருமன்றம் மாநில குழுவின் சார்பில் இரா.தமிழ்பெருமாள் பங்கேற்று கூட்டத்தை வழிநடத்தினார். மதுரை மாநகர் மாவட்ட இளைஞர் பெருமன்ற செயலாளராக பழனி முருகன், தலைவராக ஜாவேத்ஹூசேன், துணைச் செயலாளராக முத்துக்குமார், துணைத் தலைவராக கதிரவன் உட்பட மதுரை நகரின் நான்கு பகுதிக்களுக்கான இளைஞர் பெரு மன்ற நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன் மற்றும் நிர் வாகிகள் ராஜலெட்சுமி, ஜனசக்தி என்.ஜீவா, இரா.முருகன் பங்கேற்றனர். மதுரை மாநகரில் இளைஞர் பெருமன்றத்தில் பெருமளவு இளைஞர்களை சேர்கவும், ஹைதராபாத் நகரில் நடைபெற உள்ள அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் ஊர்வல நிகழ்விலும் மதுரையில் இருந்து இளைஞர் பெருமன்ற தோழர்கள் பங்கேற்க முடிவு செய்யப்பட்டது.

### ரூ.30 லட்சம் மதிப்பில் சிமெண்ட் சாலை

## டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்



தளி சட்டமன்றத் தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், பொம்மதாத்தனூர் ஊராட்சி, இருளப்பட்டி கிராமத்தில் பழங்குடியினர் நலத்துறை நிதியில் ரூ.30 லட்சம் மதிப்பில் சிமெண்ட் சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணியை தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய சேர்மன், ஒன்றிய துணைச் சேர்மன், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ. மக்கள் குறைகளை கேட்டறிந்தார்

தளி சட்டமன்றத் தொகுதி, கும்ளாபுரம் ஊராட்சியில் கும்ளாபுரம் தம்மாபுரம், ஜீகூர் கிராமங்களில் தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் அவர்கள் மக்களை சந்தித்து குறைகளை கேட்டறிந்து சாலை வசதி, கழிவுநீர் கால்வாய், ஆதரவற்றோருக்கான முதியோர் உதவி தொகை, உள்ளிட்ட மனுக்களைப் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உறுதியளித்தார். உடன் ஒன்றிய கவுன்சிலர்கள், மாவட்ட கவுன்சிலர், பெனசப்பள்ளி நாகண்ணா மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## புளியங்குடியில் விசைத்தறி தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் சிறு விசைத்தறியாளர்கள் சங்க தலைவர் (ஏஐடியூசி) ப.வேலு தலைமையில் புளியங்குடி, சிந்தா மணி பகுதிகளில் உள்ள வீடு சார்ந்த விசைத்தறியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன கூலியில் 10 சதவீதம் குறைக்கப்படுவதை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு பழனி ஏஐடியூசி, தி.சுப்பிரமணியன் விசைத்தறி, சிஐடியூ எஸ்.மாரியப்பன், முருகன், மாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஏஐடியூசி மாநில பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி, ஏஐடியூசி மாநில செயலாளர் எஸ்.காசிவிஸ்வநாதன், சிஐடியூ மாவட்ட செயலாளர் எம்.வேல்முருகன் ஆகியோர் கண்டன உரை ஆற்றினர்.

ஏஐடியூசி மாவட்ட செயலாளர் தி.சுப்பையா, சிபிஐ மாவட்ட செயலாளர் த.இசக்கிதுரை, ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர் இரா. சமுத்திரக்கனி மற்றும் 100 பெண்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### ஏஐடியூசி தென்காசி மாவட்ட

## பொதுக்குழு கூட்டம்!

தென்காசி மாவட்ட ஏஐடி யூசி பொதுக் குழு கூட்டம் புளியங்குடியில் மாவட்ட தலைவர் சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் தி.சுப்பையா வேலை அறிக்கை வாசித்தார்.

மாநில பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி, மாநிலச் செயலாளர் எஸ்.காசிவிஸ் வநாதன், சிபிஐ மாவட்ட செயலா ளர் த. இசக்கிதுரை ஆகியோர் சிறப் புரையாற்றினர். ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர் இரா.சமுத்திரக்கனி தொழிற்சங்க செய்தி 6 ஆண்டு சந்தாவை டி.எம்.மூர்த்தியிடம் வழங்கினார்.

## கோழி மற்றும் ஆட்டுக்கறி கடை உரிமையாளர்கள் நலச் சங்கம் துவக்கம்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் மாநகரத்தில் உள்ள 300க்கும் மேற்பட்ட கோழி மற்றும் ஆட்டுக்கறி கடை உரிமையாளர்கள் கூடி, ஒசூர் கோழி மற்றும் ஆட்டுக்கறி நலச்சங்க உரிமையாளர்கள் என்ற பெயரில் நலச் சங்கம் துவங்கினர்.

மேலும் இவர்கள் அனைவரும் இந்தியகச் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளரும், தளி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான டி.இராமச்சந்திரன் சங்கத்தின் கௌரவத் தலைவராக தேர்வு செய்யப்பட்டார். விவசாய சங்க மாநில துணைத்தலைவர் எம்.இலகுமய்யா மற்றும் சிபிஐ மாவட்ட, மாநகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருக்கோவில் நிர்வாகத்தைக் கண்டித்து

## சக்கம்பட்டியில் ஆர்ப்பாட்டம்

சக்கம்பட்டி அன்னை முத்துமாரியம்மன் திருக்கோவிலில் நிர்வாக சீர்கேடுகளின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கோரியும், கோவில் கணக்கரிடம் கட்டாய கை யூட்டு கேட்டு தராததால் கோவில் கணக்கரை வேலை நீக்கம் செய்து தொழிலாளர் விரோத போக்கை கடை பிடிக்கும் சக்கம்பட்டி முத்து மாரியம்மன் கோவில் தக்கார் தங்கலதாவின் மீது தமிழக அரசு நடவடிக்கை வலியுறுத்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆண்டிபட்டி நகர் குழு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின் நகர பொருளாளர் பழனிச்சாமி தலைமை தாங்கினார்.

மாநிலக்குழு உறுப்பினர் திருமலைக்கொழுந்து, மாவட்ட செயலாளர் பெருமாள், மாவட்ட செயற்குழு உறுப்பினர் பரமேஸ்வரன், ஒன்றிய செயலாளர் பிச்சைமணி, நகர செயலாளர் முனீஸ்வரன் ஆகியோர் கண் டன உரையாற்றினர்.

200க்கும் மேற் பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## கே.டி.கே. தங்கமணி நினைவு நாள் நிகழ்ச்சி

சுதந்திர போராட்ட வீரர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர், தொழிற்சங்கத்தின் முன்னோடி, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.கே. தங்கமணி அவர்களின் 20 வது ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி தஞ்சாவூர் மாவட்ட ஏஐடியூசி அலுவலகத்தில் போக்குவரத்து சங்க பொதுச்செயலாளர் டி.கஸ்தூரி தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் போக்குவரத்து சங்க மாநில துணைத் தலைவர் துரை.மதிவாணன், ஓய்வு பெற்றோர் சங்க பொதுச் செயலாளர் பி.அப்பாத்துரை, சங்க நிர்வாகிகள் கே.சுந்தரபாண்டியன், டி.தங்கராசு, ஜி.சண்முகம், எஸ்.தாமரைச்செல்வன், என்.ஆர்.செல்வராஜ், ஏ.சுகுமார், சமூக ஆர்வலர் விசிறி சாமியார் முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## எல்.ஐ.சி. முகவர்கள் சங்கத்தின் 18ஆம் ஆண்டு விழா

எல்ஐசி முகவர்கள் முகவாண்மை வரலாற்றில் 50 ஆண்டுகள் நடக்காத அதிசயங்கள் லிகாய் துவங்கி 18ஆண்டுகளில் நடைபெற்றுள்ளது. குழுக்காப்பீடு, பணிக்கொடை, வாரிசு, தொடர் கமிசன் 2014 லிலிருந்து தொடர்வது, பெர்சிஸ்டன்சி சட்டத்தை ரத்து செய்ய வைத்தது, பொன்விழா ஆண்டில் தங்க கௌரவம், மன்ற முகவாண்மையில் தளர்வு, கொரோனா முன்பணம், தவணை தள்ளி வைக்க இதுபோல் நூற்றுக்கும் மேலும் கோரிக்கைகளை முகவர்களுக்கு பெற்றுத்தந்து, முகவர்களுக்காக, பாலிசிதாரர்களுக்காக, பொதுத்துறையை பாதுகாக்க, நிர்வாகம், அரசிடம், நாடாளுமன்ற த்திலும் தொடர்ந்து போராடி பெற்றுத் தரும் நாடு முழுவதும் ஒரே சங்கமாக செயல்படும் லிகாய் சங்கத்தின் அமைப்புதினம் டிசம்பர் 20 அன்று நடைபெற்றது.

அம்பத்தூர் கிளை சார்பில் நடைபெற்ற நிகழச்சிக்கு முகவர்கள் சங்கத்தின் கௌரவத் தலைவர் ஜெயராமன் தலைமை தாங்கினார். சங்க ஆலோசகர் இரா.துரைசாமி கொடி ஏற்றி சிறப்புரையாற்றினார். எல்ஐசி கிளை மேலாளர் துணை மேலாளர் மற்றும் ஊழியர் சங்கத்தின் நிர்வாகி ஜிதேந்திரன், விலை சங்கச் செயலாளர் அழகர்ராஜ், தலைவர் ஆனந்தன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பொருளாளர் கே. ஜே.சீனிவாசன் நன்றி கூறினார்.

எல்ஐசி முகவர்கள் சங்கம் உருவாவதற்கு மூல காரணமாக இருந்தவர் தோழர் இந்திரஜித் குப்தா மற்றும் பாசுதேவ் ஆச்சாரியா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

# இப்படியும் ஒரு மேயர்..!



நம்மூரில் வார்டு கவுன்சிலராகிவிட்டாலே புல்லட், கார் சகிதம் நெஞ்சை நிமிர்த்தி தெனாவட்டாக உலா வரும் நிலைமையில் மேயர் ஒருவர் பால் வியாபாரம் செய்துவருகிறார்.

ஆம் அவரை அந்த ஊர் மக்கள் ‘பால்கார மேயரம்மா’ என்றுதான் அழைக்கிறார்கள். மேயராவதற்கு முன் வீடுகளுக்குச் சென்று பால் வியா பாரம் செய்துவந்த அவர் மேயரான பின் தொழிலை விட்டுவிடவில்லை. அதிகாலை எழுந்து 200 வீடுகளுக்குச் சென்று பால் விநியோகம் செய்துவருகிறார். பாலுக்கான பணத்தோடு கோரிக்கை மனுக்களையும் மக்கள் அவரிடம் வழங்குகிறார்கள். அதற்குப்பிறகு கருப்பு கவுனை அணிந்துகொண்டு மேயர் வேலைகளை தொடங்குகிறார்.

அதுசரி யார் அவர் எந்த ஊர் என்றுதானே கேட்கிறீர்கள்?

அவர் பெயர் தோழர் அஜிதா விஜயன். சிபிஐ கட்சியின் கேரள மாநிலம், திரிச்சூர் மாநகராட்சி மேயராக செயல்பட்டு வருகிறார்!

# டாஸ்மாக் பணி நேரத்தை மாற்றி அமைக்க வேண்டுகோள்

தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கத்தின் தஞ்சை மாவட்ட சிறப்பு பேரவை கூட்டம் தஞ்சை மாவட்ட ஏஐடியூசி அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர் என்.இளஞ்செழியன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் எஸ்.கோடீஸ்வரன் வேலை அறிக்கையை சமர்ப்பித்தார்.

சிறப்பு பேரவையை ஏஐடியூசி மாநிலச் செயலாளர் சி.சந்திரகுமார் துவக்கி வைத்தார். வங்கி ஊழியர் சங்கத்தின் மாவட்ட பொதுச்செயலாளர் க.அன்பழகன், ஏஐடியூசி மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம், மாவட்டத் தலைவர் வெ.சேவையா, போக்குவரத்து சங்க மாநிலத் துணைத் தலைவர் துரை. மதிவாணன், தெரு வியாபாரிகள் சங்க மாவட்ட செயலாளர் ஆர்.பி.முத்துக்குமரன் உள்ளிட்டோர் வாழ்த்திப் பேசினார்கள். பேரவையில் டாஸ்மாக் பணியாளர்கள் பணி நேரம் தற்போது மதியம் 12 மணி முதல் இரவு 10 மணி என மாற்றி அமைக்கப்பட்டதால் பணியாளர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

தமிழ்நாடு அரசு இதை கவனத்தில் கொண்டு டாஸ்மாக் பணியாளர்கள் பணி நேரம் முன்பிருந்தது போல் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை என்று மாற்றி அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பேரவையில் தலைவராக பி.வடிவேலன், துணை தலைவர்களாக வி. ரமேஷ், என்.மகாராஜா, மாவட்ட செய லாளராக எஸ்.கோடீஸ்வரன், துணைச் செயலாளர்களாக ஜி.சார்லஸ், டி.திலகர், பொருளாளராக என்.இளஞ்செழியன் உள்ளிட்டோர் புதிய ஆண்டுக்கான நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

# வங்கி ஊழியர்கள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டம்

அகில இந்திய வங்கி ஊழியர்கள் சங்கத்தின் 16 – 17 ஆகிய இரண்டு நாள் வேலை நிறுத்தத்தை ஆதரித்து, எல்ஐசியில் பரமக்குடியில் வாயில் கூட்டம் மற்றும் ஆர்ப்பாட்டம் சிறப்பாக நடைபெற்றது.

இதில் காப்பீட்டு கழக ஊழியர் சங்கத்தினுடைய தலைவர் ஜோசப் தலைமையில் வங்கிகளில் தனியார் மயமாக்குவதை எதிர்ப்பு தெரிவித்து வருங்காலங்களில் மக்கள் இயக்கமாக கொண்டு செல்ல வேண்டும் என்று பேசினார்.

வங்கி ஊழியர் சங்கத்தின் இராமநாதபுரம் மாவட்டத் தலைவர் பி.சுரேஷ், எச்.எம்.எஸ்.ஹாரீஸ், பொது இன்சூரன்ஸ் ஊழியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் எம். அண்ணாதுரை ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

பிரேம்குமார் எழுச்சிமிகு உரையாற்றினார்.

இதில் எல்ஐசி ஊழியர்கள் அதிகாரிகள் முகவர்கள் வங்கி ஊழியர்கள் பொதுமக்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# கட்டுமான சங்க மாவட்ட நிர்வாக குழு கூட்டம்

ஏஐடியூசி கட்டுமானத் தொழிலாளர் சங்கத்தின் தஞ்சை மாவட்ட நிர்வாக குழு கூட்டம் சங்க துணை தலைவர் பி.செல்வம் தலைமையில் நடைபெற்றது. கட்டுமான சங்கத்தின் மாநிலபொதுச் செயலாளர் கே.இரவி தொழிலாளர்கள் பாதிப்பு குறித்து உரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம், மாவட்ட துணைத் தலைவர் வெ.சேவையா, நிர்வா கிகள் சி.சுகுமாரன், ஆர்.சேகர், உ.சௌந்தரராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். கூட்டத்தில் நலவாரிய பதிவு மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கைகளை தாமதப்படுத்தாமல் துரிதப்படுத்த வேண்டும், நிலுவையில் உள்ள ஓய்வூதியம் உள்ளிட்ட கேட்புமனுக்கள் மீது விரைந்து தீர்வு காணப்படவேண்டும், உழவர் அட்டையை காரணம் காட்டி நலவாரிய பதிவை மறுக்க கூடாது, சிமெண்ட் கம்பி உள்ளிட்ட கட்டுமான பொருட்கள் விலையை கட்டுப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# பெரியார் 48வது நினைவு நாள்

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 48 வது நினைவு நாள் நிகழ்ச்சி தஞ்சாவூரில் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தஞ்சை பழைய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள பெரியாரின் திருவுருவச் சிலைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி.மகேந்திரன் மாலை அணிவித்து மரியாதை செய்தார். நிகழ்வில் மாநகர செயலாளர் ஆர்.பி.முத்துக்குமரன், மாவட்ட குழு உறுப்பினர் சேவையா மற்றும் ஆர். செந்தில்நாதன், வி.கலியமூர்த்தி, பி. செல்வம், பிரபாகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**நாகர்கோவில்:** இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் நாகர்கோவில் மாநகரம் சார்பில் ஒழுகினேசேரியில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரி யாதை செலுத்தப் பட்டது.இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநகர செயலாளர் ஆர்.இசக்கிமுத்து தலைமை தாங்கினார்.

மாநகர பொருளாளர் கே.நாகராஜன் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தார். இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட பொருளாளர் தா.சுபாஷ் சந்திர போஸ், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநிலத் தலைவர் சி.சொக்கலிங்கம், அகில இந்திய முற்போக்கு பேரவை மாநில துணை தலைவர் எஸ்.சுந்தரம், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் குமரி மாவட்ட அமைப்பாளர் ஆர். செல்வ ராணி ஆகியோர் கலந்து கொண் டனர்.

## ஜனசக்தி சிறப்பிதழ் விற்பனை



விருதுநகர் மாவட்டத்தில் ஜனசக்தி சிறப்பிதழ் விற்பனை இயக்கத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ தொடங்கி வைத்தார். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளரும், ஜனசக்தி பொறுப்பாளருமான எஸ். பழனிக்குமார் உள்ளிட்ட தோழர்கள் ஜனசக்தி விற்பனையில் ஈடுபட்டனர்.

**அம்மாபேட்டை :** ஜனசக்தி மக்கள் வார இதழ் சிறப்பிதழை தஞ்சை வடக்கு மாவட்டம் அம்மாபேட்டை ஒன்றியக் குழுவின் சார்பில் வினியோகித்தனர்.

# அம்மாப்பேட்டை சுடுகாட்டை சீரமைத்து தருக

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அம்மாபேட்டை ஒன்றிய நிர்வா கிகள் கூட்டம் பாபநாசம் அருகே அம்மாபேட்டையில் நடைப் பெற்றது. கூட்டத்திற்கு கே.ராஜாராமன் தலைமை வகித்தார். கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் ஆர்.செந்தில்குமார், தமிழ் மாநில விவ சாயத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் ஆர்.எஸ். பாலு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.எம்.குருமூர்த்தி, பொருளாளர் பி.தாமரைச்செல்வி, ஒன்றிய நிர்வாகிகள் டி.ஜி.நாகராஜன், ஆர்.செல்வம்,உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில், அம்மாபேட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதி மக்களின் சுடுகாட்டை சீரமைத்து தர பேரூராட்சி நிர்வாகத்தை வலியுறுத்துவது, பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொசுத் தொல்லையை போக்கிட கொசு மருந்து அடிக்க வேண்டும், அம்மாபேட்டையை தலைமையிடமாக கொண்டு தாலுகா அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



### தோழர் என்.ராமகிருஷ்ணன்

# குடும்பத்தினருக்கு இரா.முத்தரசன் ஆறுதல்

மார்க்சிஸ்ட் கட்சியின் மூத்த தோழர் என்.ராமகிருஷ்ணன் அவர்கள் மறைவு செய்தி கேட்டு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் அவர்கள், ராமகிருஷ்ணன் அவர்களின் இல்லத்தில் மகள் சாந்தி, மகன் மணவாளன் மற்றும் குடும்பத்தினருக்கும்,சிபிஎம் தோழர்களுக்கும் ஆறுதல் கூறினார்.உடன் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மதுரை புறநகர் மாவட்ட செயலாளர் ப.காளிதாஸ், மார்க்சிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கணேசன், மற்றும் சிபிஎம் நிர்வாகிகள்,விஜயராஜன் உட்பட பலர் இருந்தனர்.

### இராஜபாளையம் இஎஸ்ஐ மருத்துவமனையை

# தரம் உயர்த்தக் கோரி- ஏஐடியுசி ஆர்ப்பாட்டம்

இராஜபாளையத்தில் ஏஐடியுசி மில் தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில் இஎஸ்ஐ மருத்துவமனை முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சங்க பொது செயலாளர் விஜயன் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து சிபிஐ மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி பேசுகையில், ‘‘இங்குள்ள இஎஸ்ஐ மருத்துவமனையை தரம் உயர்த்தி முழுநேர மருத்துவமனையாக மாற்ற வேண்டும். போதிய மருத்துவர்கள், செவியர்கள் ,உதவியாளர்கள் நியமனம் செய்ய வேண்டும், பணிநியமனத்தின்போது தமிழ் தெரிந்தவர்களை நியமிக்க வேண்டும்’’ என்று பேசினார். ஏஐடியுசி அமைப்பு செயலாளர் வி.இரவி, நகர துணை செயலாளர் முருகன் ஆகியோர் பேசினார்கள். சங்க துணை செயலாளர் ரமேஷ் நன்றி கூறினார்

# பட்டாசு ஆலைகளை திறக்ககோரி ஆர்ப்பாட்டம்

விருதுநகர் மாவட்டத்தில் மூடிக்கிடக்கும் பட்டாசு ஆலைகளை திறக்ககோரியும், சரவெடி தயாரிக்க அனுமதி கோரியும், விருதுநகரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு, ஏஐடியூசி பட்டாசு தொழிலாளர்கள் சங்கம் சார்பில் மாவட்ட செயலாளர் க.சமுத்திரம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிபிஐ மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி, மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், நகர செயலாளர் முத்துகுமார் ஆகியோர் பேசினர். ஆர்.ஆர்.நகரில் ஒன்றிய செயலாளர் பாலமுருகன் தலைமையில் நடைபெற்றது. ஆமத்தூரில் ஒன்றிய துணை செயலளர் முருகேசன் தலைமையில் நடைபெற்றது. இடைகமிட்டி செயலாளர்கள் சக்கணன், ஜீவா, திருத்தங்கல் சுரேஷ்குமார் ஆகியோர் பேசினர். வத்திராயிருப்பில் துவான்ஷா தலைமை வகித்தார் . மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, ஏஐடியுசி மாவட்ட தலைவர் சமுத்திரம் ,வட்ட செயலாளர் கோவிந்தன், துணை செயலாளர் மகாலிங்கம் ஆகியோர் பேசினர்.

## சாரல் இலக்கிய சிற்றிதழ் வெளியீட்டு விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சேலம் மாவட்ட குழு சார்பாக சாரல் இலக்கிய சிற்றிதழ் வெளியீட்டு விழா மகாகவி பாரதியார் சிலை அருகில் மாவட்ட தலைவர் பூமிபாலகன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் கே.வி.இராஜேந்திரன் வரவேற்புரையாற்றினார். பெரியார் பல்கலைக்கழக பாடத்திட்ட வல்லுநர் குழு உறுப்பினர் தாரை அ.குமரவேலு வெளிட்டார். சேலம் மாநகர தமிழ் இலக்கிய கூட்டமைப்பு தலைவர் லவ்.ஓ.ஏகே.நாகராஜன் பெற்றுக் கொண்டார். நிகழ்ச்சியில் மாநில செயலாளர் நானற்காடன் , இஸ்கப் மாவட்ட கௌரவத்தலைவர் கி.மோகன், கலைமாமணி விருது பெற்ற டாக்டர் கு.கணேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். கோ.கல்பனா நன்றி கூறினார். மகாகவி பாரதியார் சிலைக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டது.

# பெண்கள் துகிலுரிந்தால் பேரண்டம் அழியாதோ

மாமன்னனும், மகா முனிவர்களும், மாவீரர்களும், அறிஞர்களும் பொதுமக்களும் கூடிய கௌரவர் சபையில், ஒரு அபளைப் பெண் துகிலுரியப்பட்டாள். அவள் ஒன்றும் கேட்பதற்கு நாதியற்றவள் அல்ல. மாறாக, ஐந்து மாவீரர்களை மணந்தவள். குருவம்சத்தின் குலக்கொடி அவள். அவளுக்கே இந்த நிலை என்றால் சாதாரண பெண்களின் நிலை என்ன ?.ஒரு பெண்ணை சக மனுஷியாக, உயிராக மதிக்கவில்லை என்றால் இந்த பேரண்டம் இருந்தென்ன? அழிந்தென்ன? இந்தக் கேள்வியை முன்வைத்து தான் பெண்கள் துகிலுரிந்தால் பேரண்டம் அழியாதோ என்ற இந்த நூலை அ.கா.பெருமாள் எழுதியுள்ளார்.




தமிழகத்தில் வழங்கப்படுகிற நாட்டார் பாடல்களில் கௌரவர்கள் துரோபதியை துகிலுரிந்ததை பாலியல் துன்புறுத்தலாகவே கருதுகின்றனர். இதனால்தான் பாலியல் துன்புறுத்தல் வழி இறந்து போனவர்களை தெய்வமாக்கி துரோபதையுடன் இனைத்தனர். ஒரு கும்மி பாடல் ‘‘பெண்ணின் துகிலுரிந்தால் பேரண்டம் அறியாதோ’’ என்கி றது என குறிப்பிடுகிறார்.

குறிப்பிட்ட ஒரு ஊரில்திருமணம்நிச்சயக்கப்பட்ட பெண், ஊர் தலை வனுக்கு முதலில் விருந்தாக வேண்டும் என்ற வழக்கம் இருந்தது. மறுத்த பெண்கள் கொலை செய்யப்பட்டனர். பெண்கள் பலாத்காரத்தாலும் இறந்து போயினர். இதே போன்று பருவமடைந்த பெண்கள் ஜமீன்தாருக்கு விருந்தாக்கபடுவாள். இதனாலும் பல பெண்கள் தங்கள் உயிரையே மாய்த்துக் கொண்டனர்.

காதலனால் கொல்லப்பட்டு நீலியாக மாறி அவனைக் கொன்றபின் வழிபாடு பெற்ற இசக்கியம்மன் தென்மாவட்டங்களில் பிரசித்தமானவள். தீயில் தள்ளப்பட்டோ, தானாகச் சாடியோ உயிர் விட்டு தெய்வமாகித் தனிப் பெயரில் வழிபடப்பட்ட பல தெய்வங்கள் ‘தீப்பாய்ந்த அம்மன்’ என்ற பெயரில் வழிபட பெறுகின்றனர்.

வடதமிழ் பகுதிகளில் இது போன்று இணைக்கப்பட்ட தெய்வங்கள் துரோபதையம்மன், அங்காளபரமேஸ்வரி, ரேணுகாதேவி, காளி போன்றவை ஆகும். நாட்டார் வழக்கில் துரோபதை முந்தைய ஜென்மத்தில் சீதையாக, நளாயினியாகப் பேசப்படுகிறாள். பெண்களை இச்சிக்கிறவர்களும், இம்சிக்கிறவர்களும் அழிக்கப் பட வேண்டியவர்களே.ஆனாலும் இன்றும் பெண்களை துகிலுரியும் துச்சாதனர்கள் இருக்கவே செய்கிறார்கள்.எனவே இவர்களை எல்லாம் எச்சரிக்கும் விதமாக தான் அ.கா.பெருமாள் எழுதிய பெண்கள் துகிலுரிந்தால் பேரண்டம் அழியாதோ என்ற நூல் எச்ச ரிக்கை மணியாக உள்ளது.

இன் நூலை அனைவரும் வாங்கிப் படிக்கவும்.

**– இன்சுவை பாரதி**

**நூலாசிரியர் : அ.கா.பெருமாள்**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்**
**41பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை-50 போன்: 044 26251968**
**பக்கங்கள் : 152 விலை : ரூ.135**

## நூல் நயம்

# உதயநிதி ஸ்டாலின் திமுகவின் நம்பிக்கை நாயகன்

தமிழகத்தை ஆளும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணியின் செயலாளராகவும், திருவல்லிக்கேணி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவும் இருக்கும் உதயநிதி ஸ்டாலின் அவர்களை பற்றி .ஆதனூர் சோழன் ‘‘உதயநிதி ஸ்டாலின் திமுகவின் நம்பிக்கை நாயகன், என்ற இந்நூலை எழுதியுள்ளார்.




தமிழக முதலமைச்சர் மு. க . ஸ்டாலின் அவர்களின் புதல்வரான உதய நிதி முதலில் ஒரு நடிகராக அறியப்பட்டார். பின்னர், அரசியல் ஆர்வத்தால் திமுகழக அரசியல் பணிகளில் ஈடுபட்டார். படிப்படியாக உயர்ந்து அதன் இளைஞரணி செயலாளராக பொறுப்பு வகிக்கிறார். கடந்த சட்டமன்றத் தேர்தலில் அவரது அரசியல் சுற்றுப்பயணம் .அந்த கட்சியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தது.

மதுரை எய்ம்ஸ் பற்றிய அவரது ‘‘ஒற்றைச் செங்கல்’ நகைச்சுவை உரை அனைவராலும் பாராட்டப்பட்டது.முன்னாள் முதல்வர் கலைஞருக்கு மு.க.ஸ்டாலின் தளபதியாக இருந்தது போல், இன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு உதயநிதி தளபதியாக விளங்குகிறார்.இவர் கலைஞர் குடும்பத்தின் மூன்றாவது தலைமுறை. ஆம், நூல் ஆசிரியர் குறிப்பிடுவது போல, இவர் கலைஞர் குடும்பத்து பெயர் சொல்லும் பேரன்.

உதயநிதி மிகவும் எளிமையாக மக்களை அணுக கூடியவராகவும், மிகவும் சுறுசுறுப்பாக செயல்படுகிறார். இவர் எதிர்காலத்தில் அந்தக் கட்சியின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குவார் என்பதில் ஐயமில்லை .இன் நூலை அனைவரும் வாங்கிப் படிக்கவும் . **– சமரன்**

**தொகுப்பாசிரியர் : ஆதனூர் சோழன்**
**வெளியீடு : நக்கீரன் பப்ளிகேசன்ஸ்**
**105, ஜானி ஜான்கான்சாலை, இராயப்பேட்டை,**
**சென்னை – 14 பேச: 044 43993000**
**பக்கங்கள் : 176 விலை : ரூ.150**

வாரம் தோறும் வெளிவரும்
**ஜனசக்தி – நூல் நயம்**
புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.
தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேடடை,
சென்னை - 600014

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

சுழலும் உலகம்

## சிலி அதிபர் தேர்தலில் இடதுசாரி வேட்பாளர்

# கேப்ரியல் போரிக் வெற்றி



**சிலி நாட்டில் அதிபர் பதவிக்கான முதல் கட்ட தேர்தல் கடந்த நவம்பர் 21 அன்று நடைபெற்றது. வலதுசாரி வேட்பாளரும், குடியரசு கட்சியைச் சேர்ந்தவருமான ஜோஷ் ஆண்டோனியோ கஸ்ட் 28 % வாக்குகளும், இடதுசாரி கூட்டணி வேட்பாளரும், அந்நாட்டு மாணவர் அமைப்பின் முன்னாள் தலைவருமான கேப்ரியல் போரிக் 25.7 % வாக்குகளைப் பெற்றனர் என்று அறிவிக்கப்பட்டது.**

இந்நிலையில், இரண்டாவது சுற்று வாக்குப்பதிவு டிசம்பர் 18 அன்று நடைபெற்றது. பதிவான 99.95% வாக்குகளில் 55.87% வாக்குகளைப் பெற்று கேப்ரியல் போரிக் வெற்றி பெற்றுள்ளார்.

சிலி நாட்டின் அதிபர் தேர்தல் இந்த முறை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உற்று நோக்கப்படுவதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அந்நாட்டுக்கான புதிய அரசியலமைப்புச் சட்டம் தற்போது உருவாக்கப்பட்டு வருகிறது. இப்போது நடைமுறையில் உள்ள அரசியலமைப்புச் சட்டம் சர்வாதிகாரி ஜெனரல் அகஸ்டோ பினோசெட் ஆட்சியின் போது மக்கள் மீது மோசடியான முறையில் திணிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்கான அரசியல் நிர்ணய சபை 155 உறுப்பினர்களைக் கொண்டது ஆகும். அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர்களைத் தேர்வு செய்திட கடந்த மே மாதம் தேர்தல் நடைபெற்றது. எல் லோரும் வியக்கும் வகையில், பிரதான அரசியல் கட்சிகள் இந்தத் தேர்தலில் பெரும் பின்னடைவைச் சந்தித்தன. சுயேட்சை வேட்பாளர்கள் அதிக அளவில் வெற்றி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

பொது மக்களின் விருப்பத்திற்கு இணங்க, தேர்தல் குறித்த பல்வேறு உரிய முறைமைகள் நடைமுறைப் படுத்தப்பட்டன. ஆணுக்குப் பெண் சரி நிகர் சமம் என்பதை, அநேகமாக உலகிலேயே முதல்முறையாகப், பிரகடனப்படுத்தும் வண்ணம் சிலி நாட்டின் அரசியலமைப்பு சபையின் 50 % உறுப்பினர்களாகப் பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். பூர்வகுடி மக்களுக்கு இட ஒதுக்கீடு (17 இடங்கள்) வழங்கப்பட்டு உள்ளது.

1990 களில் தொடங்கி ஏறக்குறைய 30 ஆண்டுகளாக சிலியில் புதிய தாராளமய பொருளாதாரக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் விளைவுகளாக தனியார்மயம், ஏற்றத்தாழ்வுகள், வேலையின்மை மற்றும் அரசியல் சச்சரவுகள் தொடர் கதைகளாகி விட்டன. ஆட்சியாளர்களுக்கு எதிரான போராட்ட இயக்கங்கள் வெடித்தன.

2011ஆம் ஆண்டு ஒரு மாபெரும் போராட்டம் தொடங்கியது. இலவசமாக கல்வி வழங்கப்பட வேண்டும் எனக் கோரி கல்லூரி வளாகங்களை மாணவர்கள் முற்றுகையிட்டனர். போராட்டக் களத்தில் முன்னணி வீரனாகத் திகழ்ந்தார் 25 வயதேயான கேப்ரியல் போரிக். அவரது போராட்ட வாழ்க்கை தொடர்ந்தது. 2019ஆம் ஆண்டு சிலி முழுவதும் பல்வேறு பிரச்சனைகளை முன்வைத்து கிளர்ந்து எழுந்த மாபெரும் ஆர்ப்பாட்டங்களில், அவர் துடிப்புமிக்க செயல்வீரராகக் களம் கண்டார். இந்தப் போராட்டங்களின் விளைவாக, ஒட்டுமொத்த அரசியல் அமைப்பையும் மாற்றியமைக்க வேண்டும் என்ற அரசியல் வளர்ச்சிப் போக்கு உதயமானது. அதன் நீட்சியாக, புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்கான கோரிக்கையும் எழுந்தது.

செபஸ்டியன் பினேரா தலைமையிலான அரசாங்கம் மக்கள் எழுச்சியின் காரணமாக வேறு வழியின்றி அரசியலமைப்பு சட்டத்திற்கான கோரிக்கையை ஏற்றது. அரசாங்கத்தின் இந்த முடிவானது, இடதுசாரிகள் தலைமையிலான சமூக அரசியல் போராட்ட இயக்கத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகவே அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

கடந்த 2020 அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற தேசம் தழுவிய அளவிலான வாக்கெடுப்பில் புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்கு பெருவாரியான மக்கள் ஆதரவு தெரிவித்தனர். சிலி கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட இடதுசாரி கட்சிகளின் கூட்டணி வேட்பாளராக அதிபர் தேர்தலில் கேப்ரியல் போரிக் வெற்றிபெற்று விட்டதால், புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கும் பணி மேலும் செம்மையுறும் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் வருங்காலத்தைத் தீர்மானிக்கப் போகும் இந்த தேர்தல் முடிவுகள் கேப்ரியல் போரிக் தலைமையில் புதிய அத்தியாயத்தை விரைவில் தொடங்கி வைக்கும் என்று இடதுசாரிகள் ஆவலுடன் எதிர்நோக்குகிறார்கள்.

**சூடான் நாட்டு அரசியல் வரலாற்றில் டிசம்பர் 19 சிறப்புக்குரியதாக உள்ளது. அந்நாளில் தான், பிரிட்டீஷ் காலனி ஆட்சியில் இருந்து சூடான் சுதந்திரம் அடைந்தது.**



# சூடான் அரசியல் வரலாற்றில் டிசம்பர் 19

ஓமர் அல் பஷீரின் 30 ஆண்டுகால ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்கான மக்கள் போராட்டங்கள் 2018 ம் ஆண்டு டிசம்பர் 19 அன்று தொடங்கியது. முடிவாக, மக்கள் எழுச்சியின் முன் அல் பஷீரின் அதிகாரம் தோல்வியுற்றது. இந்த நிகழ்வின் மூன்றாவது ஆண்டை நினைவுகூறும் வகையில் கடந்த டிசம்பர் 19 அன்று தலைநகர் கர்தூமில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்ற பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் பங்கேற்ற போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர்.

ராணுவ ஆட்சியின் பொறுப்பில் இருக்கும் ஜெனரல் புர்ஹானை வீழ்த்துவோம் என்று மக்கள் தொடர்ந்து முழக்கமிட்டுப் பேரணியைத் தொடர்ந்தனர். போராட்டங்கள் தீவிரமடைந்து வருகின்றன. போராட்டங்களைத் தொடருமாறு சூடான் கம்யூனிஸ்ட் கட்சி முன்பே அறைகூவல் விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.


டிசம்பர் 26ல்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
அமைப்பு தினத்தில் உறுதி ஏற்போம்!
தோழர் கே.டி.கே. தங்கமணி அவர்களின்
நினைவுகள் என்றென்றும் வாழ்க
தோழர் இரா.நல்லகண்ணு அவர்களுக்கு
இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
வாழ்த்த வயதில்லை வணங்குகிறோம்.
இவண்
AITUC - கிருஷ்ணகிரி மாவட்டக் குழு
Lokesh Creation
9043577144


SPB
Seshasayee Paper and Boards Limited
Fine Papers - LasTing Impressions
Unit : TIRUNELVELI
Elanthaikulam, singamparai Post - Mukkudal (via)
Tirunelveli District - Tamilnadu - India. Pin - 627 601
Tel : 91 4634 - 275201 to 204 Fax : 91 - 4634 - 275200

**JANASAKTHI** Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 31.12.2021 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57




Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.